
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஆவணி
260ஆவது மலர்
2019
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.**

**பொருள் :** வடிவால் நேரானதாயினும் அம்பு செயலாற் கொடியது; தண்டு வளைந்ததாயினும் யாழ் செயலால் இனியது; அவ்வகையே தவஞ் செய்வோரையும் கொடியர் நல்லவரென்ற வேறு பாட்டை அவரவர் வடிவாற் கொள்ளாது செயல்களால் அறிந்து கொள்ள வேண்டும். (279)

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.**

**பொருள் :** தவத்திற்கு ஆகாவென்று உயர்ந்தோர் விலக்கிய ஒழுக்கங் களை நீக்கிவிடின் தவஞ் செய்வார்க்குத் தலை மயிரை மழித் தலும் வளர்த்தலும் ஆகிய வேடங்கள் வேண்டா. (280)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

இலங்கையானே

**கலிவிருத்தம்**



மதியும் நதியும் வைத்த சென்னியன்
விதியு மரியு மறியா விமலன்
துதிசெ யடியார் துன்பந் தீர்ப்பவன்
மதில்சே ரிலங்கை மாநக ரானே. 01

நீருங் காலும் நிலனுந் தீயும்
ஆரும் வானு மம்புவி கதிருஞ்
சீருந் திருவுஞ் சிறப்பு முடையான்
நேரு மிலங்கை நெல்வய லானே. 02

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு - 3

சுடர் - 260



2019 **பொருளடக்கம்** ஆவணி


| | | |
|---|---|---|
| அருநெறியும் பெருநெறியும் | திருமதி சி. சறோஜினிதேவி | 01 -02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 -06 |
| உலகம் ஒரு கோயில் | திருமதி ந. பரமேஸ்வரி | 07 -10 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 11 -13 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 14 -16 |
| பக்திப் பாசுரங்கள் காட்டும்... | க. சிவசங்கரநாதன் | 17 -18 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 19 -20 |
| யாழ் வடமராட்சியில்... | கே. யோகேந்திரன் | 21 -24 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 25 -26 |
| அருள் பாலித்து புகழ் ஏந்தி... | பு. கதிரித்தம்பி | 27 -28 |
| ஔவையாரின் பாடற் சிறப்பு | மூ. சிவலிங்கம் | 29 -32 |
| தென் இந்திய திருத்தல யாத்திரை | ஆ. சிவநாதன் | 33 -39 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 40 -42 |
| உருவங்கள் மாறலாம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 43 -44 |
| சந்நிதியான் ஆச்சிரமம் | தொகுப்பு | 45 -49 |
| உற்சவகால நிகழ்வுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 50 -51 |
| மயில்வாகனம் சுவாமிகளின்... | வல்வையூர் அப்பாண்ணா | -52 |
| சந்நிதி அப்பன் | செல்லத்துரை சுவாமிகள் | -53 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 54 -56 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 259ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்ற இருந்த பேராதனை பல்கலைக்கழக மாணவி செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள் வருகை தராததனால், ஞானச்சுடரின் மலர் வெளியீட்டுக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கி வருபவருமாகிய திரு கு. அப்பாத்துரை (அப்பாண்ணா) அவர்கள் வெளியீட்டுரையினை வழங்கினார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளின் தன்மைபற்றி எடுத்துக் கூறியதோடு, ஞானச்சுடர் மலரின் காத்திரத்தன்மை மேன்மேலும் மிளிர்ந்து வருவதையிட்டும், அதற்குக் காரணமாயுள்ள ஆக்கங்களை வழங்குவோரும் சந்நிதி வேலவனும்தான் காரணம். அவன் அருள் ஆட்சியினால்த்தான் இங்கே இடம்பெறும் அனைத்துப் பணிகளும் சீராக நடைபெறுகின்றது என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஆடி மாத ஞானச்சுடர் மலருக்காகிய மதிப்பீட்டுரையினை ஆசிரியையும் சைவப்புலவருமாகிய திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

திருமதி சசிலேகா அவர்கள் ஞானச்சுடர் ஆரம்ப காலம் தொட்டு மலரைப் பெற்றுக் கொள்ளும் வாசகியாகவும், மலருக்குக் கட்டுரை வழங்குவதில் முன் நிற்பவராகவும், பலமுறை பேரவையினால் கௌரவிக்கப்பட்டவரும், ஆச்சிரமச் செயற்பாட்டில் முன் நின்று செயற்படுபவராகையால் அவர் தனது மதிப்பீட்டுரையை அடியார்கள் பலரும் உணர்ந்து கொள்ளும் வகையில் சிறப்பாக மேற்கொண்டார்.

புனிதமான ஆசிரியத் தொழில் மேற்கொள்வதனால் மாணவர்களுக்கு ஆசிரியர் எப்படி கல்வி கற்பிப்பாரோ அவ்வகையான முறையில் மலரில் இடம்பெற்ற கட்டுரையின் தன்மை பற்றியும் அதனோடு இணைந்த தனது அனுபவங்களையும் சபையில் வீற்றிருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறி சபையோரது பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டார்.

இங்கே இடம்பெறும் சகலவிதமான பணிகளுக்கும் சந்நிதி வேலவன்தான் துணை என்று கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

"கோயில்" என்றால் சிதம்பரத்தைக் குறிப்பதுபோலச் "சந்நிதி" என்றால் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதியையே குறிக்கும். ஈழத்துத் திருச்செந்தூர் என்று போற்றப்படும் திருத்தலமாகச் சந்நிதி முருகன் ஆலயம் திகழ்கின்றது. பழமையும் பெருமையும் மிக்க இத்தலமானது கந்தபுராணத்து வரலாற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

முருகப் பெருமானது தூதுவராக சூரனைச் சந்திப்பதற்கெனத் திருச்செந்தூரில் இருந்து மகேந்திரபுரிக்கு வருகை தந்த வீரவாகு தேவர் இங்கு தங்கி முருகப்பெருமானை வழிபட்டதாக ஆலய வரலாறு செப்புகின்றது. ஆலயத்தின் தல விருட்சமாகப் பூவரசு மரம் காணப்படுகின்றது. ஐராவசு எனும் முனிவர் மரத்தடியில் இருந்து முருகனை வழிபட்டு சமாதி அடைந்த இடமாகையால், சந்நிதி வேலவனை வழிபட வரும் அடியார்கள் இவ்விடத்தில் அமர்ந்து பிரார்த்தனை, தியானம், கூட்டு வழிபாடு ஆகியவற்றில் ஈடுபடுவதை இன்றும் காணலாம்.

பக்தன் இறைவனோடு நேரடியாகத் தொடர்புகொண்டு வணங்கும் ஆலயம் ஆகவும் வழிபடவரும் அடியவர்கள் அன்பின் மிகுதியினால் உரிமை உணர்வோடு முருகனை வழிபடும் தலமாகவும் சந்நிதி ஆலயம் மிளிர்கின்றது. ஏழை பங்காள னாகத் திக்கற்றவர்களுக்கு திசை காட்டும் தெய்வமாகவும், தஞ்சம் என வந்தோர்க்கு ***"அஞ்சேல்"*** என்று அபயகரம் காட்டிக் காப்பாற்றும் காவலனாகவும், பசிப்பிணி போக்கும் மருத்துவனாகவும், உளநோய் தீர்க்கும் உளவியலாளனாகவும், பாவ வினைகள் அறுக்கும் பரம கருணாநிதியாகவும் சந்நிதி வேற் பெருமான் தன்னை நாடிவரும் அடியவர்களின் வினைகளைக் களைந்து வியாகூலம் அறுக்கும் தெய்வமாக விளங்குகின்றான்.

சந்நிதி ஆலய உற்சவ காலங்களிலும், அடியார்கள் மிகுதியாக ஆலய வீதியில் கூடும் காலங்களிலும் தானும் அடியவர்களில் ஒருவராக உலா வருவதாக சந்நிதி முருகனின் கூற்றுக்கமைவாக பிரதி வெள்ளிதோறும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அறுபத்துமூவர் குருபூசையின்போது சந்நிதி முருகனையும் உள்ளடக்கி அறுபத்துநான்கு வாழை இலை போட்டு, அறுபத்துநான்கு அடியாரை இருத்தி பூசை வழிபாடு இயற்றுவதை இன்றும் காணலாம்.

இத்தகைய சக்திமிகு சந்நிதி வேலவனது வருடாந்த மகோற்சவம் நடை பெறுகின்றமையால் முருகன் அடியார்கள் யாவரும் அவன் அருளைப் பெறும் வண்ணம் இங்கே கூடுகின்றார்கள். வரும் அடியவர்கள் யாவரும் வழிபாட்டுக்குகந்த வகையில் வருகைதந்து ஏழை பங்காளனை வணங்கி அவன் அருள் பெற்று உய்வோமாக.

*"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"*

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 15. புய வகுப்பு

அசைவற நினையு மவர்பவ மகலவெ மேல்வரு
காலதூதரை யுடையு மப்படி
யங்கு மிங்கு மெங்கு மோடத் துரந்தன
அகிலமு மெனது செயலல திலையென யானென
வீறு கூறி யறவுமி குத்தெழு
மைம்பு லன்றி யங்கி வீழத் திமிர்ந்தன
அனலெழு துவச முடுகுல முதிரவி யோகமு
மேழு பாரு மசலமு மிக்கபி
லங்க ளுங்கு லுங்க வாலித் ததிர்ந்தன
அடனெடு நிருதர் தளமது மடிய வலாரிதன்
வானை யாள அரசுகொ டுத்தப
யம்பு குந்த அண்ட ருரைப் புரந்தன
அடவியில் விளவு தளவலர் துளவு குராமகிழ்
கோடல் பாட லளிமுரல் செச்சைய
லங்கல் செங்க டம்பு நேசித் தணிந்தன
அரியதொர் தமிழ்கொ டுரிமையொ டடிதொழு தேகவி
மாலை யாக அடிமைதொ டுத்திடு
புன்சொ லொன்று நிந்தி யாமற் புனைந்தன
அழகிய குமர னுமைதிரு மதலை பகீரதி
மாதர் வாழு மறுவர் ப்ரியப்படு
கந்த னெந்தை யிந்த்ர நீலச் சிலம்பினன்
அநுபவ னநக னனனிய னமல னமோகன
நேக னேக னபினவ னித்திய
னஞ்ச லென்ப்ர சண்ட வாகைப் புயங்களே.

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**

(லண்டன்)

**Dr. G. பவானி**

(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S.S. றஜீந்திரன்**

(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**சி. சிவமூர்த்தி**

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**அ. சிவகுமார்**

(யாழ்ப்பாணம்)

**A. நாகரெத்தினம்**

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**

(சட்டத்தரணி, நவிண்டில்)

**திருமதி கௌரி சுரேசன்**

(ஆசிரியர், ஆவரங்கால்)

**செ. கந்தசாமி**

(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

**நா. சிவசிதம்பரம்**

(கோணாவளைலேன், கொக்குவில்)

**இராசையா தங்கவேல்**

(அச்சுவேலி)

**S. அருளையா**

(கொழும்பு)

**ச. பத்மநாதன்**

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**க. தெய்வேந்திரம்**

(பண்டத்தரிப்பு)

**தே. தேவராஜேந்திரன்**

(திகிரி லேன், தும்பளை)

**பொ. நாகலிங்கம்**

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

**முத்து கணேஷ்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**

(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**

(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**

(பண்ணாகம், சுழிபுரம்)

**சி.து. கலைச்செல்வம்**

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**தலைவர்**

(வாழ்வகம், சுண்ணாகம்)

வை.ச. பரஞ்சோதி

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

ச. ஸ்ரீவிவேகானந்தராசா

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

சீ.சி. கந்தையா (பலாலி)

(ஆவரங்கால்)

சி. முருகதாஸ்

(சிறுப்பிட்டி தெற்கு)

T. தியாகலிங்கம்

(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)

S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்

(மானிப்பாய் தெற்கு)

இ. தயாபரன்

(கோண்டாவில்)

S. சாம்பவி

(யாழ்ப்பாணம்)

செ. தர்மலிங்கம்

(சாவகச்சேரி)

திருமதி தி. பரமேஸ்வரி

(ஆனைக்கோட்டை)

S. பொன்னம்பலம்

(சுண்ணாகம்)

ப. திருக்குமரன்

(அமுதசுரபி, கட்டுடை)

சி. நவரெத்தினம்

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

சி. சுப்பிரமணியம்

(சமரபாகு, உடுப்பிட்டி)

**சிறி மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ந. பொன்னுத்துரை**

(தொம்பை வீதி, உடுவில்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**சு. சிவராசா**

(கொக்குவில்)

**வ. சிவலிங்கம்**

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(அச்சுவேலி)

**வே. இராஜேந்திரா**

(ஆவரங்கால்)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)

# அருநெறியும் பெருநெறியும்

– **திருமதி சறோஜினிதேவி சிவஞானம்** அவர்கள் –

திருஞானசம்பந்தர் பெருமான் இவ் உலகில் அவதரித்ததுடன் சைவசமயத்தின் மறுமலர்ச்சிக் காலம் உதயமானது. அத்தோடு தமிழ்மொழிக்கும் விடிவுகாலம் ஏற்பட்டது எனலாம். திருப்பதிகப் பெருநெறியால் வளம் நிறைந்த தீந்தமிழும் மலர்ச்சி பெற்றது. இதனாலேயே திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியவர்கள், "திருப்பதிகப் பெருவழித் தமிழை தொடக்கியவர் ஞானசம்பந்தப் பெருமான்" என்று கூறியுள்ளார். இது திருப்பதிகத் தமிழ்நெறியானது மலர்ந்து நின்ற காலம் எனலாம். பெருநெறி வழியில் முதல் நெறியானது அன்பு நெறியேயாம். அன்பு நெறியின் முதற்படி அரியனவற்றைக் கேட்கும் அரியனவற்றைப் போற்றும் மறைநெறியேயாம். மறைநெறி முதல் நெறியாக நிற்க இசையுடன் ஏற்றித்தொழும் பக்தி நெறியாக அதன் இரண்டாம் படிநிலையாய் இசையுடன் தமிழ் வேதம் அமைந்தது. அன்பின் முதிர்வில் மலர்வதுதான் அருள்நெறியாகும். அருள் நெறியே திருநெறியே தமிழ்நெறியாகவும் மலர்ந்து தமிழின் மேம்பாட்டுக்கும் வழிவகுத்தார் ஞானசம்பந்தப் பெருமான். எனவே பதிகம் பெருவழி பிறப்பதற்கும், பதிகப் பெருவழி தமிழ் என்று போற்றப்படுவதற்கும், அருள்நெறியும் அருநெறியும் பெருநெறியும் மலர்வதற்கும் முதலாவது அருளாளராய் உதித்தவர் ஞானசம்பந்தப் பெருமானேயாம்.

முதலாவதாக அவரின் பாலறாவாயால் தோன்றிய முதலாவது பதிகத்திலேயே அவர் பாடிய திருக்கடைக்காப்பில் அருநெறிய மறைவல்ல முனியகன். பெருநெறிய பிரமாபுரமேவிய "பெம்மான் இவனன்றே" என்றார். அருமை மிகுந்த திருப்பதிகச் செம்மை நெறியாகிய நெறி அன்பு நெறியுடனேயே தொடங்கப்பட்டுவிட்டது. அருநெறியும் பெருநெறியும் இணைந்த இணைப்பே ஒரு நேரிய மக்கள் மனம் வைத்துணரும் நிலையாகும். அன்பு நெறியை உணர்ந்து உணர்ந்து உய்தி பெறவும் முடியும். இவ் உலகினர் உய்திபெறும் பொருட்டு ஞானசம்பந்தப் பெருமான் மறைநெறிக்குத் துணையாக நின்று உலகில் பெருநெறியை இன்னிசையால் பரப்பினார். உலகில் அன்புநெறி தழைத்தோங்கவும் அருள் நெறிக்குத் துணையாக நின்று பெருநெறியை சகல உயிர்களும் பெறவும் பெருநெறிக்கு திருமுறையால் வழிகாட்டினார். இசைக்கு இசைபவன் இறைவன். இசைக்கு இனிதாக இசைந்து நின்று அருள்பாலிப்பான் என்பது பக்தி உலகில் தெளிந்த துணிவு ஆகும்.

இவ் உலகிலேயுள்ள தனது தாய் தந்தையரைக் கடந்து அதாவது தந்தை சிவபாதவிருதயர், தாய் பகவதி அம்மையைக் கடந்து யாவர்க்கும் சகல உயிர்களுக்கும் தாய் தந்தையாய் விளங்கும் பெம்மான் இவன் அன்றே என்று தனது சுட்டுவிரலால் சிவனைச் சுட்டிக்காட்டினார். உமை அம்மையின் திருமுலைப்பாலை அன்னை ஊட்ட ஞானவரதமுண்ட பேறினால் "தோ" என்ற ஓங்கார ஓசையுடனே பதிகப்பெருவெளி

*நல்ல ஒழுக்கம் உடையவர்கள் விரும்புவதை எல்லாம் இறைவன் அளிப்பான்.*

தோன்றத் தொடக்கினார். "தோ" என்ற ஓங்கார மங்கல ஓசையுடனேயே சைவ உலகினர்க்கு திருப்பதிகப் பெருவழி தோன்றியது.

இன்னிசையால் தமிழ் பரப்பி பன்னிரு திருமுறைத் தொகுதிகளையும் இறைவன் தன் திருச்செவியால் கேட்டு இன்புறும் நிலையினைத் தோன்றச் செய்தார். அனைத்து உயிர்களும் பரம்பொருளை துய்த்து மகிழும் நிலையையும், பரம்பொருள் திருப்பதிகங்களை தன் திருசெவி இனிக்கக் கேட்டு மகிழ்ந்து அந்த மகிழ்வினால் உயிர்களுக்கு அருளாய் பொங்கிப் பொலிகின்ற நிலையையுமாகிய இரண்டு நிலையையும் சேக்கிழார் பெரியபுராணத் திலே எடுத்துக்கூறுவதைப் பார்ப்போம்.

**எல்லையில்லா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை**
**மல்லல் நெடுந் தமிழால்இம் மாநிலத்தோர்க்கு குறைசிறப்பப்**
**பல்லுயிருங் களி கூரத் தம்பாடல் பரமர்பால்**
**செல்லுமுறை பெறுவதற்குத் திருசெவியைச் சிறப்பித்து.**

(பெ.பு.1973)

திருப்பதிகங்களின் திருப்பாடல்கள் அனைத்தும் சிவனிடம் செல்லுகின்ற வழியினைப் பெறும்பொருட்டு அவர் நாவில் எழுந்தது. இது ஒலியுடன் கூடிய பெருநெறியாகும். வேதநெறி தழைத்தோங்க வந்து திருஅவதாரம் செய்த பெருமானவர்கள் அன்புநெறி, அருள்நெறி, பெருநெறி என்னும் நெறிகளில் நின்று சைவநன்நெறி தழைத்தோங்கவும் பதிகப் பெருவழி பாரிலே சிறந்தோங்கவும் தன்னுடைய முதல் பதிகத்தாலேயே பரமனையே நேரில் காட்டிய பேரருளாளராவார். திருப்பெருகு சிவஞானம் பெற்று தான் உய்தியடைந்து அந்தப் பேரருளி னால் உலகையும் உய்விக்க இவ் உலகிற்கு வந்தார். அம்மை ஊட்டிய திருமுலைப் பாலிலே ஒலியுடன் ஓசையும் கலந்து சிவஞானத்திலே தத்துவம், மந்திரம், இசை நுட்பம் இன்னிசை இன்பம் எல்லாம் ஒன்றாகவே கலந்து ஊட்டப்பட்டு அது அவர் வாயிலாக வெளிவந்தது என்று கூறுவதே மிகவும் பொருத்தமானதாகும்.

மனதை செப்பனிடுவது பக்தி சாதனம். பக்தி சாதனத்திற்கு வழிகாட்டுவதும் வித்திடுவதும் வேதமந்திரங்களின் சாரமாக வந்த பன்னிரு திருமுறைகள். இந்த திருமுறை களைப் பக்தியோடு பாடுவதனால் பரமனின் அருளையும் உயிர்கள் பெறமுடியும். பரமனையும் அவனது அருளையும் சார்வதுதான் பெருநெறியாகும். எமது வாழ்க்கை நெறி சமயம் தழுவியதாக சமயநெறி முறைகளுடன் சேர்ந்ததாக அமைய வேண்டும். நாம் இறையுணர் வோடு வாழவேண்டும்; இறையுணர்வோடு செயற்படவேண்டும். அவ்வாறு செய்யின் ஈற்றில் ஆன்மா இறைவனோடு ஒன்றித்துவிடும் அன்பும் பக்தியுமே பக்திக்கு வழிவகுப்பதாகும். அன்பின் பெருநிலையை எப்படிப்பட்டது என்று திருமூலர் கூறுவதைப் பார்ப்போம்.

**அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**

(திருமந்திரம்)

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 09. ஆனந்த பரவசம்

**89 மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீறறியா மறையோனே**
**தேனே அமுதே சிந்தைக் கரியாய் சிறியேன் பிழை பொறுக்கும்**
**கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுக**
**போனார் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே.**

**ப-ரை:**

மான் நேர் நோக்கி உடையாள் பங்கா- மானினது நோக்கினை ஒத்த நோக்கினை யுடையவளும் எல்லாவற்றையும் உடையவளுமாகிய உமையை ஒரு கூற்றிலுடையவனே; மறை ஈறு அறியா மறையோனே- வேதங்களும் அவற்றின் முடிபாகிய உபநிடதங்களும் உணர முடியாத மறைபொருளாக உள்ளவனே; தேனே- தேன் போன்றவனே; அமுதே- அமுதம் போன்றவனே; சிந்தைக்கு அரியாய்- மனதுக்கும் அறிதற்கரியவனே; சிறியேன் பிழை பொறுக்கும் கோனே- சிறுமையுடையேனாகிய என் குற்றங்களைப் பொறுத்து என்னை ஆட்கொண்டருளிய தலைவனே; சிறிது கொடுமை பறைந்தேன்- ஆட்கொண்டருளிய நின்னைப்; பிரிந்த ஆற்றாமை மிகுதியால் சிறிதளவு கொடுஞ் சொற்களைக் கூறிவிட்டேன்; அடியார் மா சிவநகர் குறுகப் போனார்- நின் மெய்யடியார்கள் பெருமையையுடைய சிவபுரத்தை அணுகச் சென்றார்கள்; யானும் பொய்யும் புறமே போந்தோம்- யானும் பொய்யாகிய உடலும் அதற்குப் புறம்பான வழியிற் போனோம், அடியார்கள் போனவழியிற் போக அருள் செய்ய வேண்டும்.

உடையாள் பங்கா, மறையும் மறையின் ஈறும் அறிய முடியாத மறையோனே, தேனே, அமுதே, சிந்தைக்கரியவனே சிறியேன் பிழை பொறுக்கும் கோனே, நின்னைப் பிரிந்த ஆற்றாமை மிகுதியால் சிறிது கொடுஞ் சொற்களைச் சொல்லிவிட்டேன்; மெய்யடியார்கள் சிவமாநகர் குறுகப் போனார். யானும் பொய்யாகிய உடலும் அதற்குப் புறம்பான வழியிற் போனோம். அவர் போன வழியிற் போக அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

"மானேர் நோக்கி உடையாள்" என்றது உமையம்மையை. "மானேர் நோக்கி மணாள போற்றி" (போற்றி 135), "மானேர் நோக்கி உமையாள்" (சத 55), "மானேர் நோக்கி மணவாள" (குழைத்4), "உடையாள் உன்றன் நடுவிற்கும்" (கோயில் மூத்1) என வருவன காண்க. உடையாள்- எல்லாவற்றையும் உடையாள் திருக்கோவை 257 பேர். இனி

எம்மை யாளாகவுடையாள் எனினுமாம். "எம்மையாளுடையா ளிட்டிடையின்" (திருவெம்16) என வருதலுங் காண்க.

மறை ஈறு- மறையும் ஈறும் என உம்மைத்தொகை. வேதங்களும் அவற்றின் முடிவாகிய உபநிடதங்களும் என்றபடி. மறைஈறு அறியா என்பதற்கு வேதமும் முடிவை அறியாத எனினுமாம். மறையோன்- மறைபொருளாயுள்ளவன், அந்தணன். கோவை 218பேர் இறைவன் தேன் போலவும் அமுதம் போலவும் இனிமை பயக்குந் தன்மை பற்றித் தேனே அமுதே என்றார். "தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்" (ஏசற 10) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. அமுது போற் கழிபெருஞ் சுவையோடுறுதி பயத்தலுடையவனே என்பார், அமுதே என்றார் எனினுமாம். மனங்கழிய நின்றமையின் இறைவனைச் சிந்தைக் கரியாய் என்றார். "சிந்தைக் கரிய சிவமே போற்றி" (போற்றி 204), சிந்தையாலும் அறிவருஞ் செல்வனே" (சத 47) என அடிகளும், "அறிவறிய சிந்தையானை" (280:9) என அப்பரடிகளும் அருளியமை காண்க. சிந்தைக்கரியாய் என்றதனால் வாக்குக்கும் அரியவன் என்பதும் கொள்க. "சொல்லற் கரியானை" (சிவபுரா 92), "சொற் கழிந்தவனே" (நீத் 43), "சொற்பதங் கடந்த அப்பன்" (அச்சப் 6) என வருவனவுங் காண்க.

சிறிதே கொடுமை பறைந்தேன் அதனைப் பொறுத்தருள வேண்டுமென்பார், "சிறியேன் பிழை பொறுக்கும் கோனே" என்றார். "வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பொறுமையினாற் பொறுப்பவனே" (அடைக் 2) "பேயேன துள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனை" (கோத் 12) என வருவன காண்க. "அத்தா வுன் னடியேனை யன்பாலார்த் தாய்..... பேயேனாயேன் பிழைத்தனகளெத்தனையும் பொறுத்தாயன்றே" (தே. 308,8) என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க.

கொடுமை- கடுஞ்சொல். பறைதல்- சொல்லுதல். "ஒன்றிய இலைப் பூச்சூட்டி ஊட்டி முன் பறைந்தோர் பார்ப்பான் அன்றிது செய்யான்" (பெரிய கண்ணப்ப 109) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அல்லல் பறையேன் (சுந் 15:6) என்பது தேவாரம். அடிகள் சிறிதே பறைந்த கொடுமை இறைவனைப் பிரிந்த ஆற்றாமை மிகுதியால் தோன்றியனவாகும். அவை:

"விச்சுக் கேடு பொய்க் காகா தென்றிங் கெனை வைத்தாய்"

சத 81.

"அடியேன் அல்லேன் கொல்லோ தான் எனை ஆண்டிலை கொல்லோ"

சத 83.

"பாணே பேசி என்றனைப் படுத்த தென்ன பரஞ்சோதி"

சத 84.

"அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி
இங்கெனை இருத்தினாய் முறையோ"

சத 93.

என்பன போல்வனவாகும். அடிகள் இறைவனைப் பிரிந்தாற்றாமை "உன்னை இனிப் பிரிந்தாற் றேனே" (எண்ணப் 4) என்பதினாலுமறியப்படும்.

*உள்ளத்தின் சிறந்த நலன்களை நாடுங்கள் மற்றவை தாமாக வந்து சேரும்.*

இறைவன் ஞானாசாரியனாய் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டருளி மறைந்தபின் அவ்விறைவன் கட்டளைப்படி அடியார் பலரும் திருப்பெருந்துறையின் கண்ணுள்ள ஒரு பொய்கையில் ஒளிப்பிழம்பு தோன்ற அதன் கண் மூழ்கி மறைந்தனராதலின் "சிவமா நகர் குறுகப் போனார் அடியார்" என்றார். "எழுந் தழல் விளைந்த போதில் யாவரும் தடத்தினூடு விழுந்து பின்னெய்தி நம்பால்" எனத் திருவாதவூரடிகள் புராணத்து (மண் சுமந்த 86) வருதலுங் காண்க. அடிகளைச் சில காலம் நிலவுலகில் இருக்கப் பணித்தமையின், "யானும் பொய்யும் புறமே போந்தோம்" என்றார். "புறமே போந்தோம் பொய்யும் யானும்" (சத 86). பொய்- பொய்யாகிய உடம்பு உடலோடு இருக்க நேர்ந்தமை பற்றி "யானும் பொய்யும் புறமே போந்தோம்" என்றார்.

"அருளா ரமுதப் பெருங்கடல் வாய் அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை யிது பொறுத்தே எய்த்தேன்"

பிரார்த் 3.

என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. இதன்கண், யான் பறைந்த கொடுமையைப் பொறுத்து நின் அடியார் போன நெறிக்கண் யானும் போக அருள வேண்டுமென்பது போதருதலின் ஆனந்தப் பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

**90 புறமே போந்தோம் பொய்யும் யானும் மெய்யன்பு**
**பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன் யான்**
**அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன் றறியாதார்**
**சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தாரே.**

**ப-ரை:**

சிவனே- சிவபெருமானே; நின்னை அற சேர்ந்த அடியார்- நின்னை முற்றும் வந்தணுகிய மெய்யடியார்கள், மற்று ஒன்று அறியாதார்- நின்னையன்றிப் பிறிதொன்றனையும் அறியாதவராய்; சிறவே செய்து வழி வந்து நின் தாள் சேர்ந்தார்- சிறந்த தொண்டுகளைச் செய்து நினது செந்நெறிக்கண் வந்துநின் திருவடிகளை அடைந்தனர். யான் மெய் அன்பு பெற வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்- யானோ நின்னை அடைதற்கேதுவான மெய்யன்பைப் பெறுதற்கு ஆற்றலுடையேனல்லாத தன்மையைப் பெற்றுள்ளேன்; யானும் பொய்யும் புறமே போந்தோம்- ஆதலால் யானும் பொய்யாகிய உடம்பும் நின்னை அடையும் நெறியில்லாத புறநெறியிற் போனோம்.

சிவனே நின்னை முற்றும் வந்து அணுகிய மெய்யடியார் நின்னையன்றிப் பிறிதொன்றினையும் அறியாராய்ச் சிறவு செய்து வழிவந்து நின் திருவடியை அடைந்தனர். யானோ நின்னை அடைதற்கேதுவான மெய்யன்பைப் பெறுதற்கு ஆற்றலுடையேனல்லாத தன்மையைப் பெற்றுள்ளேன்; ஆதலால் யானும் பொய்யும் புறமே போந்தோம்; நின்தாள் சேர்தற்கு யான் இனிச் செய்யத்தக்கது யாதுமில்லை; நீ இரங்கியருள வேண்டும் என்பதாம்.

யானும் பொய்யும் புறமே போந்தோம் என மொழி மாற்றிக் கூட்டுக. யானும் பொய்யும் புறமே போந்தோமே (சத 86) என வருதலுங் காண்க. புறம்- திருவடியை எய்தும் வழியல்லாத வழி. மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன் என்றது மெய்யன்பினைப் பெறவல்லேனல்லாத தன்மையினை அடைந்தேன் என்றவாறு இங்ஙனம் கூறியது உடனே கதிகிடையாமல் மெய்யன்பு தமக்கில்லை என்பது கருதிப் போலும். யான் மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றுள்ளேனாதலால் யானும் பொய்யும் புறமே போந்தோம். அதனால் நின்னை அடைதற்குரிய மெய்யன்பைப் பெறும் ஆற்றலின்மையே நின்னை அடைதற்குத் தடையாகவுள்ளது போலும் என்பது அடிகள் கருத்து.

அற- முற்றும். "வகையறச் சூழாதொழுகின்" (குறள் 465) என்புழிப்போல. அடியார் என்றது மெய்யடியார்களை. அவர்கள் இறைவனையே யன்றிப் பிறிதொன்றனையும் பற்றுக் கோடாகக் கருதாமையின் "மற்றொன்றறியாதார்" என்றார். அறியாதார்- முற்றெச்சம். அடியார் மற்றொன்றறியாதாராய்த் தாள் சேர்ந்தார் என முடிக்க சிறவே என்றது இறைவன் திருவடியை அடைதற்குரிய சிறந்த தொண்டுகளை உணர்த்தியது.

இதன்கண், நின்தாள் சேர்தற்குச் செய்யத்தக்கது யாதுமில்லை; இரங்கி யருள வேண்டும் என்பதனால் ஆனந்தப் பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 86.

(தொடரும்...

## பிரச்சனைகளை ஒதுக்கி வையுங்கள்

ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தார். மேஜை மீதிருந்த கண்ணாடி டம்ளரை எடுத்து தூக்கிக் காட்டினார். "இது எவ்வளவு எடை இருக்கும்?" 100 கிராம், 50 கிராம் என்று மாணவர்கள் ஆளாளுக்கு ஒரு எடையைச் சொன்னார்கள்.

"இதோட சரியான எடை எனக்கும் தெரியாது. ஆனால், என்னோட கேள்வி அதுவல்ல" ஆசிரியர் தொடர்ந்து, "இதை அப்படியே நான் கையிலே பிடிச்சிக்கிட்டிருந்தால் என்ன ஆகும்?" "ஒன்றும் ஆகாது" என்றனர் மாணவர்கள். "சரி. ஒருமணி நேரம் இப்படியே பிடிச்சிக்கிட்டிருந்தால்...." "உங்க கைதான் வலிக்கும்". "ஒருநாள் முழுக்க இப்படியே வைத்திருந்தால்...." "உங்க கை அப்படியே மரத்துப்போயிடும்".

ஒரு மணி நேரத்துலே என் கை வலிக்கறதுக்கும், ஒரு நாளிலே மரத்துப்போகிற அளவுக்கு மாறுறதுக்கும் இந்த டம்ளரோட எடை கூடிக்கிட்டே போகுமா என்ன?" "அது வந்து..." என்று மாணவர்கள் பதில் சொல்லத் தெரியாமல் இழுத்தனர்.

"எனக்கு கை வலிக்காமல், மரத்துடாமல் இருக்க நான் என்ன செய்ய வேண்டும்?" "டம்ளரைக் கீழே வைக்க வேண்டியதுதான்.

"மிகச் சரியாகச் சொன்னீர்கள். இந்த டம்ளர்தான் பிரச்சினை. ஒரு பிரச்சினை நமக்கு வந்தால், அதை அப்படியே நமக்குள்ளே ஏற்றி ஒரு மணி நேரம் வெச்சிருந்தோம்னா வலிக்க ஆரம்பிக்கும். ஒருநாள் முழுக்க அப்படியே வெச்சிருந்தா நம்முடைய மூளைகூட அதையே நினைத்துக் கவலைப்படும். அதனால் நமக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் அதைத் தூக்கி ஒரு ஓரமா வைத்துவிடனும். அதுவாகவே சரியாயிடும். சரிதானே?" என்றார் ஆசிரியர்.

ஆசிரியர் சொன்னது சரிதானே... நாம் எதற்குப் பிரச்சனைகளைத் தூக்கிச் சுமந்துகிட்டிருக்க வேண்டும்?

*உள்ளதைக் கொண்டு திருப்தி அடைந்தவன் உலகத்தில் இல்லை.*

# உலகம் ஒரு கோயில்

– **திருமதி பரமேஸ்வரி நடராஜா** அவர்கள் –

உலகளந்தோன் மருகனே ஓங்காரப் பொருளே
உலகமே அம்மையப்பனென உணர்த்திய குருபரனே
உலகக் கோயிலிலே உறைந்திருக்கும் உமைமைந்தா
உலகுய்ய உனையுணர வைப்பாய் ஐங்கரனே.

உலகம் ஒரு கோயில். நாம் காணுகின்ற ஒவ்வோர் பொருளும் அசைவன, அசையாதன ஆகிய ஒவ்வொன்றும் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவையே ஆகும். இறைவனின் நித்திய தொழிலான ஐந்தொழிலும் இவ்வுலகில் நடைபெறுவதை நாம் கண்கூடாகக் காணலாம்.

புல், பூண்டு, செடி, கொடி, மரம் என்பவற்றிலிருந்து ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற உயிரினங்கள் வரை எல்லாமே இறையருளால் தோன்றுகின்றன; வளர்கின்றன. குறிப்பிட்ட காலவரையறைக்குப் பின் அழிகின்றன. மீண்டும் அதன் விதைகள், விந்தின் சாரத்தால் தோன்றுகின்றன, வளர்கின்றன, அழிகின்றன. இவ்வாறு தொடர்ந்து இறைவனின் நித்திய தொழில் ஓயாது நடைபெற்றுக் கொண்டேயிருப்பதால் உலகம் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. முதன்முதலில் தோன்றியது மரமா? அல்லது விதையா? முட்டை முதலில் வந்ததா? பறவை முதலில் வந்ததா? இப்படி எத்தனையோ கேள்விகள் நம்மிடையே எழுந்துகொண்டேயிருக்கும். இவற்றிற்கு விடை யார் சொல்லுவார்? உலகத் தோற்றத்திற்கு யார் காரணமோ அவரே இதற்கான விடையைச் சொல்ல வேண்டும். ஒவ்வோர் படைப்பிலும் உள்நின்று உறையும் இறைவனே உலகக் கோயிலில் வீற்றிருக்கும் தெய்வமாவார்.

இறைவனின் எண்ணக்கருவிலிருந்தே உலகம் தோன்றியது. இதனை யோகர் சுவாமிகள் "வித்தின்றி நாறு செய்வான் எங்கள் குருநாதன்" என்று அழகாகப் பாடி உள்ளார். ஆகவே உலகின் ஆதிமூலம் இறைவன். இறைவனின் அருட்சக்தியால் தோன்றிய இவ்வுலகம் ஒழுங்காக இயங்க விதிமுறைகளையும் அவ்விறைவனே வகுத்து உள்ளார். இவ்விதிமுறைகள் வேதவாக்கியங்கள் எனப்படுகின்றன. இறைவனின் எல்லாப் படைப்புக்களையும் விட மனிதப் பிறவி உயர்வாகக் கருதப்படுவதற்குக் காரணம் மனித அறிவால் மட்டுமே இவற்றை அறிந்து, உணர்ந்து, அனுபவித்து ஆனந்தம் அடைய முடியும்.

இறைவன் அன்புமயமானவன். உலகத் தோற்றத்தின் மூலவிதை அன்பென்னும் சிவமாகும். இதனோடு கூடவே "ஆசை" என்னும் நச்சு விதையும் தோன்றியது. உலகப் பொருட்களை அனுபவித்து அதன்மூலம் இன்பத்தை நுகரத் தூண்டுவது ஆசை. இவ்வுலகப் பொருட்களை நியாயமான வழியில் எவ்விதம் அனுபவிக்க வேண்டும் என்ற வரையறையை வகுத்துத் தருவது வேத

*நேர்மை இல்லாத கையாள் நேர்மையுள்ள அதிகாரியையும் கெடுத்துவிடுவான்.*

சாஸ்திரங்களாகும். எனவே உலகில் உயர் பிறப்பான மனிதப் பிறவியெடுத்த ஒவ்வொருவரும் இதனை அறிந்திருத்தல் அவசியமாகும். ஆகவே மனிதப் பிறவியெடுத்த ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படைக் கல்வியாகிய வாழ்வியல் கலையாகிய வேதசாஸ்திரங்கள் கற்பிக்கப்பட வேண்டும். அளவுகடந்த, நியாய வரம்பற்ற ஆசையே மிகக் கொடிய நஞ்சாகும். இவ்வாசையைத் தூண்டுவது ஐம்புலன்கள் ஆகும். இவ் ஐம்புலன்களையும் மேலோங்க விடாது தன் அன்பால் அடக்கியாள்பவர் சதா சிவத்தியானத்தில் இருக்கும் சதாசிவம் ஆவார். இவ்வாசையெனும் நஞ்சை அமிர்த மாக்க வல்லது திருவைந்தெழுத்தாகிய "நமசிவாய" இதனை ஓங்காரத்தோடு சேர்த்து உச்சரிக்கும்போது "ஓம் நமசிவாய" என்றாகும். ஓம் நமசிவாய இம்மை நலனுக்கும் ஓம் சிவாயநம மறுமை நலனுக்கும் ஏதுவாக விளங்குவதால் இவ்விரு பதத்தையும் மனத்திற்குள் ஓதிக்கொண்டிருந்தால் ஆசையாகிய நஞ்சு நம்மைப் பாதிக்காது. இது மூல மந்திரம் எனப்படுகின்றது.

இயற்கை எனப்படுவது இயல்பாக (தன்னிச்சையாகத்) தோன்றியது. இயற்கையின் ஒவ்வோர் அம்சமும் இறையம்சம் ஆகும். எனவே உலகின் உரிமையாளன் (சொந்தக்காரன்) இறைவனேயாவார். இவரே உலகைக் காக்கும் காவலனுமாவார். இவரே நியாயமற்ற ஆசை எனும் நஞ்சை அழித்து உலகிற்கு அமிர்தமாகிய அமைதியை, சாந்தியை நல்கும் அருளாளன் ஆவார். உலகிற்கு நல்லறிவையூட்டு முகமாக ஔவையார், திருவள்ளுவர், திருமூலர் மற்றும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற உயர் மனிதர்களை (மகான்களைத்) தோற்றுவித்து அவர்கள்மூலம் உலகநீதியாகிய வாழ்வியற் கலையை உலகிற்கு வழங்கியுள்ளார். இந் நெறிமுறையைக் கற்று அதன்படி வாழ்ந்து வரின் உலகில் அமைதி நிலவும்.

இறைவனோடு இணங்கி இணைந்து இயற்கையை அனுபவிக்கும்போது அவன் அருள் அங்கே புலப்படுகின்றது. இறைவன் எத்துணை அருமையான இரசிகன் என்பதை உணரமுடிகின்றது. இவ்வாறு இறைவனின் அருட்கடாட்சம் வெளிப்படுதலே அருளல் எனப்படுகின்றது. மனிதன் ஆசை வலையில் வீழ்ந்து இறைவனை அவனால் விதிக்கப் பட்ட விதியை மறந்து நான், எனது, எனக்கு என்ற அவாக்கொண்டு உலகை அனுபவிக்க நினைப்பது இறைநீதிக்குக் கட்டுப்படாத தான்தோன்றித்தனமான விலங்கியல் வாழ்வு ஆகும். ஆசை பெருகி இறையறிவை மறைத்தலால் இது மறைத்தல் எனப்படுகின்றது. இதனால் வாழ்வில் பொறாமை, சினம், வெறுப்பு என்பன உண்டாகி அச்சத்தை ஊட்டுகின்றது. இதனால் வன்சொற்கள், வன் செயல்கள் எனும் கொடுமைகள் தலைவிரித் தாடுகின்றன. உலகின் உற்பத்தியாளனை, உடமையாளனை, காவலாளியைக் குருவாயிருந்து வழிகாட்டும் வேதநாயகனை என்றும் மறவாது சிந்தை செய்தலாகிய விழிப்பு நிலையே பேரறிவாகும். இந்நிலையில் எக் கருமத்தைச் செய்ய முனையும்போதும் இறைவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வு மேலோங்குகின்றது. இதனால் செய்யத்தகாத காரியங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். எனவே எடுத்த காரியம் சித்தியாகின்றது. இவ்விழிப்பு நிலையைத் தருவது நீதிநூல்களாகிய அடிப்படைக் கல்வியாகும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க இவை இளமைப் பருவத்தில் ஊட்டி வளர்க்கப்பட வேண்டும். இதுவே குழந்தையின் ஆரம்ப அறிவாகும். பிள்ளைகள் வளர்ந்து வரும்

பருவத்தில் பஞ்சாட்சர செபமும் ஊக்கு விக்கப்பட வேண்டும்.

இறைவன் ஓர் அபூர்வமான, அற்புத மான, அதிசயமான இரசிகன். இதற்கு உதா ரணமாகச் சிலவற்றைப் பார்ப்போம்.

மலர்களில் எத்தனை நிறங்கள். எத் தனை வடிவங்கள். எத்தனை வித்தியாச மான வாசனை. இதேபோல் கனிகளில் எத் தனை வகை ருசிகள், செடி கொடிகளில் எத்தனை விதங்கள் இவையெல்லாவற்றிற் கும் மேலாக உலகில் எத்தனை கோடி மனிதர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் ஒவ் வொருவரையும் வெவ்வேறு தோற்றத்தோடு படைத்த இறைவனின் மகிமையை எவ்வாறு விளக்க முடியும். மரம், செடி, கொடிகளாகிய தாவரங்கள் பெரும்பாலும் பிராணவாயுவை வெளிப்படுத்துகின்றன. ஊனுடம்பெடுத்த மனிதனிலிருந்து மற்றைய உயிரினங்கள் அனைத்தும் கரியமில வாயுவை வெளிப்படுத்து கின்றன. ஆகவே ஊனுடம்பை விடத் தாவரங் கள் மேலானவை. தாவரங்களின் வேர், தண்டு, இலை, பூ, காய், கனி என்பன உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. நிழலாகவும் மூச்சுக் காற்றாகவும் மற்றைய உயிரினங் களுக்குப் பயன்படுகின்றன. தாவரங்கள் சாத்வீக குணமுடையவை. தம்மை முற்று முழுதாகப் பிறர்க்கு ஈயும் தியாகிகள். நாம் தாவர உணவை உண்ணும்போது சாத்வீக குணம் மேலோங்குகின்றது. ஊன் உணவை உண்ணும்போது ரஜோ, தமோ குணங்கள் மேலோங்குகின்றன. நாம் நித்திய சுகம் பெற வும் அமைதியான வாழ்வு வாழவும் சாத்வீக குணம் மேலோங்கிய விழிப்புநிலை ஓங்க வேண்டும். எனவே தாவர உணவை இறை வனுக்கு அர்ப்பணித்து உண்டு நித்திய சுக வாழ்வு வாழ முயற்சிப்போம்.

மனிதர்களுக்கும் மற்றைய உயிரினங் களுக்கும் நலமளித்து சுகம் தரும் மரங்களை நுளம்பு மற்றும் விஷ ஜந்துக்கள் பெருகுவ தாகக் காரணம் காட்டி வெட்டி அழிக்கின் றனர். மரங்களை அழிப்பதால் மழைவீழ்ச்சி குறைகின்றது. வரட்சி உண்டாகின்றது. உல கில் பஞ்சம் ஏற்படுகின்றது. நிழல் தரும் மரங்களை அழித்துவிட்டு வீடுகளுக்கு மின் விசிறிகளையும் குளிரூட்டிகளையும் பொருத் திப் பாவிக்கும் மூடத்தனம் இன்றைய நவீன கால அறிவாகும். மரங்களால் கிடைப்பது சுத்தமான பிராணவாயு. பூட்டிவைத்த வீடு களுக்குள் மனித மூச்சுக்களே திரும்பத் திரும்ப வருவதால் மூச்சு முட்டுதல், மன அழுத்தம், பதட்டம், வெறுப்பு, ஒவ்வாமை போன்ற பலவிதமான நோய்களுக்கும் துன்பங் களுக்கும் ஆளாகின்றனர். மரம் பட்டாலும் விறகுக்காக உபயோகப்படும். மிகப்பெரிய வைரமான மரங்கள் நாளடைவில் நிலக்கரி மற்றும் வைரங்களாகவும் மாறுகின்றன. மனி தன் உயிருடன் வாழும்வரை இயற்கையை நேசித்து தன்னுயிர்போல் மற்றைய உயிர் களையும் நேசித்து அன்பு கருணையோடு பேணுவதோடு நலிவுற்றோருக்கு உதவி வாழ்வதே பெருமையாகும். இறந்தபின் மனித உடல் விறகுக்கும் பயன்படுவதில்லை. இதனை மனிதர்கள் உணர்ந்து உலகிற்குப் பயன்படும்வண்ணம் வாழவேண்டும்.

ஆறு, கடல், மலைகள், காடுகள் இவைகளோடு கூடிய கோயில்கள் சித்தர் கள், ஞானிகள், யோகிகள் வாழ்ந்த வாழு கின்ற இடங்கள் இவைகளில் இறையம்சம் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்விடங் களில் இறைவனின் அருட்சக்தி வெளிப் படையாக உணரக்கூடியதாக இருக்கின்றது. இவற்றைவிட மனித வாழ்வுக்கு வேண்டிய

உணவு, உடை, உற்பத்தி மற்றும் தொழில் நுட்பம் சம்பந்தமான சகல கலைகளிலும் இறைவனின் அருட்சக்தியும் அனுக்கிரகமும் உள்ளுறைந்துள்ளது. எனவே எத்தொழிலைச் செய்தாலும் இறைவனை முன்வைத்து இறைவனின் பணியாக எண்ணிச் செய்யும்போது அது திருப்பணியாகின்றது. கோயிற் திருப்பணிகள், பூசைகள், யாகங்கள், விழாக்கள் எவ்வளவு முக்கியமோ அதேபோல் உலகியல் வாழ்வில் நாம் ஆற்றவேண்டிய கடமைகளும் முக்கியமானவை.

இறைவன் நமக்கு இனாமாகக் கொடுத்த அருங்கொடைகளாவன, 1)தரித்திருப்பதற்கும் மண்வளத்திற்கேற்பப் பயிர்களை வளர்த்து உணவுக்காகப் பயன்படுத்தவும் தந்தது பூமியெனும் நிலமாகும். 2)நிலத்தில் வாழும் உயிர்கள் வாழ்வதற்கு அத்தியாவசியமானது உயிர்மூச்சாகிய பிராணவாயுவாகிய காற்றாகும். 3) தாகத்திற்கு அருந்தவும் சுத்தம் செய்யவும் பயன்படுவதாகிய நீர். 4) உணவு சமைக்கவும், குளிரைப் போக்கவும், யாகம் முதலியவற்றைச் செய்வதற்கும் இருளில் ஒளியைக் கொடுப்பதற்குமாக இறைவனால் வழங்கப்பட்டது அக்கினியாகும். 5) பரவெளியாகிய ஆகாயமோ இவை நான்கினாலும் பாதிக்கப்படாது இவற்றிற்கு ஆதாரமாக விளங்கும் சுத்த சைதன்யமாகும். இவ்வைம்பூதங்களும் இறைவனின் சக்திகள். இவற்றைச் சுயநலத்திற்காக மந்திர தந்திர சக்திகளால் வசப்படுத்தி ஏவல் செய்ய முற்பட்டால் அதன் விளைவுகள் விபரீதமாகும்.

இறைவன் அளித்த இச்சக்திகளை இயற்கை நியதிக்கேற்ப ஒழுங்குமுறையாகப் பயன்படுத்தி அனுபவிக்கும் அறிவைத் தருவது வேத சாஸ்திரங்கள் ஆகும். இவற்றைக் கற்றுத் தெளிவதற்குக் குருவருளும் திருவருளும் இன்றியமையாததாகும். இறைவனின் அனுக்கிரகம் திருவருளாகும். இறைவன் மனித உருத்தாங்கி வந்து வேத சாஸ்திரங்களைக் கற்பித்து வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்து வாழ வைப்பது குருவருள் ஆகும். குருவின் அனுக்கிரகம், ஆசீர்வாதம் இல்லாது எம்மால் எதனையும் கற்றுத் தெளிவாகப் புரிந்துகொண்டு செயற்படுத்த முடியாது.

அழகிய அற்புதமான அதிசயமான இவ்வுலகை இறைவனின் துணையோடு இரசிக்கும்போதுதான் அதன் உண்மைச் சொரூபம் வெளிப்பட்டு ஆனந்தமுண்டாகின்றது. இத்தகைய அற்புத உலகை மனிதன் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள நினைக்கும்போதுதான் துன்பம் உண்டாகின்றது. உலக வாழ்க்கை வெறுமையாகித் துன்பமாகின்றது. இவ்வருமையான உலகைப் படைத்தவனே இதற்கு உரிமையாளன் என்பதை நினைவிற் கொண்டு அவன் அனுமதியோடு இயற்கையுடன் இசைந்து வாழ்வதே இயல்பு வாழ்க்கையாகும். இவ்வுலகக் கோயிலில் ஒவ்வொன்றிலும் இறைவன் ஊடுருவியுள்ளான் என்பதைக் கண்டுகொண்டால் உலக வாழ்வு இன்பமயமானது என்பது புரியும். இவ்வுலகம் அன்பும் அமைதியும் சாந்தியும் நிறைந்த கோயிலாகக் காட்சி அளிக்கும். இவ்வமைதியான வாழ்வு எல்லோருக்கும் கிடைக்கத் திருவருளும் குருவருளும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்போமாக. பிரார்த்தனையில் அன்பும் தூய்மையும் வலிவும் இருந்தால் பலன் நிச்சயம் சாத்தியமாகும்.

**எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லால் வேறொன்றறியேன் பராபரமே"**

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## ராச லீலை (ராஸக்கிரீடை)

கோபியர்கள் முன்பு நோற்ற நோன்புக்கான பலனையளிக்கத் திருவுளம் கொண்டார் கிருஷ்ணர். வனத்துக்குச் சென்று புல்லாங்குழலை இசைத்தார். அந்த இசை கேட்டதுதான் தாமதம், கோபியர்கள் தாம் செய்துகொண்டிருந்த காரியங்களை அப்படியப்படியே போட்டு, வீட்டிலிருந்தவர்கள் தடுத்ததையும் மீறிக்கொண்டு வேணுகானம் வந்த திசையில் ஓடினார்கள். அடுப்பில் பால் பொங்கி வழிவதையும் பாராமல் ஒருத்தி ஓடினாள். குழந்தைக்குப் பால் ஊட்டிக்கொண்டிருந்த ஒருத்தி குழந்தையை இறக்கிப் போட்டுவிட்டு ஓடினாள்.

ஆடை ஆபரணங்கள் குலைய விரைந்தோடி வந்தவர்களைப் பார்த்து கிருஷ்ணர், "இரவு நேரத்தில் இந்தக் கானகத்துக்கு ஏன் ஓடி வந்தீர்கள்? நான் ஓர் ஆண்மகன். பிற ஆடவன் இருக்கும் இடத்துக்கு நீங்கள் வரலாமா? உங்கள் அன்பு எனக்குத் தெரியும். அதற்காக இங்குவரத் தேவையில்லை. எல்லோரும் உங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போங்கள்" என்றார்.



நாங்கள் வீடு, வாசல், குடும்பம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நீயே கதி என்று வந்திருக்கிறோம் நீயும் எங்களைக் கைவிட்டால் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றார்கள். அவர்களின் தூய அன்பையும், திடசித்தத்தையும் அறிந்த கிருஷ்ணர், அவர்களை அழைத்துக்கொண்டு யமுனைக்கரையிலிருந்த அழகிய மணற்குன்றை அடைந்தார். அங்கே அப்பெண்களுடன் இணைந்து விளையாடினார்.

அப்போது அப்பெண்களுக்கு கிருஷ்ணனே தங்களிடம் மயங்கி இருக்கிறான் என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே கிருஷ்ணர் அவர்களின் கர்வத்தைப் போக்க எண்ணி மறைந்தார். அப் பெண்கள் கிருஷ்ணரைக் காணாது துடித்துப் போய்த் தேடினார்கள். செடி கொடிகளையெல்லாம் பார்த்து "நீ என் கிருஷ்ணனைப் பார்த்தாயா?" என்று கேட்டு மதிமயங்கி அலைந்தார்கள். கிருஷ்ணரின் பாதச்சுவடுகளைப் பார்த்து, அதைப் பின்பற்றித் தேடிக் கொண்டு போனார்கள். கூடவே ஒரு பெண்ணின் பாதச்சுவடுமிருந்தது. கிருஷ்ணன்

ஒரு பெண்ணோடு போயிருக்கிறான் என்று பேசிக்கொண்டு போனார்கள். கிருஷ்ணர் ஒரு பெண்ணோடு போனார். இவர்களைப்போல அவளுக்கும் கர்வம் ஏற்பட அவளையும் விட்டு விட்டு மறைந்துவிட்டார். அந்தப் பெண்ணையும் வழியில் சந்தித்தார்கள் தேடிப்போன கோபியர்கள்.

கிருஷ்ணரைக் காணாமல் அரற்றித் துடித்தார்கள். அவர்களின் துயரத்தைப் போக்குவதற்காகக் கிருஷ்ணர் மஞ்சள் பட்டாடையோடு, மலர் மாலைகள் புரள எதிரே தோன்றினார். எல்லோரும் பரவசமடைந்தார்கள். ஒருத்தி அணைத்துக்கொண்டாள். ஒருத்தி கோபித்தாள். ஒருத்தி கரங்களைப்பற்றித் தன் கரங்களோடு சேர்த்துக்கொண்டாள். தாங்கள் கிருஷ்ணரிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கும்போது, தங்களை ஏன் சோதனைக்குள்ளாக்க வேண்டுமென வினவினார்கள்.

பிரிந்து கூடினால் இன்பம் அதிகம் என்றும், அதனால் தான் மறைந்ததாகவும் அழகாகப் பேசி அவர்கள் மனதை இன்னும் மயக்கினார் கிருஷ்ணர். பின்பு அனைவரும் நடனமாடினார்கள். வட்டமாக ஒருவருக்கொருவர் கைகோர்த்துக்கொண்டு ஆடினார்கள். இதுவே ராச நடனம் எனப்படும். கிருஷ்ணர் அவர்களுக்கிடையே நுழைந்து நுழைந்து ஆடினார். இதனைக் காண விண்ணவர்கள் வானில் கூடினார்கள்.



ஒவ்வொரு கோபிகைகளும் தன்கூட கிருஷ்ணர் ஆடுவதாகவே நினைக்கும்படி அத்தனை பேருடனும், அத்தனை கிருஷ்ணர்களாகி ஆடினார். எல்லோரும் ஆடி ஆடிக் களைத்தபின் நதியில் இறங்கி ஜலக்ரீடை செய்தார்கள். பிரம்ம முகூர்த்தம் வந்ததும் எல்லோரும் கோகுலத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஒவ்வொரு கோபியருடனும் நடனமாடியபோது கிருஷ்ணருக்கு ஐந்து, ஆறு வயது. மகத்துவம் வாய்ந்த ஒவ்வொரு செயலும் அற்புதம் வாய்ந்தவை. அவரின் தரிசனம்,

ஸ்பரிஸம், ஸம்பாஷணைமூலம் ஒருவன் முத்தியடைந்து விடலாம். பெயரை நினைவில் கொண்டவர்களுக்கு மோட்சம் அளித்திருக்கிறார்.

பகவானுக்கும் பக்தனுக்குமிடையில் எந்தவொரு வித்தியாசமுமில்லை. புனிதமான இதயங்களைக் கொண்டவர்களைத் தவிர மற்றவர்களால் கிருஷ்ணரின் லீலைகளைப் புரிந்துகொள்ள முடியாது. இறைவன் கோயில் கொண்ட கோபியர்களின் இதயம் கோயிலாக மாறிவிடுகிறது. உள்ளூர எழும் தாகம் கிருஷ்ண ரசமாகிய அமிர்தத்தைப் பருகுவதால் தணிந்துவிடுகிறது. இங்கே கோபியர்களுடன் நடனமாடியபொழுது ஒவ்வொரு வீட்டிலும் அந்த அந்த வீட்டுக் கோபியாக அவர்களின் வீட்டுவேலைகளைச் செய்துகொண்டிருந்தார் கிருஷ்ணர்.

"ஆனந்தத்தின் சாரம்" என்னுடைய பிருந்தாவனம் என்று பகவானே தெரிவிக்கிறார். ஆனந்த பிருந்தாவனத்தில் நடைபெற்ற அன்புத் திருவிளையாடல்களில் "ராஸகிரீடை"யை கிருஷ்ண பக்தர்கள் சிறப்பாகக் குறிப்பிடுவார்கள். "ராஸம்" என்பதற்கு கூட்டமாக விளையாடும் உல்லாசப் பொழுதுபோக்கு என்று பொருள். இத்தகைய திருவிளையாடல்கள் வாயிலாக வேதாந்த ஞானிகள் பரப்பிரம்மமே "அழியா அழகு" என்ற தன் வடிவை இவ் உலகுக்குக் காட்டியது என்பர். காதலைப் பக்தியாக்கி தெய்வநிலைக்கு உயர்த்தினர் ஆழ்வார்களும், நாயன்மார்களும். இத் தெய்வ நிலைக் காதலே "ராதா கிருஷ்ண" தத்துவம்.

ராஸக்கிரீடையை சுக முனிவர் சொல்லக்கேட்ட பரீட்சித்துக்கு எல்லோருக்கும் ஏற்படக்கூடிய சந்தேகம் ஏற்பட்டது. "ரிஷியே! பகவான் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவும், அதர்மத்தை அழிப்பதற்காகவும் தானே அவதரித்தார். அப்படிப்பட்டவர் பிறர் மனைவிகளைத் தீண்டும் அதர்மத்தை எவ்வாறு செய்தார்?" என்று கேட்டார். "மன்னா!, அக்னி எல்லாவற்றையும் எரித்துவிடும். அக்னியைப் போன்ற தேஜஸ் உடையவர்களும் அப்படியே. அவர்களை எந்தப் பாபமும் பற்றுவதில்லை. அவர் செய்தார் என்று மற்றவர்களும் செய்ய நினைத்தால் அழிந்துபோவார்கள். சிவபெருமான் விஷத்தைச் சாப்பிட்டாரேயென மற்றவர்களும் சாப்பிட்டால் அழிந்துபோவார்கள். ஈஸ்வரர்களுடைய வாக்குத்தான் பிரமாணம். அவர்களின் நடத்தையில் சிலவற்றைப் பிரமாணமாக எடுத்துக்கொள்ளலாம். சிலவற்றை எடுத்துக்கொள்ளக் கூடாது. கிருஷ்ணருக்கு புண்ணியத்தின் சம்பந்தமும் கிடையாது. பாபத்தின் சம்பந்தமும் கிடையாது" என்றார்.

புனிதமான இதயங்களைக் கொண்டவர்களைத் தவிர, மற்றவர்களால் கிருஷ்ணரின் லீலைகளைப் புரிந்துகொள்ள முடியாது. பகவானுக்கும், பக்தனுக்குமிடையே எந்தவொரு வித்தியாசமும் கிடையாது. இறைவன் குடிகொண்ட கோபியர்களின் இதயம் கோயிலாக மாறிவிடுகின்றது. உள்ளூர எழும் தாகம் கிருஷ்ண ரஸமாகிய அமிர்தத்தைப் பருகுவதால் தணிந்து விடுகிறது. கிருஷ்ணரின் லீலைகளைக் கண்டும், நினைவு கூர்ந்தும், கோபியர்களின் ஆத்மா, பரமாத்மாவான கிருஷ்ணரில் ஐக்கியமாகித் தேனாமிர்தத்தைப் பருகினர். கிருஷ்ணா! கிருஷ்ணா என்பது அவர்களின் ஒரே ஒரு வேதம். கிருஷ்ணர் கோபிகைகளுடன் நடத்திய இந்த விளையாட்டை சிரத்தையுடன் கேட்பவர்களுக்கும், சொல்கிறவர்களுக்கும் திடமான கிருஷ்ண பக்தி ஏற்பட்டு, அவர்களை வருத்தும் மனவேதனையும் ஒழியும் என்றார் சுக மகரிஷி.

"குழகனை என்தன் கோமளப் பிள்ளையை, கோவிந்தனை, கோவலக்குட்டனை, மனதுக்கினியானை பாடிப்பரவிப் பணிந்து போற்றுவோம்.

(தொடரும்...

# திருவிளையாடற் புராண வசனம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## மூர்த்தி விசேடம்

முனிவர்களே! மகா மேருமலை, திருக்கைலாய மலை, மந்தர மலை, திருக் கேதாரம், காசி முதலிய தலங்களிலே சிவ லிங்க மூர்த்திகள் தோன்று முன்னரே இக் கடம்ப மரத்தடியிலே இந்தச் சிவலிங்கந் தோன்றியது. இது தோன்றிய பின்னரே அத் தலங்களிலுள்ள சிவலிங்கங்களெல்லாம் தோன்றின. ஆதலால், ஞானவடிவாகிய இந் தச் சிவலிங்கம் மூலலிங்கமென்று சிறப்பித் துச் சொல்லப்படும். தமது இச்சை வயத் தாற் கொள்ளப்பட்ட முப்பத்திரண்டு இலக் கணங்களும் அமைந்த மேனியையுடைய சிவபெருமான் உமாதேவியாரோடும் இச் சிவலிங்கத்தில் அழகு செய்து சாந்நித்திய ராய் இருத்தலால், தேவர்கள் சோமசுந்தரக் கடவுளென்று திருநாமஞ் சாத்தினார்கள். இச் சோமசுந்தரக் கடவுள் உலகமெங்கும் வியா பித்து நிற்றலாலன்றோ, இவர் முதுகிலே பாண்டியன் கையாற் பிரம்பு பட்ட அடித் தழும்பு மூவுலகங்களிலும் பட்டது. சமட்டி வடிவாகிய இந்தச் சிவலிங்க மூர்த்தியைத் தரிசித்தவர் மற்றத் தலங்களிலுள்ள வியட்டி வடிவாகிய சிவலிங்க மூர்த்திகளைத் தரி சித்தவராவர். ஒரு மரத்தின் வேரிலே ஊட் டும் நீர் அதன் கிளைகளெல்லாவற்றையும் தழையச் செய்யுமன்றோ!

உயிர்களிடத்துள்ள பெருங்கருணை யினாலே அறுபத்து நான்கு திருவிளை யாடல்களைச் செய்தருளிய இச் சிவலிங்க மூர்த்திக்கு ஒப்பும் உயர்வும் மூவுலகத்திலும் இல்லை. மலைகளுள்ளே மகாமேருவும், தருக் களுள்ளே தேவதாருவும், யாகங்களுள்ளே அசுவமேதமும், தானங்களுள்ளே அன்ன தானமும், மனிதர்களுள்ளே சிவப்பிராமணரும், தேவர்களுள்ளே சிவபிரானும், விரதங்களுள்ளே சோமவாரமும், மந்திரங்களுள்ளே பஞ்சாட்சர மும், இரத்தினங்களுள்ளே சிந்தாமணியும், தருமங்களுள்ளே சிவதருமமும், தபசிகளுள்ளே சிவபக்தரும், பசுக்களுள்ளே காமதேனுவும், தீர்த்தங்களுள்ளே பொற்றாமரை வாவியும், சிவலிங்க மூர்த்திகளுள்ளே சோமசுந்தர மூர்த்தியும் மேலாகும். தோற்றமும் நடுவும் இறுதியுமின்றி அகண்ட பரிபூரணமாய் உயிர் களுக்குப் பந்தத்தையும் முத்தியையுங் கொடுத்தருளும் சிவபெருமான், தம்மை வழிபடு வோருக்கு இம்மை மறுமை வீடு மூன்றையும் அருளிச்செய்யும் பொருட்டு, வேதங்களெல் லாம் துதிக்க, இச்சொக்கலிங்கத்திலே எந் நாளும் சாந்நித்தியராய் இருப்பார். இச் சிவலிங் கத்தைத் தரிசித்தோர் உரையுணர்வொடுங் கச் சுத்த சிவசோதியைத் தரிசித்தவராவர்.

இச் சிவலிங்கப் பெருமானைத் தரி சித்தவருடைய பாவங்களெல்லாம், அக்கினி யினாலே பஞ்சும், கோபத்தினாலே தவமும், மருந்தினாலே நோயும், உலோகத்தினாலே உத்தம குணங்களும், சூரியோதயத்தினாலே இருளும், பெருங்காற்றினாலே மேகமும், சிங் கத்தினாலே யானையும், குலிசத்தினாலே மலைகளும், காமநோயினாலே விவேகமும், சிவஞானத்தினாலே அவித்தையும், கருட னாலே பாம்பும், செருக்கினாலே கல்வியும் போலச் சிதைந்துவிடும்.

சோமசுந்தரக் கடவுளைப் பிராதக் காலத்திலே தரிசித்தவர் நாற்றிசைக் கடலுட்பட்ட

பூதானஞ் செய்த பயனைப் பெறுவர்; மத்தியானத்திலே தரிசித்தவர் ஆயிரங் கோதானஞ் செய்த பயனைப் பெறுவர்; சாயங்காலத்திலே தரிசித்தவர் கோடி கோதானஞ் செய்த பயனைப் பெறுவர்; அர்த்தயாமத்திலே தரிசித்தவர் அசுவமேதஞ் செய்த பயனைப் பெறுவர். இவ்வுண்மையை உணர்ந்து நியமமாக இந்நான்கு காலமும் சென்று வலஞ்செய்து வணங்கித் துதிக்கும் மெய்யடியார்கள் முற்பிறப்பிற் செய்த பாவங்களினின்றும் நீங்கி, பரிசுத்தராகி, கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் பெற்று, தாம் வேண்டிய போகங்களை அனுபவித்து, பின் ஆணவ மலத்தினின்றும் நீங்கி, சிவபிரானுடைய திருவடிக்கீழ் வாழ்வர்.

சோமசுந்தரக் கடவுளுடைய திருநாமத்தைக் கேட்டால் பத்துப் பிறவியிற் செய்த பாவம் நீங்கும். நினைத்தால் நூறு பிறவியிற் செய்த பாவம் நீங்கும். சோமசுந்தரக் கடவுளை இப்போது வணங்குவோம் என்று எழுந்து வீட்டுப் புறத்திலே சென்றால், ஆயிரம் பிறவியிற் செய்த பாவம் நீங்கும்.

சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்தவர் ஆயிரம் அசுவமேதஞ் செய்த பயனைப் பெறுவர். உருத்திர சூக்கத்தினாலே துதித்தவர் ஆயிரம் இராசசூய யாகஞ் செய்த பயனைப் பெறுவர்; உள்ளங்கை அளவினதாகிய தீர்த்தத்தினாலே அபிஷேகஞ் செய்து பூசித்தவர் மற்றைத் தலங்களிலுள்ள சிவலிங்க மூர்த்திகளைச் சிவாகம விதிப்படி சோடசோபசாரத்தோடு பூசித்தவராவர்; பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம், தேன், முப்பழம், சந்தனக் குழம்பு, கந்தோதகம் என்பவைகளால் ஆட்டி விதிப்படி பூசித்தவர் பாவத்தினின்றும் நீங்கி, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கையும் பெற்று வாழ்வர்; வடித்தெடுக்கப்பட்ட வாசங் கலந்த தீர்த்தத்தினாலே அபிஷேகஞ் செய்தவர் இலட்சம் அசுவமேத பயனைப் பெறுவர்; திருமேனியிலே கஸ்தூரி, பச்சைக் கருப்பூரம், குங்குமம், சந்தனம் என்பவைகளை மட்டித்தவர் சுவர்க்கத்திலே தேவப் பெண்களோடும் வாசங் கலந்த சந்தனக் குழம்பு பூசிக்கொண்டு, இன்பத்தின் மூழ்கி வாழ்வர்.

சோமசுந்தரக் கடவுளுடைய திருமுடியிலே ஒரு மலர் சாத்தினவர் மற்றைத் தலங்களிலுள்ள சிவலிங்க மூர்த்திகளை நூறு பொன்மலராலே பூசித்த பயனைப் பெறுவர். சோமசுந்தரக் கடவுளுக்கு ஒருதரந் தூபங் கொடுத்தவருக்கு மனம் வாக்குக் காயங்களினாலே முன்செய்த ஆயிரம் பாவம் நீங்கிவிடும். திருவமுது நிவேதித்தவர் அவிழ் ஒன்றற்கு யுகம் ஒன்றாகச் சிவலோகத்தில் வாழ்வர். தாம்பூலமும் முகவாசமும் கொடுத்தவர் நூறுகோடி தேவ வருடம் சிவலோகத்து வாழ்வர். ஒரு கர்ப்பூர தீபமிட்டவர் சிவசாரூப்பியம் பெறுவர். திருமஞ்சனக் குடம், அபிஷேக கலசம், தூபக் கால், தீபக் கால், மணி முதலியன கொடுத்தவர் தாஞ்செய்த பாவங்களெல்லாம் நீங்கப்பெற்று, தாம் விரும்பிய போகங்கள் எல்லாம் அனுபவித்து வாழ்வர். சோமசுந்தரக் கடவுளுடைய சந்நிதியிலே நிருத்தமும் கீதமும் வாத்தியவொலியும் செய்வித்தவர், அரசர்களாய், தம் முன்னே வாத்தியங்கள் ஒலிப்ப, மூவுலகத்தாரும் வணங்க, நிருத்தமும் கீதமும் கண்டும் கேட்டும், இன்பவெள்ளத்துள் மூழ்குவர். சோமசுந்தரக் கடவுளை அட்டாங்கமோடாயினும் பஞ்சாங்கமோடு ஆயினும் ஒரு தரம் நமஸ்கரித்தவர் அரசராய்ச் செங்கோல் செலுத்தி, எல்லாருந் தம்மிடத்துக்கு வந்து தம் இருகாலிலுந் தலை வருடும்படி தம்மை வணங்க வீற்றிருப்பர். இப்படிப்பட்ட பெருமையையுடைய சோமசுந்தரக் கடவுளது சந்நிதியிலே செய்யும்

ஓமம், தவம், செபம், தானம் முதலியன அணுவளவினவாயினும் மகாமேருவளவின வாம். உத்தமோத்தமமாகிய இந்தச் சிவ லிங்க மூர்த்தியினது பெருமை முழுவதை யும் யாவர் அளந்து சொல்லவல்லவர்! முனி வரரே! நாம் சிறிது அறிந்தபடி சொன்னோம்.

திருவாலவாய்க்கு ஒப்பாய தலமும், பொற்றாமரைவாவிக்கு ஒப்பாகிய தீர்த்தமும், சோமசுந்தர மூர்த்திக்கு ஒப்பாகிய சிவலிங் கமும், பூமி அந்தரம் சுவர்க்கம் என்னும் மூவுலகத்துமில்லை. இம்மூர்த்திக்குக் கருப் பூர சுந்தரர், கடம்பவன சுந்தரர், கலியாண சுந்தரர், அபிராம சுந்தரர், சம்பசுந்தரர், மகுட சுந்தரர், கஸ்தூரி சுந்தரர், பழியஞ்சு சுந்தரர், சோமசுந்தரர், ஆலாசிய சுந்தரர், நான்மாடக் கூடல் நாயகர், மதுராதிபர், சமட்டிவித்தியா புரேசர், சீவன்முத்தி புரேசர், பூலோக சிவ லோகேசர், கன்னியாபுரேசர், மூலலிங்கம் முதலிய பல திருநாமங்கள் உண்டு.

கீழேழுலகமும் உருவ முளைத் தெழுந்த இச்சிவலிங்கத்தை ஆதாரமாகப் பொருந்தி அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்தருளிய கருணாநிதியாகிய சோமசுந் தரக் கடவுளது பெருமையை நமது சற்குரு நாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய படியே சொன்னோம். இனி அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் சொல்வோம்; கேளுங்கள். (தொடரும்...

## சந்நிதி நாயகனே! நல்கு நலம்பல நல்லார்க்கு

ஆவலாய் பக்தர்க் கருளிக் களித்துநிதம்
காவலனாய்க் கண்விழித்துக் காத்திடும் - சேவற்
கொடியோனை சந்நிதியில் கண்டு வணங்கு
மடியார்க்கு நல்வினை மொய்க்கும்.

வெற்றிவேல் கொண்டு வினைதீர்க்கும் கந்தப்பா
பற்றினோம் நின்மலர்ப் பாதமதை - எற்றைக்கும்
தொல்லைகள் நீக்கித் துயர்தீர்க்கும் நாயகனே
வல்லமை தாராய் விரைந்து.

ஏறுமயில் வாகனனே ஏகதந்தன் சோதரனே
ஆறுமுகா ஈசன்கண் ணாலுதித்த - மாறன்நீ
வல்லோராய் நல்லமைதி வாழ்வுதனில் பெற்றுய்ய
நல்கு நலம்பலநல் லார்க்கு.

எல்லை யிலாவருள் பாலிக்கும் சண்முகா
தொல்லை யழித்தருள் தந்திட - அல்லலிலா
தாடு மயிலமருந் தாட்சண்யா நின்னடி
கூடு மடியவர்பார் கூர்ந்து.

-சீ. சாந்தநாதன்-

# பக்திப் பாசுரங்கள் காட்டும் தாய்மை உணர்வு

– **திரு க. சிவசங்கரநாதன்** அவர்கள் –

தமிழ்மொழியில் இலக்கியம் பெரும் பாலும் பக்தி இலக்கியமாகவே இருப்பது கண்கூடு. தூய இலக்கியம் என்று பார்த்தால் தமிழில் சங்க இலக்கியங்கள்தாம். பண் டைக் காலத்தில் தமிழ்மொழியில் நல்லாதர வுடன்தான் தமிழகத்தில் சைவ வைணவ சமண சமயங்களை அந்தந்த சமயத் தலை வர்கள் பரப்பினார்கள். தீந்தமிழ்ப் பாக்களை இறைவனை முன்னிலைப்படுத்தி அவற்றை வாய்விட்டுப் பாடிப் பாடித்தான் தமிழகத்தில் ஊர்தோறும் சமய உணர்வை சமயக் குரவர் கள் மக்களிடம் வளர்த்தார்கள். சமய இலக் கியங்கள் எல்லாம் வெறும் தெய்வப் புகழ் பாடுவதோடு நின்றுவிடுவது அல்ல. அந்தப் பாடல்களில் தெய்வத்தின் பெருமையை சிறப் பைப் பாடும் பாங்கில் மக்களுக்கும் சமுதாயத் திற்கும் பயன்படும் நல்ல கருத்துக்களையும் சேர்த்து சமயத்தலைவர்கள் பாடியிருக்கிறார்கள். தெய்வம் புகழும் பாணியில் நாட்டுச் சிறப்பு, சமுதாயப்பண்பு, நல்லொழுக்கம், தேசபக்தி, மெய்யன்பு, கடமை உணர்வு போன்ற பண்பு களைத் தம் பாடல்கள்மூலம் பிரச்சாரம் செய்திருக்கின்றனர் சமயக் குரவர்கள். தெய்வ வழிபாடு என்பதே அன்புணர்வை வளர்ப்பது என்ற நோக்கில்தான் பண்டைய காலத்தில் கையாளப்பட்டது. தெய்வீக மணம் கமழும் பாடல்கள் பெரும்பாலும் சமுதாயந் தழுவிய மனிதாபிமான உணர் வூட்டும் சிறந்த இலக்கியங்களே என்ற உணர்வு நமக்கெல்லாம் வேண்டும். இங்கே தெய்வ மணங்கமழும் பாடல் ஒன்றை கவனிப்போம். இந்தப் பாடலை இயற்றியவர் பழந் தமிழ் வைணவ சமயப் பெரியாழ்வார் ஆவார்.

உலகமெங்கும் தாயன்புக்குத் தனித்த மதிப்பு உண்டு
தன்னலமற்ற அன்பிற்கு சான்றுகாட்ட எண்ணுவோர்
தாயன்பைத்தான் முன்வைத்துப் பேசுவர். மகனுக்காக வாழ்க்கை
இன்பங்களையெல்லாம் துறக்கத் தயங்கமாட்டாள்தாய்
கடும்பசி நேரத்தில் ஒரு கவளம் அன்னம் கிடைத்தால்
அதை மகவுக்கு அன்போடு ஊட்டிவிட்டு
தான் பட்டினி கிடப்பதுதான் தாயுணர்வு தம் மக்கள்
தம்மை மதிக்கிறார்களோ போற்றித் துதிக்கிறார்களோ
கைமாறாகத் திரும்ப அன்பு செய்கிறார்களோ என்றெல்லாம்
சற்றும் யோசிக்காமல் மக்களின்நலம் ஒன்றையே
பெரிதெனக் கருதுவது தாயின் இயல்பு. தம்மக்களைப்

பொறுத்தவரை நிம்மதியாக மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தினால் போதும் தமதுநிலை எக்கதிக்கு ஆனாலும் பரவாயில்லை என்பது போன்ற தன்னலமற்ற தனியன்பு தாயன்பு.

மகளைப் பெற்றெடுத்த தாய் தன் சுகங்களை நலன்களை அடியோடு இழந்து அந்த இழப்பிலே இன்பம் காணுகிறாள் என்பதற்காக அற்புதமான விளக்கமாகத் திகழ்கிறது பெரியாழ்வாரின் ஒரு பாசுரம். இளங் கண்ணனை அவனுடைய தாய் பாலுண்ண அழைக்கும் பாங்கு அந்தப் பாடலிலே மின்னுகிறது. பாலுண்ண பல தடவை அழைத்தும் வராத பாலகனை அன்பு தவழ ஏங்கும் தாயுள்ளம் இந்தப் பாடலிலே பிரதிபலிக்கிறது. தம்மையே கண்ணனின் தாயாக வரித்துக்கொண்டு தாமே கண்ணனைப் பெற்றெடுத்ததாகக் கற்பனை செய்துகொண்டு இன்பங்காணும் பெரியாழ்வார் தாயின் தியாகங்களையெல்லாம் படம்பிடித்து தம் பாடல்கள்மூலம் பிரதிபலித்துக் காட்டுகிறார். பெரியாழ்வார் பாடியிருக்கும் பாசுரம் பக்திப் பாடல்கள்தான். கண்ணபிரானின் புகழ்பாடும் பாடல்தான். ஆனால் கண்ணனைத் துதிக்கும் அதே நேரத்தில் அன்னையின் தியாக உணர்வைப் பற்றியும் பெரியாழ்வார் புகழ்ந்துரைப்பது பாடலின் சிறப்பு; பெருமை. பக்திப் பாடல்கள் மன அமைதிக்கு மட்டுமே உதவவில்லை. மனப் பண்பாட்டு உயர்வுக்கும் மனத்தினில் நல்லொழுக்க சிந்தனை நிலைபெறுவதற்கும்கூட உதவுகின்றன என்ற உணர்வோடு எல்லாவகையான பக்திப்பாடல்களையும் கற்க முயல வேண்டும். நமது குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே பக்திப் பாடல்களை பொருள் உணர்ந்து மனனம் செய்ய வழிவகுத்துக் கொடுத்தோமானால் எதிர்காலத்தில் அவர்கள் சீலத்தில் நல் ஒழுக்கத்தில் சிறந்த குடிமக்களாக திகழ்வார்கள் என்பது உறுதி.

திருஞானசம்பந்தர் மூன்று வயதில் தந்தையாருடன் குளத்தில் நீராடச் சென்ற போது தந்தையார் குளத்தில் நீராடுவதைக் காணாது குளக்கரையில் இருந்த சம்பந்தர் கதறி அழுதபோது இறைவன் பார்வதி சமேதராய் (தாய் தந்தையராக) தோன்றி பால் கொடுத்ததையும் சம்பந்தர் மூன்று வயதில் இருந்தே தேவாரங்களைப் பாடியதையும் யாம் நம் குழந்தைகளுக்கு நினைவூட்டி சிறுவயதில் இருந்தே பாடசாலைகள், ஆலயங்கள், சமய நிறுவனங்கள் மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்த முயற்சிக்க வேண்டும். அது இன்றைய காலத்தின் தேவையுமாகும்.

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| செப்ரெம்பர் 07 | ஆவ 21 | சனி | குங்குலியக்கலயர் |
| செப்ரெம்பர் 30 | புர 13 | திங்கள் | சங்கரபண்டிதர் |
| ஒக்ரோபர் 11 | புர 24 | வெள்ளி | கடையிற்சுவாமி |
| ஒக்ரோபர் 28 | ஐப் 11 | திங்கள் | மெய்கண்டதேவர் |

*நல்ல நட்புகள் இன்பங்களைப் பெருக்குகின்றன, துன்பங்களைக் குறைக்கின்றன.*

# வழித்துணை 26

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 மாதாவை வணங்காத மானிலத்து மாந்தரும்
பிதாவினைப் பேணாது பிள்ளைகளாய் இருப்போரும்
குருவோடு தெய்வத்தைக் கும்பிடாத கூட்டமும்
தாம்பிறந்த காரணத்தை அறியாமல் இருப்போராம்.

02 காவடி கந்தனுக்கு பிரதட்டை பிள்ளையாற்கு
கரணம் உண்டுஅதை உணர்ந்துநீர் கடைப்பிடிப்பீர்
மயிலாகிக் கந்தனைநாம் சுமந்தாடல் காவடியாம்
உலகத்தைச் சுற்றியோனை நாம்சுற்றல் பிரதட்டையாம்.

03 மழையில்லை என்றுஅழும் மக்களைநீர் காப்பதற்கு
பிழைபொறுத்து வந்தருளும் பிள்ளையாரே பெருமானே
அழையாத விருந்தாக வருவேனோ என்றிராமல்
விளையாத நிலமென்று பிறர் அழையாமல் வந்தருளும்.

04 சமைக்கின்ற உணவதனில் சிறிதிடுதல் நெருப்பிற்கு
குடிக்கின்ற நீரதனில் சிறிதிடுதல் மண்ணுக்கு
விற்கின்ற பண்டத்தில் சிறிதிடுதல் விண்ணிற்கு
காற்றோடு கலந்திருக்கும் கடவுளிற்கே காணிக்கையாம்.

05 என்னுணர்வைத் தடுப்பதற்கு எவற்குரிமை உண்டென்று
முன்னுணர்வின் வழிநடந்து முறைகெட்டுப் போவதிலும்
தன்னுணர்வைத் தானுணர்ந்து தக்கவழி நடந்திட்டால்
பின்னுணர்வால் பெருந்துன்பம் ஏற்படாமல் தடுத்திடலாம்.

06 பூரணமாய் இருப்பதனால் அதுபூரண கும்பமன்று
காரணமும் உண்டதிலே கருத்தோடு அறிந்திடுவீர்
படைத்தல் காத்தல் அழித்தல் அருளலொடு
மறைத்தலும் மறைந்திருக்கும் அர்த்தமே கும்பமாகும்.

07 பாலிருக்கத் தயிரும் வெண்ணையும் இருத்தல்போல்
சிவரிருக்கச் சிலையோடு சித்திரமும் இருக்குமன்றோ
விதையிருக்கப் பயிரோடு விளைவும் இருத்தல்போல்
கல்வியும் இருந்திட்டால் செல்வம் வீரம் இருந்தேயாகும்.

08 தீபங்கள் ஏற்றுதலும் மணியோசை ஒலிப்பதுவும்
மங்கலங்கள் இசைப்பதுவும் மனந்திறந்து பாடுவதும்
தோன்றாமல் இருப்பதொன்று தோற்றுவிக்கத் தோன்றுதல் போல்
சிலையுள்ளும் தோற்றுவித்தால் சிவபிரானார் தோன்றிடுவார்.

09 தலையினுள் சளியதுவும் காலினில் முள்ளதுவும்
உடலின் உள்ளிருக்க வேதனையைத் தருதல்போல்
நெஞ்சத்துள் வஞ்சனையும் வேதனையே எனஉணர்ந்து
அஞ்சாமல் அதைஅகற்றிப் பேரின்பம் பெற்றிடுவீர்.


10 சிறிதென்று ஒன்றைநீர் ஏற்காமல் விடுவதனால்
பெரிதாகப் பிறிதொன்று கிடைக்காமல் போய்விடலாம்
பரிநாமம் சிறிதிருந்தே பெரிதாகி விடுவதனால்
சிறிதினையும் பெரிதென்றே பெருமையோடு ஏற்றிடுவீர்.

## மரத்தடியில் தெய்வங்கள் இருப்பது ஏன்?

அரசமரம், வேப்பமரம் இரண்டுக்கும் கீழே விநாயகர் மற்றும் நாகர் சிலைகளைப் பிரதிஷ்டை செய்வது வழக்கமாக இருக்கிறது. இதன் ரகசியம் என்ன தெரியுமா? மழை பெய்தாலும், நல்ல வெயில் அடித்தாலும் குடை தேவைப்படுகிறது. பனிக்காலத்தில் இளவெயிலாக இருக்கும். அப்போது குடை தேவையில்லை.

அரசமரத்திலும் வேப்பமரத்திலும் மழை மற்றும் கோடை காலத்தில் இலைகள் நெருக்கமாக இருக்கும். தன் கீழே பிரதிஷ்டை செய்யப்படும் பிள்ளையாரையும், நாகராஜாவையும் அவை குடைபோல இலைகளை விரித்து பாதுகாப்பதாக ஐதீகம். இயற்கையும் இறைவனை வணங்குகிறது என்பது இதன் ரகசியம்.

பனிக்காலத்தில் மரங்கள் இலைகளை உதிர்த்துவிட்டு கட்டைகளுடன் நிற்கும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சூரியன் தன் கதிர்களை இந்த இடைவெளி வழியே பாய்ச்சி, விநாயகரையும் நாகரையும் வழிபடுவான். அதுமட்டுமல்ல! வெயில் மழை காலத்தில் மரத்துக்குக் கீழே மனிதர்கள் ஒதுங்குவார்கள். அப்போது அவர்கள் மழை, வெயிலில் இருந்து பெருமளவு பாதுகாக்கப்படுவார்கள். பனிக்காலத்தில் இளவெயில் பட்டால்தான் உடலுக்கு உஷ்ணம் கிடைக்கும். இப்படி, சீதோஷ்ண நிலையால் மனிதன் கஷ்டப்பட்டு விடக்கூடாது என்ற கருணையுடன், தெய்வங்கள் மரத்தடிகளை தங்கள் இருப்பிடமாக்கிக் கொண்டுள்ளனர்.



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...





ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...





ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...





ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...



# யாழ் வடமராட்சியில் தானே உதயமான கதிர்காம ஆலயம்

– **திரு கே. யோகேந்திரன்** அவர்கள் –

வடமராட்சி தென்புலோலியூரில் தான் தோன்றியாக அமைந்த தலம் உபய கதிர் காமமாகும். பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை (மந்திகைச் சந்தி) ஊடாக கிழக்கு நோக்கி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் செல்லும்போது வீதியின் அருகே விநாயகர், முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளன. வெண் கல் மலையில் சக்கர இயந்திர உருவுடன் முருகனாக அமைந்ததே இத்தலம் ஆகும்.

ஆலயமமையக் காரண கர்த்தாவாக இந்திய தமிழ் நாட்டிலே திருநெல்வேலிப் பகுதி யில் பாட்ட பத்துக் கிராமத்தில் குகானந்த நாயகி லோகாம்பாள் அம்மையார் வாழ்ந்து வந்தார். 1909ஆம் ஆண்டு ஒருநாள் அவருடைய கனவிலே முருகன் தோன்றி பின்வருமாறு கூறினார். பச்சிமப்புலவகான நகரத்திலே ஒரு விளாமரத்தின் பக்கத்திலே ஒரு கூர்மை யான வெண்கல் பாறையிலே ஒரு சக்கரம் ஒன்று அமைந்துள்ளது. இதன் வலப்பாகத் தில் காணப்படும் முனைகளையடுத்து விநா யகரையும் சிவம் சக்திகளையும் குறிக்கும். அட்சரங்களும் முருகனின் பிரணவ சக்கர மும் அமைந்திருப்பதனால் அத் தெய்வங்களுக் கும் எக்காலமும் பூசை நடைபெறுகின்றது.

"முருகனே செந்தில் முதல்வனே மாயோன் மருகனே ஈசன் மகன்..." என்று போற்றப்படுகின்ற தமிழர்களைக் காத்தரு ளும் தெய்வமாக முருகப்பெருமான் பல் வேறு இடங்களிலும் ஆலயங்கள் திருப் பொலிவுகொண்டு எழுந்தருளி இருப்பதைக் காணமுடிகின்றது. இலங்கையிலே வடக்கில் பிரசித்தி பெற்றுள்ள முருகப்பெருமானுக் குரிய வழிபாட்டுத் தலங்களில் உபயகதிர் காம சண்முகர் ஆலயமும் ஒன்றாக அரு ளின் தனித்துவப் பேறாக அருள் ஆட்சி செய்கின்றது.

முருகப்பெருமான் இந்தியாவில் பல் வேறு தலங்களில் எழுந்தருளி காட்சி கொடுத்து அருளினாலும் எல்லாத் தலங்களுக்கும் முதன்மை யாக உள்ள ஆறு திருத்தலங்களே திருப் பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன் குடி (பழனி), திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்சோலை ஆறுபடை வீடுகளேயாகும். இவ்வாறாக முருகன் ஆலயங்களை சிறந்த பக்தியோடு வழிபாடு செய்துவரும் காலத் தில் "இலங்கையின் வடக்கே வடமராட்சி புலோலியிலும் தான் அருள் செய்வதினை தரிசிப்பதற்குக் கனவில் தோன்றி கருணா மூர்த்தியாகிய சக்கர சண்முகர் இரு தேவி யர்களுடன் அருளாசி வழங்கினார்". நீர் புலோலி நகரிற்குச் சென்று சக்கரத்தைத் தரிசித்து பிரணவ சக்கரத்தின் வடிவத்தை ஒரு தகட்டில் வரைந்து இந்தியா நகரத்திற்கு கொண்டுவந்து பூசித்து வருவாயென்று திரு வாய் மலர்ந்தருளினார்.

## சக்கரம் கண்டுபிடிப்பு

இவ்வாலயம் தோன்றுவதற்கு முன் 1870ஆம் ஆண்டுக்கு முன்னரான காலத்தில் விளாமரத்தின் கீழ் கற்பீடம் அமைத்து வேல், சூலம் வைத்து விளக்கு ஏற்றி வழி பாடு இயற்றினர். பல ஆண்டுகளின் பின்னர்

இவ்விடமே பழமையான மூலாலயத்தின் இருப்பிடமாகவும் தற்போது கல்மலையின் அதிசய அழகு அமைவிடமாக உள்ளது.

அம்மையார் சுற்றத்தாரோடு 1911ஆம் ஆண்டு பச்சிமப்புலவகான நகரத்தை நாடி கொழும்பு வந்து சேர்ந்தார். அப்போது அவ்விடமிருந்த கைலாசபிள்ளை யாழ்ப்பாணம் மணியமாயிருந்த வி.எம். முத்துக்குமாரு முதலியார் ஆகியோரின் உதவியால் கலியுகவரத னாகிய ஸ்கந்தமூர்த்தி சக்கர ரூபமாயவவதரித்த பச்சிமப்புலவர்கான நகரம் வந்தடைந்தார். புலோலி மேற்கிலிருந்த கு. சின்னப்ப உடையாரென்ற வேலாயுத உடையாரும் உலாந்தா ஜி.சி. கணபதிப்பிள்ளையும் இன்னுஞ்சில அன்பர்களும் இவருக்கு உறுதுணையாக திவ்விய மூர்த்தத்தை தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவினார்கள். பதினொரு தினங்கள்வரை தேடி பன்னிரு கையன் கிருபையால் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தன்று யாவரும் தரிசிக்கும் பொருட்டு கண்டுபிடிக்கப்பட்டது. உடனே சுயம்புவான சக்கர சண்முக மூர்த்திக்கு அபிடேகம் அர்ச்சனையும் செய்தார்.

## உபய கதிர்காமம்

இறைவன் சித்தத்தால் லோகாம்பாள் அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க இப்புண்ணிய ஸ்தலத்திற்கு உபய கதிர்காமம் என்று பெயரிடப்பட்டது. இவைதான் இம் முருகனின் அற்புத தோற்றம் பற்றிய வரலாறாகும். தென்னிந்திய அடியாள்மூலம் ஈழத்திலே தென் புலோலி நகரிலே அந்த அடியாளைக் கொண்டு ஆலயமமைப்பித்த புதுமை வேறெங்குமே இடம்பெற்றதில்லை. அன்று சக்கரம் அமைந்த பாறைக்கு அடையாளமாயிருந்த விளாமரம் இன்று இல்லை. ஆனால் அதனருகே இன்னோர் விளாமரம் தானே தோன்றி வளர்ந்து நிற்கின்றது. சுயம்புவான சக்கர சண்முகனுக்கு அருகே சுயம்புவான விளாத்தீஸ்வரனும் அமர்ந்து அருள்புரியும் அற்புதத் திருத்தலமே உபயகதிர்காமமாகும்.

## தலவிருட்சம்

மனிதன் தனக்குப் பயனளிக்கும் அனைத்துச் சக்திகளையும் வழிபட்டான். இதன் அடிப்படையிலே மரவழிபாடும் ஆரம்பமானது. இவ்வாறு ஆலயங்களில் வழிபாட்டுக்குரிய தன்மையைப் பெற்ற மரங்கள் காலப்போக்கில் தலவிருட்சங்களாக சிறப்புப் பெற்றன.

இத்தலத்தில் விளாத்திமரம் விளாத்தீஸ்வரர் என்ற நாமத்தோடு வணங்கப்படுகின்றது. இதற்கு மூன்றுகால நேரங்களிலும் பூசை நடைபெறுகின்றது. இவ்விளாமரம் தற்போது தானே முளைத்து மரமாகக் காட்சி தருகின்றது. ஆனால் அன்று சக்கரம் அமைந்த பாறைக்கு அடையாளமாய் அமைந்திருந்த விளாமரம் இன்று இல்லை. இவற்றை "விளாத்தியான்" விளாத்தீஸ்வரர் என்று அடியார்கள் வணங்கி வருகின்றனர். இதன் அருகிலே கடம்பு, வேம்பு, அரசு, வில்வை, ஆல், இலுப்பை, பலாசு, மூங்கில், இத்தி போன்ற மரங்களும் இருக்கின்றன.

## புலோலி - பருத்தித்துறை

முருகன் தனது இருப்பிடமாக வெண்கல் மலையினை தேர்வு செய்தார். இந்திய தமிழ்நாட்டு திருநெல்வேலியில் குகானந்த அம்மையாரின் மூலமாக இலங்கையின் வடக்கே

வடமராட்சி புலோலியில் தோன்றக் காரணமாக இருந்தார். ஆதியில் "பருதி" என்ற ஓர் நாமம் வகித்த சூரியன் சமுத்திரத்தில் நீராடி தவம் செய்து சண்முகரிடம் வரம் பெற்றமையால் "பருத்தித்துறை" என்றும் "கதிரவன்" என்ற "சூரியனும்" பூசனை செய்து வழிபாடு இயற்றி தனது நோய் நீங்கப்பெற்றதால் "உபயகதிர்காமம்" என்றும் செந்தமிழ் வித்துவான்கள் கானத்தோடு வணங்கிய தலமாதலால் "புலோலி" என்றும் பச்சிமப்புலவர்கான நகரம் என்று அம்மையாருக்கு அருளிச் செய்தார்.

**வல்லிபுரம்**

ஊர் பெயர் ஆராய்ச்சியின் கருத்துப் படி ஆலயத்தின் அருகில் "குடகம் - புரை" என்ற இடமுண்டு. (குடகம்- மலை, புரை- தேவாலயம்) மலைத் தேவாலயம் எனப் பொருள் தருகின்றது. இவ்வாலயமும் மலைத் தொடர்களாக நிலத்தின்கீழ் உள்ளன. ஏற் கனவே இவ்விடம் கடல் அழிவினால் தாழ்ந் திருக்கலாம். வரலாறு மிக்க சிங்கை நகரின் இராஜதானியாக விளங்கிய வல்லிபுர ஆல யம் இதன் கிழக்கெல்லை என்பது சிந் தனைக்குரியது. அண்மையில் (15.08.2005) வல்லிபுரக்கோவில் பகுதியிலமைந்துள்ள புனித நகரப்பகுதியில் முன்பள்ளி கட்டுவதற் காக துப்புரவு வேலைகள் இடம்பெற்றது. புராதன அடிச்சுவடுகளான சிங்கராஜா ஆட்சிசெய்த காலத்தில் சுடுமண் கற்களால் அமைக்கப்பட்ட கிணறு கண்டுபிடிக்கப்பட் டது. இதற்கு முன்னர் 200 வருடங்களுக்கு முன்பே பெரியதேவனத்தாய் ஆலயத்தின் மூலஸ்தான விநாயகர் விக்கிரகம் அருகில் உள்ள கிணறு வெட்டும்போது எடுக்கப்பட்டது.

அதற்குமுன் பெரியதேவன்தாய் விநாயகர் ஆலயம் கொட்டில் அமைத்து மெழுகி ஓலையினால் வேய்ந்து விக்கிரகத் தினை பூசித்து வணங்கினார்கள். இன்று பெரியதேவன் என்ற சோழத் தளபதியின் தாய் வாழ்ந்து வணங்கிய விக்கிரகமே பெரிய ஆலயமாக உள்ளது. (இடப்பெயர் ஆய்வு, பாலசுந்தரம் அவர்கள்) இலங்கையின் வடம ராட்சி பரப்பில் முழுமையாக சோழர் ஆட்சிக்கு உட்பட்ட காலப்பகுதியாகும். அன்று இவ்வா றான பல ஆலயங்களும் சந்திரமௌலீஸ் வர சிவன் தலமும் அமையக் காரணமாக இருந்தது. சோழர் காலக் குடியிருப்புக்களுக் குரிய தொல்லியற் சான்றுகள் பண்பாட்டு கருவூலங்களைக் கொண்டுள்ளன என்பதினை அவதானிக்க முடிந்தது. (பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா)

சங்க காலத்தில் நிலங்களை ஐந் தாக வகுத்து அந்த நிலங்களின் தன்மைக் கும் இயற்கைத் தோற்றத்திற்கும் ஏற்றவாறு கடவுளுக்கு திருவும் உருவும் பெயரும் இட் டனர். இதில் மலையும் மலைசார்ந்த இடமு மான குறிஞ்சியில் முருகனை வழிபட்டு வந்தனர். முருகப் பெருமானை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு வழிபடும் நெறி கௌமார நெறியாகும்.

மேற்படி வடமராட்சியின் பகுதியாகிய வல்லிபுரம், ஆனைவிழுந்தான் போன்ற இடங் களில் சுடுகலங்கள் பூர்வகால கல்லோடு கள், கீச்சுக்கண்டம் சிலவற்றை பேராசிரியர் ச. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் ஆ. வேலுப் பிள்ளை, பேராசிரியர் வி. கிருஷ்ணராஜா ஆகி யோர் தமது ஆய்வுமூலம் கண்டுபிடித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வரலாற்று சிறப்புமிக்க சிங்கை நக ரின் இராஜதானியாக விளங்கிய வல்லிபுர

ஆலயம் இதன் கிழக்கு எல்லை என்பது சிந்திக்கப்பாலது. இவற்றை சீர்தூக்கி பார்க்கும்போது பண்டைய காலத்தில் இப்பிரதேசத்தில் ஓர் ஆலயம் இருந்து அழிந்திருக்கக் கூடுமென ஊகிக்க முடிகின்றது.

## திருப்புகழ் பாடிய திருத்தலம்

உபயகதிர்காம முருகன் தலத்தின்மீது ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் கிளியுரு எடுத்து பல தலங்கள் தரிசித்தும் இத்தலத்துக்கும் எழுந்தருளி திருப்புகழ் பாடியுள்ளார். அது கிளிப்பாடு பூதியில் வருவோனே எனப் பாடியதும் அது பற்றி வன்னி மங்கலம் என்னும் சிறப்புப் பெயர் உள்ளது. ஆயன் "பட்டின மருவிய பெருமாளே" என திருப்புகழ் பாடினார் என இத்தல ஆய்வாளர்களின் கருத்தாகும். தென் பகுதியில் கதிர்காம முருகன் ஒரு யந்திரப் பெட்டியிலே இருந்து அருள்புரிகின்ற அவ்வேளையிலே தென்புலோலி உபய கதிர்காமத்திலும் சக்கர யந்திர வடிவிலே திருவருள் புரிகின்றார். தென்பகுதி கதிர்காமத்துக்கு செல்ல முடியாத பக்த அடியார்கள் வந்து வணங்கி செல்கின்ற முறையினை இங்கு காணலாம்.

இவ்வாலயத்தினை புதுக்கதிர்காமம், புலோலிக் கதிர்காமம், தான்தோன்றி சக்கர சண்முகர் ஆலயம், புதுச்சந்நிதி எனப் பலவாறான நாமங்களால் அழைத்து வழிபாடு ஆற்றுகின்றனர். முருகனைப் பற்றி அருணகிரிநாதர்- திருப்புகழினாலும், வித்துவான் கதிரவேற் பிள்ளை- சுப்பிரமணிய பராக்கிரமத்தாலும், புலோலி மேற்கு சிதம்பரப்பிள்ளை- திருவூஞ் சலினாலும், ஈழத்துக்கபிலர் (வவுனியா) தென்புலோலியூர் கு. பெரியதம்பி- ஆ. விநாயகமூர்த்தி, கரவை க. வீரகத்தி போன்ற என்னும் பலர் முருகனின் பெரும் புகழினைப் பாடியுள்ளார்கள்.

முக்கண்ணன் சுதனேபோற்றி முனிவர்தம்பிரானே போற்றி
நிற்குணரூபாபோற்றி நிர்மலப்பொருளே போற்றி
இக்கணம் வருவாய்போற்றி எந்தனுக்கருள் வாய்போற்றி
சக்கரவடிவாய் நின்ற சண்முகா போற்றி போற்றி.

இவ்வகையில் பழமையான நகரங்களில் ஒன்றாக இருக்கின்ற புலோலியில் பொதிந்து இருக்கும் தமிழர்களின் இந்துக்களின் பண்டைய பெருமையின் சின்னமாக "புலவர்கான நகரம் என்னும் பதியினில் சக்கர சண்முகரான உபய கதிர்காமத்தினை ஒரு முறையாவது சென்று தரிசித்து யாம் எல்லோரும் அருள்பெறுவோமாக.

### சாதித்த பெருமை!

ஆற்றலறிவு அவரவற்கு வேறுபட்டாலும்
அனைவருக்குள்ளும் உறைபவன் ஒரே இறைவன்
போற்றும் படி ஒருசிலரை உயர்த்துவது
காலத்தின் தேவைகளும் விதியுமே யன்றி
சாற்றும் தகுதியந்தஸ்து பேர் புகழ்
இவைகளின் பெருமைகளைக் கொண்டல்ல
ஆற்றங் கரையான் முன் அனைவரும்
சமனே! சாதித்த பெருமை யவனருளே!

-இராம ஜெயபாலன்-

*உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர் துறப்போர் ஒருநாளும் தோற்பதில்லை.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சி. தங்கம் | துன்னாலை | 2000. 00 |
| பொ. ரிங்காதரன் | கைதடி | 2000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| இ. நடராஜகுமார் மூலம் ஸ்ரீகுமார் நிலோஜன் | நோர்வே | 65000. 00 |
| ஞா. கேசானந்தன் | ஏழாலை (கனடா) | 720 பவுன்ஸ் |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 8000. 00 |
| திரு ஜெயபாலன் குடும்பம் | பிரான்ஸ் | 20000. 00 |
| சி. லதா குடும்பம் | ஜேர்மன் | |
| சி. தபேந்திரன் | கரணவாய் | 5000. 00 |
| ந. சிவேந்திரன் | சித்தங்கேணி | 10000. 00 |
| பொ. ஸ்ரீகேசவன் | இளவாலை | 3000. 00 |
| கு. அனிந்திரா | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| நா. குமரதாஸ் | சாவகச்சேரி | 1500. 00 |
| த. கஜபரன் | ஏழாலை | 1000. 00 |
| வே. பொன்னுத்துரை | கைதடி தெற்கு | 1000. 00 |
| N. ரூபன் | குப்பிளான் | 5000. 00 |
| M. புவனேஸ்வரி | மானிப்பாய் | 2000. 00 |
| G. உஷாந்தன் | மானிப்பாய் | 500. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 30000. 00 |
| வை. ஜெயச்சந்திரா | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| S. சிவகுமார் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| பொ. கமலகரன் | கனடா | 5000. 00 |
| K. அனுஷாந்தி | குப்பிளான் | 2000. 00 |
| பொ. கமலேஸ்வரி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. தருணன் | லண்டன் | 2000. 00 |
| திரு தர்மு ஐயா | தொண்டைமானாறு 1மூடை அரிசி | 5000. 00 |
| இ. கவிதா | பருத்தித்துறை | 5000. 00 |
| S. சத்தியமூர்த்தி | பருத்தித்துறை | 5000. 00 |
| சோ. நாகேந்திரம் | கைதடி | 1000. 00 |
| திரு தெய்வலிங்கம் குடும்பம் | துன்னாலை | 2000. 00 |

நல்ல நண்பர்களுக்கு அடுத்து உயர்ந்த ஸ்தானம் நல்ல புத்தகங்களே.

| | | |
|---|---|---|
| நே. குகநாதன் | கோண்டாவில் | 1000. 00 |
| சு. சுதாகரன் | கோண்டாவில் | 500. 00 |
| ட. லக்மின் | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| சி. மகாலிங்கம் நிருஜா பிரசாத் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| S. ராஜகோபால் | கனடா | 15000. 00 |
| அகிலானந் சரன் | கோப்பாய் | 3000. 00 |
| அ. சண்முகராஜா | லண்டன் | 20000. 00 |
| செல்வி அ. அட்சரா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பூமணி விநாயகமூர்த்தி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| மு. அன்பினி | புலோலி தெற்கு | 5000. 00 |
| த. அறிவினி | புலோலி தெற்கு | 5000. 00 |
| அ. தில்லைநாதன் ஆசிரியர் | ஆவரங்கால் | 5000. 00 |
| செல்லமுத்தூஸ்<br>கண்டி பற்றீக் சென்ரர்<br>திரு சதீஸ் | நெல்லியடி | 15000. 00 |
| வி. சந்திரன் (சப்பற உரிமையாளர்) | கனடா | 15000. 00 |
| ச. ஆனந்தராசா | கரணவாய் | 5000. 00 |
| திரு சத்யகாந்தன் குடும்பம் | கொழும்பு | 2500. 00 |
| த. நிர்மலகாந்தன் | திருநெல்வேலி | 2000. 00 |
| Dr குருபரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| அ. அசோக் | அல்வாய் | 5000. 00 |
| கு. சுரேஸ்<br>சு. அட்சயன்<br>சு. சஸ்வின் | பண்டத்தரிப்பு | 5000. 00 |
| திரு சுதர்சன் | புங்குடுதீவு | 5000. 00 |
| முருகன் அடியார் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| போ. தவராசா | பருத்தித்துறை | 10000. 00 |
| P. ஜீவதர்சினி | கொழும்பு (பிரான்ஸ்) | 10000. 00 |
| அ. அஜேஸ் | கனடா | 5000. 00 |
| கு. நித்தியானந்தன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திருமதி பா. தங்கராஜா | நீர்வேலி | 10000. 00 |
| விஜிந்தினி பிரபாகரன் | கொழும்பு | 5000. 00 |
| R. பொன்னுத்துரை | வட்டுக்கோட்டை (மாலை விளக்கு ஏற்றுவதற்காக) | 5000. 00 |
| சதாசிவம் சிவராஜா | கொழும்பு | 5000. 00 |
| S.M. ராஜதுரை | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 3000. 00 |
| திருமதி செ. ஐடா | பருத்தித்துறை | 10000. 00 |

(தொடரும்...

# அருள் பாலித்து புகழ் ஏந்தி நிற்கும் சைவ ஆலயங்கள்

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

ஒரு நாட்டின் இறைமையை வெளிக் காட்டுவன சைவ ஆலயங்கள். நாட்டின் இரு கண்களாக விளங்குவன ஆலயங்கள். ஆலயங்கள் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாமென்று ஔவைப் பாட்டியார் சொல்லு கின்றார். "ஆலயம் தினமும் தொழுவது சாலவும் நன்று" என்று அறிவுறுத்துகின்றார். எனவே அருள் பாலித்து புகழ் ஏந்தி நிற்கும் சைவ ஆலயங்களில் மக்கள் தினமும் சென்று வழிபட்டு பெரும்பேறு பெறுகின்றனர்.

மக்களின் வாழ்வை நெறிப்படுத்துவன வாகவும் இறைபதம் அடைவதற்கும் ஆலயங் கள் வழிகாட்டுகின்றன. அரிய பிறவியை எடுத்த மானுடன் பிறவிப் பயனை நீக்கி, இறை பதம் அடைவதற்கு அருள்பாலிக்கும் பல ஆலயங்கள் உள்ளன. இந்தியாவில் முத்தித் தலமாக ஐந்து தலங்கள் உள்ளன.

பிறக்க முத்தி தரும் தலம் திருவாரூர் என்றும்,
தரிசிக்க முத்தி தரும் தலம் சிதம்பரம் என்றும்,
நினைக்க முத்தி தரும் தலம் திருவண்ணாமலை என்றும்,
வாழ முத்தி தரும் தலம் திருவாலவாய் (மதுரை) என்றும்,
இறக்க முத்தி தரும் தலம் காசி என்றும் மக்களுக்கு அறிய வைக்கப்பட்டுள்ளது. இத்தலங்களைச் சென்று வழிபட்டால் இப்பேறுகள் கிடைக்கும் என்பது இறைவாக்கு ஆகும். பஞ்சபூதத் தலங் களாகவும், மண்- காஞ்சிபுரம் (திருவாரூர்), நீர்- திருவானக்கா (திருச்சி) என்றும், நெருப்பு- திருவண்ணாமலை என்றும், காற்று- காள கஸ்தி (ஆந்திரா) என்றும், ஆகாயம்- சிதம் பரம் என்றும் தலங்களின் புகழை விரித்துள் ளனர்.

ஈழத்திருநாட்டில் பஞ்ச ஈஸ்வரங் களாக நகுலேஸ்வரம்- கீரிமலை (திருப்புகழ் பெற்றது) என்றும் திருக்கேதீஸ்வரம்- மன் னார் (சம்பந்தர் தேவாரம் பாடியது) என்றும், திருக்கோணேஸ்வரம்- திருகோணமலை (தேவாரம், திருப்புகழ் பெற்றது) என்றும், முன்னேஸ்வரம்- முன்னே தோன்றியதனால் முன்னேஸ்வரம் என்று பெயர் பெற்றதும், பாடல் பெற்ற தலமாகவும் விளங்குகின்றது. சந்திரசேகரேஸ்வரம்- தென்கோடியில் தெய் வந்துறையில் அருள்பாலித்து விளங்குகின் றது. தொண்டீஸ்வரம் கடல் கொள்ளை கொண்டுவிட்டது. ஈழத்தில் தான்தோன்றி ஈஸ்வரரான- ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ் வரர், ஆலயத்தில் நடந்த அற்புதங்கள் பல. கல் மாடு அறுகம்புல் தின்று, பெருவுரு எடுத்து சாணிபோட்டதை போர்த்துக்கீசத் தளபதி கண்ணால் கண்டு, உண்மைத் தன்மை உணர்ந்து, பூசாரியாரிடம் மன்னிப்புக் கேட்ட துடன் சைவக்கோவில்களை இடித்து வந்த செயலையும் அன்றுடன் நிறுத்திக் கொண் டது மட்டுமன்றி ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஆலயம் அமைக்கப் பெரும் பணவுதவி வழங் கினான். ஈஸ்வரன் அருள்பாலித்து, புகழ் ஏந்தி நிற்பதை மக்கள் அறிவர்.

சிவபூமி என்று திருமூலநாயனாரால் பெயர் சூட்டப்பட்ட ஈழநாட்டின் வடபகுதியில்,

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயம், நல்லூர் முருகன் ஆலயம், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம் மூன்றும் அருள்பாலித்து புகழ் ஏந்தி நிற்கின்றன. மாவிட்டபுரக் கந்தன், குதிரை முகத்தையும், கீரி முகத்தையும் மாற்றி மனித முகம் படைத்து அருள் பாலித்து புகழ் ஏந்தி நிற்கின்றார். அதுபோல் நல்லூர்க் கந்தன், செல்லப்பா, யோகர் சுவாமி அவர்களுக்கு அருள்பாலித்து, அரிய செயல்களைச் செய்ய வைப்பித்தார்.

அன்று முருகன் கதிர்காமரை அருள் பாலித்து ஆட்கொண்ட தலமாக விளங்குவதால் சந்நிதியான் ஏந்தி நிற்கும் புகழ், வரும் அடியவர்களுக்கு தெளிய வைக்கின்றது. இலங்கையின் தென்கோடியில் இருக்கின்ற கதிர்காமக் கந்தன் வரும் அடியார்களை ஆட வைத்து அருள்பாலிக்கின்றார். கதிர் காமக் கந்தனை எல்லாச் சமயத்தவர்களும் வேறுபாடின்றி சென்று வழிபடுவது சிறப்புத் தன்மையாகும்.

யாழ் வடபகுதியில் அம்மன் ஆலயங்களும் உண்டு. நயினை நாகபூசணி அம்பாள், தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன், வற்றாப்பழை கண்ணகி அம்மன் ஆலயம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் என்பனவும் அருள்பாலித்து, புகழ் ஏந்தி நிற்கின்றன. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் தனது அடியவனைக் காக்க மாட்டுத் தலையை பன்றித்தலையாக்கினாள். மேலே கூறப்பட்ட தலங்களில் தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயம் நாலு பக்கங்களிலும் கோபுரங்கள் அமைத்து, அன்னையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. வானளாவிய நான்கு கோபுரங்களும் தொலைவில் உள்ளவர்களும் ஆலயம் வர முடியாதவர்களுக்கும் காட்சி கொடுத்து, இறை அருளைப் பெற வழிசெய்கின்றன.

சைவ ஆலயங்கள் இன்று பல்கிப் பெருகிக்கொண்டிருக்கின்றன. இருந்தும் கலாசாரங்கள் வெளிசென்ற மக்களால் கடைப் பிடிக்க முடியாதிருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இங்கு இருக்கும் அடியவர்கள் சைவப் பாரம்பரியங்களை, சிறுபிள்ளைகளிடம் பழக்கி, கலாசாரத்தை அழியவிடாது காப்பது எமது கடமையாகும். சமயக் கல்வியை கட்டாயக் கல்வியாக படிக்க வைக்க அறிஞர்கள் வழிவகுக்க வேண்டும். வீட்டிலும் சமய ஒழுக்கத்தை பேண பெற்றோர்கள் உதவ வேண்டும் காலை எழுந்தவுடன் காலைக் கடன் முடித்து, இறை வழிபாடு செய்யப் பெற்றோர் உதவவேண்டும். குழந்தைகளுக்கு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினாவிடை புத்தகத்தைப் படிக்கக் கொடுக்க வேண்டும். கடவுளை வழிபடும் முறை, விபூதியணியும் காலங்கள் எனப் பல்வேறு அனுட்டான முறைகளையும் சைவ வினாவிடையில் பதிவு செய்துள்ளார். எமது வாழ்க்கை எப்படி அமைய வேண்டுமென்பதையும் பல்வேறு நூல்கள் மூலம் எழுதியுள்ளார். எனவே ஆறுமுக நாவலர் வழிநின்று ஆலயங்களை நன்கு பராமரித்து, அறப்பணி செய்து, நல்ல மனிதர்களாக வாழ அவர் வழியைப் பின்பற்றுங்கள். ஆலயங்கள் அருள்பாலித்து புகழ் ஏந்தி நிற்கும் இதை நம்புங்கள்.

## கடவுளைத்தேடி...

இறைவனின் தெய்வீக உருவத்தை, குணங்களை, உண்மை இயல்பை முழுமையாகத் தியானம் செய்வது ஒன்றுதான் நமது கடமையாகும். இதைத் தவிர நமக்கு வேறு கடமை எதுவும் இல்லை.

இறைவனது சிந்தனையில் முழுமையாக மூழ்கியிருப்பவர்களிடம் ஏற்கனவே இருப்பதைப் பாதுகாத்து, அவர்களிடம் இல்லாததை அவர்களுக்கு அளிப்பது இறைவனின் கடமையாகும்.

# ஔவையாரின் பாடற் சிறப்பு

(தொடர்ச்சி...

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

## முருகப் பெருமான் தந்த சுட்டபழம்

தமிழ்ப்பணியே தமது பிறவியின் நோக்கம் என்பதை நோக்காகக் கொண்டவர் தெய்வப்புலவர் ஔவையார். ஒருநாள் தமது தள்ளாத வயதிலும் பாதம் தேய நடந்து மலைகளையும் கடந்து காடுகளூடாகச் சென்றார். வெகுதூரம் நடந்த களைப்பும், தாகமும், பசியும் கால்வலியும் ஏற்பட்டதால் காட்டிலிருந்த ஓர் மரநிழலில் "முருகா" என்று கூறிய வண்ணம் இருந்தார். மரநிழலும் இளங்காற்றும் அவரின் அசதியைச் சற்று தணித்ததால் சுற்றும் முற்றும் நோக்கினார்.



இதே நேரத்தில் தமிழ்த் தெய்வமான முருகன் தமது குறும்புத்தனமான திருவிளையாடலை தமிழ்ப் பாட்டியிடம் காண்பித்து நற்றமிழ் பாடலின் இனிமையை நுகரச் சித்தங் கொண்டார். ஔவையார் தம்மை யாரென அறியாவண்ணம் எருமை மேய்க்கும் இடைச் சிறுவனாக வேடம் தாங்கினார். ஔவையார் அமர்ந்திருந்த நிழல் மரத்தின் எதிரேயிருந்த நாவல் மரத்திலிருந்து நாவற்பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

ஔவையார் தமது தாகமும் அசதியும் மேலிட நாவல் மரத்திலிருந்த சிறுவனைக் கண்டார். சிறுவனை நோக்கி அடா தம்பி! எனக்கு மிகவும் ஆயாசமாயிருக்கிறது. எனக்குக் கொஞ்சம் நாவற்பழம் பறித்துப்போடு என்றார். ஔவையுடன் குறும்புத்தனம் காட்ட முன்வந்த முருகனுக்கு அவர் கேட்டதை மையமாக வைத்து தமது இடைச் சிறுவனின் மொழியாக "ஓ கிழவியே! உனக்குச் சுடுகிற பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்றார்.

ஔவையார் அக்காலத்துச் சகபுலவர்களையும் தமது நுண்மதியான புலமையால் வெற்றி கொண்டவர். தாம் ஒரு பெண் என்ற பேதமையால் சுட்ட பழம், சுடாத பழம் எனப் பேதலித்தார். சுட்டபழம் என்ற அர்த்தமே புரியாது திகைத்தார். பின்பு சிறுவனை நோக்கி அப்பா! எனக்கு சுடுகிற பழம் தேவை இல்லை. சுடாத பழமே வேண்டுமென்றார். அச்சமயம் அச்சிறுவன் ஒரு மரக்கிளையை பிடித்துக் குலுக்கினான். அதிக பழங்கள் விழுந்தன.

ஔவையார் ஆவலுடன் ஒரு பெரிய நாவற் பழத்தை எடுத்தார். மணலின்மீது விழுந்ததால் பழத்தில் ஒட்டி இருந்த மணலை ஔவையார் தமது வாயால் ஊதினார். அதைக் கண்ட சிறுவன் "ஓ கிழவியே! சுடாத பழம் கேட்டாய், பழம் சுடுகிறதா? நல்லா ஊதிவிட்டுச் சாப்பிடு" என்றான். அச்சமயம் ஔவையார் தமது புலமை இருந்தும் தமது பேதமையால் இடைச்சிறுவனிடம் தாம் ஏமாந்ததை உணர்ந்து பின்வரும் பாடலைப் பாடினார்.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் - பெருங்காளில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்றோற்ற
தீரிரவு துஞ்சாது என் கண்"

இப்பாடலைக் கேட்டதும் ஔவையார்மீது அருள்புரியும் நோக்கில் இடைச்சிறுவன் மறையவும் முருகப்பெருமான் அவர்முன் தோன்றிக் காட்சி தந்தார். காட்சி தந்ததும் ஔவையார் முருகனைக் கரம் கூப்பி வணங்கினார். முருகன் ஔவையாரின் கரங்களைப் பற்றிய வண்ணம் உம்முடன் குறும்புடன் விளையாடவன்றி இகழ்வதற்காக வரவில்லை. உலகத்தில் உமக்குச் சமமாகப் பாடும் புலமையுடையோர் எவரும் இல்லை. உமது செந் தமிழ்ப் பாடலைக் கேட்டு மகிழவே இங்கு காட்சி தந்தேன் என்றார். அச்சமயம் ஔவையார் வேண்டும் பாடல் எதுவாகும் எனக் கேட்டார். உலகின் பல விடயங்களிலிருந்த போதும் "கொடியது" "இனியது" "பெரியது" "அரியது" என்பதைத் தனித்தனியே கூறுமாறு முருகப் பெருமான் கேட்டார். ஔவையார் பின்வரும் நான்கு பாடல்களையும் பாடினார்.

**கொடியது**

"கொடியது கேட்பின் நெடிய வெவ்வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனிலுங் கொடிது இளமையில் வறுமை
அதனிலுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனிலுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
இன்புற அவள் கையில் உண்பது தானே!"

**இனியது**

"இனியது கேட்கிற் றணி நெடுவேலோய்!
இனியது இனியது ஏகாந்தம் இனியது
அதனிலு மினியது ஆதியைத் தொழுதல்
அதனிலு மினியது அறிவினைச் சேர்தல்
அதனிலு மினியது அறிவுள்ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே!"

**பெரியது**

"பெரியது கேட்பின் எரிதவள் வேலோய்
பெரியது பெரியது புவனம் பெரியது
புவனமோ, நான் முகன் படைப்பு;
நான்முகன் கரியமாலுந்தியில் வந்தோன்;
கரியமாலோ, அலை கடற்று யின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்;

குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ, புவியிற் சிறுமண்;
புவியோ, அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ, உமையவள் சிறு விரல் மோதிரம்;
உமையோ, இறைவர் பாதத் தொடுக்கம்;
இறைவரோ, தொண்டர் உள்ளந் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!"

**அரியது**

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்;
அரிதரிது மானுடராதல் அரிது;
மானுடராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தலரிது;
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமுந் தாஞ் செய்தலரிது;
தானமுந் தவமுந் தாஞ் செய்தாராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே!"

மேற்கூறிய கொடியது, இனியது, பெரியது, அரியது ஆகிய நான்கினையும் நயம்பட உணர்த்த ஔவை மொழியாம் தீந்தமிழின் பாடற்சுவையைக் கேட்டின்புற்ற முருகப் பெருமான் ஔவையை வாழ்த்தியதும் மறைந்தருளினார். தெய்வ மகளிரான ஔவையார் தெய்வீகத் தமிழ்க்கடவுளுடன் நேரில் கண்டின்புற்ற பேறு பெற்றார்.

## விநாயகர் பூசையும் ஔவையார் கைலைக்குச் சென்றதும்

ஔவையார் நாள் நேரம் தவறாது விநாயகர் பூசை செய்வது வழக்கம். அவர் பக்தியுடன் பாமாலை பாடி விநாயகருக்குப் பூமாலை சூடி அமைதியுடன் பூசை செய்து விநாயகரை மகிழ்விப்பார். ஒருநாள் சுந்தரர் மற்றும் சேரமான் பெருமான் நாயனாரும் "ஆதி உலாவும் பொன்வண்ணத் தந்தாதியும்" பாடி அதனை அரங்கேற்றும் வண்ணம் கைலைக்குச் செல்ல வருமாறு அழைத்தனர். அதனால் தமது நாளாந்தப் பணியான விநாயகர் பூசையை விரைவாகச் செய்தார். அச்சமயம் ஔவையாரை நோக்கிய விநாயகர், "இன்று பூசையில் ஏன் இந்த அவசரம்" என்றார். ஔவையார் தாம் கைலைக்கு அவர்களுடன் செல்ல எண்ணி யதைக் கூறினார்.

அச்சமயம் விநாயகர் வழமைபோலப் பூசிக்குமாறும் தாமே ஔவையை கைலையிற் சேர்ப்பதாகவும் அருளினார். ஔவையார் தம் பணியை வழமைபோலச் செய்து மகிழ்ந்தார். பூசை செய்யும்போது விநாயகருக்கு இதமான "சீதக்களப" எனத் தொடங்கும் விநாயகர் அகவலையும் பாடிப் பெருமானை மகிழ்வித்தார். பூசை நிறைவு கண்டதும் விநாயகப்

பெருமான் தமது விஸ்வரூபத்துடன் தமது துதிக்கையால் ஔவையாரை ஏந்திக் கைலையிற் சேர்த்தார். ஔவையார் கைலையிற் சேர்ந்த பின்னரே ஏற்கனவே புறப்பட்ட சுந்தரரும் சேரமானும் அவ்விடத்தை அடைந்தனர். ஔவையார் எவ்வாறு வந்தார் என வினவியபோது தமது வரவைப் பாடல்மூலம் தெரிவித்தார். பாடல் இதுவாகும்.

"மதுர மொழி நல்லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் வார்க்கரி தோமுகில் போன்முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரு மதன் பின் சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குல மன்னனே"

ஔவையாரின் சிறப்பான பூசையால் அவரின் திறமையை நிலைநாட்டவென்றே விநாயகப் பெருமான் தமது பக்தையைக் கைலைக்கு எடுத்துச் சென்று யாவரையும் வியக்க வைத்தார். தமிழ் மூதாட்டியின் தமிழ்த் தொண்டும் அவரின் பணிச் சிறப்பும் இறைவனால் ஆசீர்வதிக்கப்பெற்றதை இப்பாடல்மூலம் அறிந்தோம். (தொடரும்...

## சந்நிதியில் கந்தனுக்குத் திருவிழா!

சந்நிதியில் வேலனுக்குத் திருவிழா! எங்கள்
சக்தி உமை பாலனுக்குப் பெருவிழா!
எந்நிதியும் தருவோனின் எழில் விழா! - பக்தர்
ஏத்தியுமே போற்ற வந்த இன்ப விழா!

பக்தர் அவன் தலம் நோக்கி வந்திடுவார்!- அந்தப்
பன்னிரு கை வேலன் புகழ் பாடி நிற்பார்!
திக்கெட்டும் அவன் நாமம் ஒலித்திருக்கும்! தமிழ்த்
தெய்வத்தின் புகழ் ஆங்கு ஓங்கி நிற்கும்!

வீதி எங்கும் காவடிகள் ஆடி வரும்! - எங்கள்
வேலவனின் கோவிலையே நாடி வரும்!
மோதி வரும் கடலலையும் அவன் தலத்தை- வந்து
முத்தமிட்டு பக்தி ஒலி பரப்பி நிற்கும்!

ஆலயத்து மணியும் ஆங்கு ஆர்த்திருக்கும்! - அது
ஆண்டவனின் மந்திரத்தை "ஓம்" என்று ஒலித்திருக்கும்!
கோல மயில்மீதேறி வலம் வருவான்! - குமரன்
கொடும் வினைகள் அறுத்தெமக்கு அருள்புரிவான்!

நேர்த்திகளை நிறைவேற்ற வந்திடுவார்! - பக்தர்
நெஞ்சுருகி நினைந்தவனை வணங்கிடுவார்!
பார்க்குமிடம் எங்கும் அங்கு பக்திமயம்! - அந்த
பரமன் மகன் துணையிருக்க ஏது பயம்?!

தேர்வரும் நாள் பக்தர்கட்குத் திருநாள் ஆகும்! - அவன்
தேரின் வடம் பிடிப்பது பெரும்பேறே ஆகும்!
வேராக விழுதாக எங்களைக் காப்பான்! - முருகன்
வேலேந்தி வந்தெங்கள் வினைகள் தீர்ப்பான்!

பூவரச மரத்தடியில் கோவில் கொண்டவன்! அந்தப்
புண்ணியனோ அற்புதங்கள் புரிய வல்லவன்!
ஆவலோடு வந்து தொழும் அடியவர்க்கெல்லாம் - முருகன்
அன்பு முகம் காட்டியுமே இன்பம் தருபவன்!

"அன்னதானக் கந்தன்" என்ப தவனின் பெயர்!- அவனை
அண்டி வந்து தொழுவோர்க்கு நீங்கும் துயர்!
அன்பர்கட்கு இன்பநிலை தரும் வேலவன்! - எம்மை
ஆதரித்து ஆண்டருள் வான் கந்தன் குகன்!

-கி. குலசேகரன்-

# தென் இந்திய திருத்தல யாத்திரை

– **திரு ஆ. சிவநாதன்** அவர்கள் –

"ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்பது சிவஞானபோதம் கூறும் அருள் வாக்காகும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது ஆன்றோர் வாக்கு. இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் அவனது அருள் சுரந்து நிற்கும் இடமாக ஆலயங்கள் விளங்கு கிறது. ஆன்மா லயப்படும் இடம் ஆலயமாகும்.

**"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்**
**அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்**
**கண்ணிலால் அவர்நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்..."**

என பெரியபுராணத்தில் ஞானசம்பந்தப் பெருமான் கூற்றாக சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். எனவே மண்ணில் மானிடராகப் பிறந்தோர் ஆலயங்கள் தோறும் சென்று வலம் வந்து அவனருள் பெற்று பிறவிப்பிணியைப் போக்க வேண்டுமென்பதே நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு உலகிற்கு வழங்கும் நற்செய்தியாகும்.

நாயன்மார்கள் வாழ்ந்த காலப்பகுதியில் தொடர்பாடல் வசதிகளோ போக்குவரத்து வசதிகளோ வளர்ச்சி அடையாத காலப்பகுதியில் கால்நடையாகவே ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்து அவ் ஆலயங்களில் அமர்ந்துறையும் இறைவன் இறைவி பெரும் புகழை தெய்வத் திருமுறைகளாக வாழப்போகும் மனித சமுதாயத்திற்கு வழங்கிச் சென்றனர். இத்தகைய ஆலயங்களை வழிபாடு செய்வதற்கும் முற்பிறப்பில் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்.

**"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே**
**.........................................**
**முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை**
**.........................................**
**வாணனை ஏத்தியும் பாடியும் வழிபடுமதனாலே"**

என ஞானசம்பந்தப் பெருமான் ஆலய வழிபாடு எல்லோருக்கும் கிடைக்கும் பாக்கியமாக அமையாது என்பதைச் சுட்டி நிற்கின்றார். இவ்வகையில் வாழ்வில் ஒருமுறையாவது இந்தியா சென்று சில ஆலயங்களை வழிபட வேண்டும் என்ற பேரவா நீண்டகாலமாக மன வேண்டு தலாக அமைந்திருந்தது. இவ் வேண்டுதல் வீண் போகவில்லை. முற்பிறப்பில் செய்த புண்ணிய பலனாக தென் இந்திய திருத்தல யாத்திரை செல்லும் பாக்கியம் கிடைத்தது.

தென்னிந்திய திருத்தல யாத்திரையை கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் 05.01.2000ஆம் ஆண்டு காலமான மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை மனப்பாங்குடன் செய்து வருகின்றார் என்ற செய்தி அறிந்து தொலைபேசியூடாக அவருடன் தொடர்புகொண்ட போது அவர் யாத்திரை தொடர்பான சகல விபரங்களையும் எனக்குக் கிடைக்கச் செய்தார். அவருடைய ஏற்பாடுகள் எமக்கு மிகவும் பொருத்தமாகவும் செலவு குறைந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைந்திருந்ததைக் கண்டு தொடர்புகளை ஏற்படுத்தினோம். யாவும்

தடங்கலின்றி நடைபெற்றன. எம்மை அழைத்துச் செல்வதற்கு எமது வீட்டுக்கே வாகனம் வந்தது. உரிய நேரத்தில் விமான நிலையத்தைச் சென்றடைந்தோம். விமானப் பயணமும் சிறப்பாக அமைய சென்னையைச் சென்றடைந்தோம். எமக்கான வாகனங்கள் தயாராக இருந்தது. இரவு வசதியான ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டோம். மறுநாட் காலை 5.00 மணிக்கு எமது திருத்தல யாத்திரை ஆரம்பமானது. திருத்தல யாத்திரை எமக்கு இறையருளாக வாய்த்ததைக் கண்டு பெருமிதம் அடைந்தோம். திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லுதல், பெருமைகளை அறிந்துகொள்ளல், சுவாமி தரிசனம் யாவும் சிறப்பாகவே அமைந்தது. அவர்களின் யாத்திரை அனுபவம் ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யக்கூடியவாறு திட்டமிட்டு ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று பயனுள்ள யாத்திரையாக வழிப்படுத்தியமை இறையருள் என்றே கூறவேண்டும்.

ஆலய வழிபாடுகளுக்காக பயணங்கள் தொடர்ந்தாலும் காலம் தவறாமல் உணவு வேளைகளில் தரமான உணவுகளைப் பெற்றுக்கொள்ள முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது. மூன்று நேர உணவு, தேநீர் ஒழுங்குகள் யாவும் யாத்திரையை தொடர உந்துசக்தியாக அமைந்திருந்தது. பயணத்திற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வாகனம் வசதியாகவே இருந்தது. வாகன சாரதிகள் பொறுமையும் கண்ணியமானவர்களாகவும் செயற்பட்டமை யாத்திரை 16 நாட்களாக 4500 கி.மீ தூரம் எவ்வித தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெற வழிவகுத்தது. நாள் தோறும் யாத்திரை முடிவடைந்து இரவு 08.00 மணியளவில் தங்குமிடங்களுக்குச் சென்றுவிடுவோம். தங்குமிடங்கள் யாவும் செல்லுகின்ற இடங்களில் முன்னரே திட்டமிடப்பட்டு ஹோட்டல்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. தங்கும் அறைகள் சகல வசதிகளும் கொண்ட அறைகளாகவும் பாதுகாப்பானதாகவும் மகிழ்வானதாகவும் அமைந்திருந்தமை எமது யாத்திரையை மெருகூட்டும் செயற்பாடுகளாக அமைந்திருந்தது. யாத்திரைகள் முடிவடைந்து இறுதிநாள் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான இடத்தில் தங்குமிடம் அமைந்திருந்தது. எனவே அன்றும் நாம் சுதந்திரமாக பொருட்களைக் கொள்வனவு செய்து மறுநாட் காலை விமானம்மூலம் புறப்பட்டு இலங்கையை அடைந்ததும் எமது வீடு செல்வதற்கான வாகனம் தயாராக இருந்தது. வாகனத்தில் புறப்பட்டு எமது இல்லத்தை அடைந்தபோது வாழ்வின் பயனை அடைந்துவிட்டோம் என புளகாங்கிதம் அடைந்ததுடன் இவ் யாத்திரையை மேற்கொள்வதற்கான ஒழுங்கை மேற்கொண்ட கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் அவர்களுக்கு நன்றி செலுத்தியதுடன், இப்பயணத்தை எம்முடன் சேர்ந்து வழிப்படுத்தியவர் அவருடைய மகன் ராஜன் அவர்கள் ஆவார்கள். யாத்திரையை வழிப்படுத்தக்கூடிய ஆளுமையும் ஆற்றலும் கண்ணியமும் நிறைந்தவர் ஆவார். அதிகம் கதைக்க மாட்டார். ஆனால் திட்டமிட்ட செயல் வீரன். அவரது பணிக்கு என்றும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

யாத்திரையில் 16பேர் பங்குபற்றி இருந்தோம். எல்லோரும் யாத்திரை இறை தரிசனம் என்ற ஒரே குறிக்கோளுடன் செயற்பட்டமையால் எல்லோரும் ஒருங்கிணைந்து குடும்ப உறவாகச் செயற்பட்டமை யாத்திரையைப் புனிதமாக்கியது. யாத்திரை பயணங்கள் குறித்த நேரத்தில் தடங்கலின்றி செயற்பட அனைவரது ஒத்துழைப்பும் பேருதவியாக அமைந்தது.

எமது தென்னிந்திய யாத்திரை காஞ்சி காமாட்சி அம்மன் வழிபாட்டுடன் ஆரம்பித்து 60இற்கு மேற்பட்ட ஆலயங் களைத் தரிசனம் செய்து சென்னை மயிலாப் பூர், கபாலீஸ்வரர் கோயில் தரிசனத்துடன் முடிவடைந்தது. இது யாத்திரை அகிலாண் டேஸ்வரி அன்னை பராசக்தியை வழிபட்டு தாய்மையைப் போற்றி ஆரம்பித்த யாத்திரை இறுதியில் சிவனை அடைவதாக அமைந் தமையும் ஓர் தத்துவமாகவே அமைந்துள் ளது. இவ் யாத்திரையில் விநாயகர் வழி பாடு, சிவாலய வழிபாடு, அம்மன் வழிபாடு, முருக வழிபாடு, வைரவர் வழிபாடு, ஸ்ரீமன் நாராயண வழிபாடு, ஆஞ்சநேயர் வழிபாடு, நவக்கிரக வழிபாடு என்று எல்லா வழிபாடு களையும் ஒருங்கே இணைந்திருந்தமை மனதிற்கு அமைதியையும் சாந்தியையும் ஒருங்கே வழங்குவதாக அமைந்திருந்தது.

**"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"**

என்ற திருமந்திர வாக்கிற்கிணங்க விநாயகப் பெருமானை வழிபடுவதற்காக பல விநாயகப் பெருமான் ஆலயங்களுக்குச் சென்றோம். அதில் அற்புதமாக அமைந்தது இடுக்குப் பிள்ளையார் கோவில். அங்கு இடுக் கினூடாக வந்து பிள்ளையாரை வழிபட்டால் எமக்குள்ள இடர்கள் எல்லாம் நீங்கும் என் பது நம்பிக்கை. இடுக்கினூடாக வருவதற்கு நம்பிக்கை, துணிவு, நுட்ப அறிவு யாவும் இணைந்து செயற்பட வேண்டும். இவ் அம் சங்கள் மனிதனது சாதாரண வாழ்வில் அமையும்போது வருகின்ற இடர்கள் தாமா கவே மறையும் என்ற தத்துவம் உணர்த்தப் படுவதை அறிந்து ஆனந்தித்தோம். அதே போன்று மனகுள விநாயகர் ஆலயம் சென் றும் விநாயகனைத் தரிசித்தோம். சுவாமி மலையில் அமர்ந்து அருள்பொழியும் வலம் சுழிப் பிள்ளையார் ஆலயம் சென்று வலம் சுழிப் பிள்ளையாரின் காட்சிகண்டு மகிழ்ந் தோம்.

"உச்சிப் பிள்ளையார் கோவில் கொண்ட இடம் திருச்சி மலையிலே..." என்ற பாடலைப் பல தடவை கேட்டுள்ளோம். திருச்சி சென்று மாலை வேளை உச்சிப் பிள்ளையார் கோவில் மலைக்கு ஏறுவதாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எமது பயணத் தில் இணைந்த சிலருக்கு இம்மலைக்கு ஏறமுடியாது என மனம் குழம்பினர். இம் மலை ஏறலாம். இதில் ஏறினால் மனக்குறை கள் எல்லாம் நீங்கும் என்று உற்சாகப்படுத் தியபோது அனைவரும் உற்சாகமாக ஏறி உச்சிப்பிள்ளையாரைத் தரிசனம் செய்து மகிழ்வோடு படி இறங்கி வந்தமை எமக்கு ஆச்சரியமாகவே இருந்தது. விநாயகப் பெரு மானின் அருட்கடாட்சம் எல்லோர் உள்ளங் களையும் மகிழ வைத்தது. மேலும் திருப் பத்தூரில் அமைந்துள்ள பிள்ளையார்பட்டி கோவிலுக்கும் சென்று வழிபாடு செய்தோம். இத்தகைய விநாயகர் ஆலய தரிசனம் இவ் யாத்திரையில் அமைந்திருந்தமை விக்கினங் கள் தீர்க்கும் விநாயகப் பெருமானை வழி பட்டு உய்திபெற வழிவகுத்தது.

சிவனும் சக்தியும் உறைந்து அருள் பாலிக்கும் ஆலயங்களில் நாயன்மார்கள் சென்று அவ் இறைவனதும் இறைவியினதும் பெருமைகளை தேவாரமாகப் பாடியுள்ளார்கள்.

**"உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய ஒருவன்**
**பெண்ணாகிய பெருமான் மலை திருமா மணி திகழ**
**மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவதிரும்**
**அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணமறுமே"**

என ஞானசம்பந்தப் பெருமான் திரு வண்ணாமலையில் அமர்ந்து அருள்பாலிக்கும்

சிவனையும் சக்தியையும் தொழுவார் வினை அறுமே என்ற பாக்கியம் கிடைக்கப் பெற்றோம். அருள் வெள்ளம் நிறைந்த பிரதேசம் திருவண்ணாமலை கார்த்திகை தீபம் ஏற்றப்படும் மலையைக் கண்டு தரிசித்தோம். பெரும் கோயில், வழித்துணையின்றி ஆலயத்திற்குள் சென்று வெளிவர முடியாது. ஆலயத்தின் அமைப்பு கருங்கல் தூண்கள் எமது மூதாதையரின் கைவண்ணம், மன்னர்களின் அர்ப்பணிப்பான சேவை எல்லாம் ஒருங்கே அமைந்துள்ள ஆலயத்திற்கு வழிபடச் சென்றமை எமது பூர்வ புண்ணியமே ஆகும். அண்ணாமலையில் அமைந்துள்ள ரமண மகரிஷியின் ஆச்சிரமத்திற்குச் சென்றோம். வேதபாராயணம் நாம பஜனை ரமணமகரிஷி வாழ்ந்த புனித பிரதேசம் எல்லாம் ஒருங்கே இணைந்து தெய்வீக வாசனையை உணர முடிந்தது. அப்பிரதேசத்தில் பல ஆசிரமங்கள் அமைந்திருந்தன. வீதிகளிலே காவி வஸ்திரம் அணிந்து துறவிகள் நிறைந்திருந்தமை என்றுமே காணாத அற்புதக் காட்சியாக அமைந்திருந்தது. இத் திருவண்ணாமலை 16கி.மீ சுற்றுவலம் கொண்டது. இங்கு அடியார்கள் பௌர்ணமி நாளில் கிரிவலம் வரும் காட்சியையும் கண்டமை பெரும்பேறே ஆகும்.

கோவில் என்று சொன்னால் அது சிதம்பரத்தையே குறிக்கும். அத்தகைய சிதம்பரம் சென்று சிவகாமி சமேத நடராஜப் பெருமானைத் தரிசிக்கும் பேறு பெற்றோம். நாம் மதியப் பூஜைக்குச் சென்று தரிசனம் கிடைக்கப்பெற்றமை வாழ்வின் பயனை அடைந்து விட்டோம் என்ற உணர்வை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து திருஞானசம்பந்தப் பெருமான் அவதரித்த சீர்காழி சென்று தோணியப்பரை வழிபட்டதுடன் ஞானசம்பந்தப் பெருமான் தேவாரம் பாடக் காரணமாக அமைந்த தந்தையார் நீராடிய தீர்த்தம், எல்லாவற்றையும் நேரே கண்ட போது ஞானசம்பந்தப் பெருமானோடு நாமும் சேர்ந்து நிற்கின்றோம் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. மேலும் சீர்காழியில் அமைந்துள்ள ஸ்ரீ வைத்தியநாதர் கோவிலுக்கும் சென்று வழிபட்டு உடல்நோய் உள நோய்கள் நீங்க அருள் வேண்டி வழிபட்டோம். திருக்கடவூரில் அமர்ந்து அருள் பாலிக்கும் அமிர்தகடேஸ்வரரையும் உடன் அமர்ந்து அருள்பாலிக்கும் அபிராமி அம்மையையும் காணப்பெற்றமை நீண்டநாள் அவா நிறைவேறிய புளகாங்கிதம் அடைந்தோம். அபிராமிப்பட்டரின் வேண்டுதலை ஏற்று அவர் துயர் நீக்குவதற்காக, அவர் மொழிந்த வாக்கு உண்மையாக வேண்டுமென்பதற்காகத் தனது காதணியைக் கழற்றி வீசி அமாவாசைத் தினத்தை பௌர்ணமியாக்கிய அம்மையைக் கண்டு வழிபடும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றமை எமது பூர்வ புண்ணியமே ஆகும்.

எமக்கு ஒழுங்கு செய்யப்பட்ட யாத்திரையில் தீர்த்தமாடுதலும் ஒன்றாக அமைந்திருந்தது. அதற்கு முதல்நாள் தீர்த்தமாடுதல் தொடர்பான அறிவித்தல் தரப்பட்டது. காலையில் எழுந்து தீர்த்தமாடுவதற்காக அனைவரும் சென்று திருநள்ளாறு தீர்த்தத்தில் நல்லெண்ணெய், அரப்பு வைத்து தீர்த்தம் ஆடினோம். ஆர்த்த பிறவி துயர்கெட தீர்த்தம் ஆடினோம். தீர்த்தமாடுதல் புதிய அனுபவத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தது. திருநள்ளாற்றில் தீர்த்தமாடி தற்பரானேஸ்வரர் கோவில் சென்று வழிபாடு செய்து இன்புற்றோம்.

மாசிமக நன்னாளில் அடியார்கள் தீர்த்தமாடும் கும்பகோண தீர்த்தம் கண்டு தரிசித்தோம். அருகே அமர்ந்து அருள்பாலிக்கும்

காசி விசுவநாதர் கோவில் சென்று வழிபாடு செய்தோம். மேலும் காஞ்சிபுரத்தில் அமைந் திருந்த ஏகாம்பரேஸ்வரர் கோவில் திங்களூரில் அமர்ந்துள்ள கும்பேஸ்வரர் கோவில் சென்று வழிபாடு செய்தபோது அவ்விறைவனை வழிபட்டு உய்திபெற்ற அப்பூதியடிகளையும் மனதால் வழிபட்டோம். யாத்திரையில் என் மனதை ஆட்கொண்ட கோவில் தஞ்சைப் பெருங்கோவில் இராஜராஜ சோழன் படத்திலே பார்த்த தஞ்சைப் பெருங்கோவிலை நேரில் கண்டு தரிசனம் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. கோவிலுக்கு முன்பக்கத்திலேயே ஒரே கல்லில் பொளியப்பட்ட நந்தியெம்பெரு மான் எம்மைப் பிரமிக்க வைத்தது. கோவி லுக்குள் சென்றதும் 18அடி உயரமான சிவ லிங்கப்பெருமானுக்கு நடைபெற்ற அபிஷேக மும் தொடர்ந்து நடைபெற்ற பூஜையும் கண்டு பேரானந்தம் பெற்றோம். திருச்சியில் அமைந்துள்ள யானையால் வழிபடப்பட்ட திருவானைக்கா தலம் தரிசித்தோம். அத்துடன் திருச்சியில் தாயுமானவர் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தோம். இராமேஸ்வரம் சென்றபோது கடலில் நீராடி 21 தீர்த்தத் திலும் நீராடி இராமேஸ்வரப் பெருமானை வழிபட்டமை புதிய அனுபவத்தையும் உத் வேகத்தையும் வழங்கியது. திருப்பதியில் அமர்ந்தருளும் கலங்காதீஸ்வரரையும் சென்னை மயிலாப்பூரில் அமைந்துறையும் காபலீஸ்வரர் தரிசனமும் எமது யாத்திரை யில் முக்கிய சிவாலய வழிபாடாக அமைந்தது.

சிவனையும் சக்தியையும் ஒன்றாக வழிபடப்படினும் அம்மை விரும்பியுறையும் அம்மன் ஆலயங்களையும் தரிசனம் செய் தோம். இவ்வகையில் காஞ்சி காமாட்சியம் மன் கோவில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில், ஸ்ரீ மகாபிரத்தியங்கிரா தேவி கோவில், சுவாமிமலை பெரிய நாயகியம்மன் கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், கன்னியாகுமரியில் அமர்ந்துள்ள பகவதி அம்மன் கோவில், மைசூர் சாமுண்டேஸ்வரி கோவில், வேலூர் பொற்கோயில், இலட்சுமி நாராயணன் கோவில் ஆகிய அம்மன் கோவில்களின் தரிசனம் எமது உள்ளத்திற்கு திருவருட்சக்தியை வழங்குவதாக அமைந்தது. பகவதி அம்மன் கோவில் அம்மனின் மூக் குத்தி ஒளி எமது மனதில் இன்றும் அகலாது உள்ளது.

இவ் யாத்திரையில் கன்னியாகுமரி யில் அமைந்துள்ள சுசீந்திரம் பெருமாள் கோவில் ஆலய அமைப்பு கட்டிட நுட்பம் எம்மை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியது. இங்கு பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று தெய்வங்களும் இணைந்த தாயுமால யன் என அழைக்கப்படுகிறது. நவக்கிரகங் கள் ஆலய விதானத்தில் அமைக்கப்பட்டுள் ளது. எங்களுக்கு ஆலயம் பற்றிய விளக் கத்தை விளக்கிய அர்ச்சகர் தூண்களைத் தட்டி ஒலி எழுப்பியபோது ஸ,ரி,க,ம,ப,த,நி ஏழு ஸ்வரங்கள் ஒலித்த முறைமை ஆச்சரி யத்தில் எம்மை மூழ்க வைத்தது. தொடர்ந்து கடம், கதகளி என்ற பல ஒலிகள் எழுப்பப் படுவதைக் காண்பித்தபோது தமிழ்கூறும் நல்லுலகம் கட்டிட நிர்மாண தொழில்நுட்பத் தில் முன்னைய காலங்களில் எவ்வளவு தூரம் மேலோங்கியிருந்தார்கள் என்பதை நினைக்கும்போது பெருமையும் புளகாங்கித மும் ஏற்பட்டது.

இதேபோல் எமது மனதில் அழியா இடம்பெற்ற இன்னொரு காட்சி மதுரை சுந்த ரேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்றபோது உள்வீதியின் விதானத்தில் வரையப்பட்டுள்ள சிவலிங்கத்தின் ஆவுடைப்பகுதி நாம் எத் திசையில் நின்று பார்த்தாலும் (வடக்கு,

கிழக்கு, தெற்கு, மேற்கு) நாம் நிற்கும் பகுதியிலேயே அமைந்துள்ளது அற்புதம். இறைவனின் அற்புதம், கலைஞர்களின் அற்புதப்படைப்பு எம் உள்ளத்தில் மனநிறைவைக் கொடுத்தது.

முருகன் அமர்ந்துள்ள வீடுகள் ஆறு படை வீடுகள், அங்கிருந்து முருகப்பெருமான் அருளாட்சி புரிகின்றார். இவ்வகையில் எமது யாத்திரைப் பயணத்தில் தேவசேனாதிபதியாகிய முருகப்பெருமான் இந்திரன் மகளாகிய தெய்வானை அம்மனைத் திருமணம் செய்த இடமாகிய திருப்பரங்குன்றம் சென்று தரிசித்தோம். சீராக அலைகள் வந்து மோதுவதால் சீரலைவாய் என்றும் சூரபத்மனை முருகன் போரில் வெற்றிகொண்ட இடமாகவும் விளங்கும் திருச்செந்தூர் முருகப்பெருமானைக் கண்டு தரிசித்தோம். முருகப்பெருமான் கோபம் அடியோடு தணிந்து அமர்ந்த தலமாகிய திருத்தணிகையில் வழிபாடு செய்து நாமும் உள்ளம் மகிழ்ந்தோம். இம்மையிலே சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வையும் மறுமையிலே முத்தியையும் பரகதியையும் தரவல்ல ஞானப்பழனி முருகனைக் கண்டு தரிசித்தோம். பழனிக்கான பயணமும் புதிய அனுபவத்தைத் தந்தது. குருநாதனாக முருகன் காட்சி அளிக்கும் தலமாகிய சுவாமிமலை சென்று அவன் உபதேசம் பெறப்பெற்றோம். தமிழ் மூதாட்டி ஔவை முருகனிடம் நாவற்பழம் பெற்ற தலமாகிய பழமுதிர்சோலை சென்று முருகனையும் நாவல் மரங்களையும் கண்டு தரிசித்து ஔவையார் பெற்ற இன்பம் நாமும் பெற்றோம். மேலும் குன்றக்குடியில் அமர்ந்துள்ள சண்முகநாதன் கோவிலையும் தரிசனம் செய்தோம். சென்னையில் அமர்ந்துறையும் வடபழனி முருகன் கோவில் தரிசனமும் எமது யாத்திரையில் முருகப்பெருமான் கோவில் தரிசனங்களாக அமைந்து முருகன் திருவருளைப் பெற வாய்ப்பாக இருந்தது.

காத்தல் தெய்வமாக அமைந்துள்ள ஸ்ரீமன் நாராயணப் பெருமான் கோவில் தரிசனங்கள் ஏனைய கோயில்களிலிருந்து வேறுபட்டதாக அமைந்திருந்தது. நாராயணனின் சக்தியாக இலட்சுமி வாசம் செய்யும் தலங்களாக அமைந்தமையால் பக்தர்கள் கூட்டம் நிறைந்தவையாகவும் பாதுகாப்பு கொடுக்கப்பட்ட திருத்தலங்களாகவும் அவை காணப்பட்டன. நாராயண தரிசனம் என்பது சொற்ப நேரமே கிடைப்பதாக அமைந்திருந்து. இவ்வகையில் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில், கும்பகோணம் சாரங்கபாணி பெருமாள் கோவில், திருச்சியில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் பெருமாள் கோவில், கேரளாவில் அமைந்துள்ள பத்மநாதீஸ்வரர் கோவில், கேரளா குருவாயூர் கிருஷ்ணன் கோவில், திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமாள் கோவில் என்பவை கிருஷ்ணபகவான் தரிசனக் கோவில்களாக அமைந்தன. இக்கோவில்களில் பக்தர் வெள்ளம் பெருகிக் காணப்பட்டபோதும் எமது யாத்திரை ஒழுங்குபடுத்துனர் எல்லா ஆலயங்களிலும் எவ்வித தடங்கலுமின்றி பரந்தாமனைத் தரிசிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தியிருந்தமை மனதுக்கு மகிழ்வாக அமைந்தது. அரங்க மாநகரில் அமர்ந்துள்ள இறைவனின் காட்சி,

**பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.**

என்ற உணர்வை ஏற்படுத்தியது. இவ்வகையான நாராயணப் பெருமாள் கோவில் தரிசனங்களுடன் அவன் பக்தனான ஆஞ்சநேயர் கோவில்களையும் தரிசனம்

செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. திருவண்ணா மலையில் அமைந்துள்ள பஞ்சவடி ஆஞ்சநேயர் கோவில், திருநேத்திரா தசபுர வீர ஆஞ்சநேயர் கோவில் போன்ற ஆலய தரிசனங்களும் உள நிறைவை ஏற்படுத்துவதாக அமைந்தது.

இவ் ஆலய யாத்திரையில் வைரவப் பெருமான் வழிபாடும் கிடைக்கப்பெற்றமை பெரும் பேறே ஆகும். இவ்வகையில் திருப்பத் தூர் வயிரவர் பட்டி வழிபாடும் நினைவில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மனித வாழ்வில் இன்ப துன்ப போகங் களில் கிரகங்களின் பார்வையும் முக்கிய மானதாக அமைகிறது. கிரக மாற்றங்கள் வாழ்வு நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்து கிறது என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. இவ்வகையில் கிரகங்களை வழி பட்டு துன்பங்களைக் குறைக்க வேண்டும் என்பதும் இன்பங்களைத் தொடர்ந்து பெற வேண்டும் என்ற அவா எல்லோருக்கும் பொது வானதாகும். இவ்வகையில் எமது யாத்திரை யின்போது நவக்கிரகங்களுக்குத் தனியாக அமைந்துள்ள கோவில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது. இவ் வகையில் சீர்காழியில் அமைந்துள்ள செவ் வாய்க்கிரகக் கோவில், திருவெண்காட்டில் அமைந்துள்ள புதன் கிரகக் கோவில், நாக நாதன் கோவிலில் அமைந்துள்ள கேது கிர கக் கோயில், நளன் சாபம் நீங்கிய திருநள் ளாறு பதியில் அமைந்துள்ள சனி பகவான் கோவில், காஞ்சனூரில் அமைந்துள்ள சுக் கிரன் கோவில், சூரியன் கோயில், திரு நாகேஸ்வரத்தில் அமைந்துள்ள ராகு கிரகக் கோயில் ஆபித்சகாயல்வரத்தில் அமைந் துள்ள வியாழபகவான் கோயில் திங்களூரில் அமைந்துள்ள சந்திர பகவான் கோயில் களுக்குச் சென்று கிரக தோஷங்களை நீக்கும் வழிபாடுகளை மேற்கொள்ள முடிந் தது. மேலும் தேவி பட்டினத்தில் கடலுக்குள் அமைந்துள்ள நவக்கிரகங்களையும் வழி பாடு செய்யும் பேறும் பெறப்பெற்றோம்.

இவற்றுடன் கன்னியாகுமரியில் சிறிய கடற்பயணத்தை மேற்கொண்டு விவேகானந் தர் தியானம் செய்த மலையை தரிசனம் செய்யவும், திருவள்ளுவர் மலையை பார்வை யிடவும் வாய்ப்புக் கிடைத்தமை மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இவ்வாறு எமது யாத்திரை கோவில் தரிசனங்களை முழுமையாகவும் நிறைவாக வும் செய்த பேரானந்தம் உள்ளத்திற்கு நிறைவைக் கொடுத்ததோடு இப்பயணத்தில் பூம்புகார் கண்ணகி சிலையையும், சுற்றுலா மையங்களாக அமைந்துள்ள மைசூர் பலஸ், பிருந்தாவனம் பூங்கா என்பவற்றைப் பார்வை யிட்டதுடன் பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர்களின் சமாதிகளையும் பார்வையிட்டமை எமது பய ணத்திற்கு மெருகூட்டுவதாக அமைந்தது. இவ் யாத்திரையில் பிரபல்யமாகப் பேசப் படும் காஞ்சி பட்டு தயாரிக்கும் முறையைப் பார்த்தோம். திருப்பதி- லட்டு, பழனி- பஞ்சா அமிர்தம் ஆகியவற்றைப் பெற்று அன்பர் களுடன் பகிர்ந்துகொண்டமை உளநிறை வாக அமைந்தது. இவ்வகையில் எமது யாத்திரை தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா, கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களூடாக நடைபெற்றமையால் மாநிலங்கள் தொடர் பான அறிவும் பல தரிசனங்களும், உணவு முறைகள், தங்குமிடங்கள் போன்றவற்றுடன் வர்த்தக செயற்பாடுகளையும் நேரடியாகக் கண்டு அனுபவத்தைப் பெற வழிவகுத்து குறைந்த செலவில் நிறைவான பயன்பெற வழிவகுத்த எல்லாம்வல்ல இறைவனுக்கும் கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் அவர் மகன் ராஜன் ஆகியோருக்கும் உளங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

# சமய வாழ்வு (தொடர் -22)

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இந்து மதத்தில் பெரிய குறையாகச் சொல்லப்படுவது வருணாசிரம தர்மமாகும். அதாவது பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வருணங்களாக இந்துக்கள் பிரிக்கப்பட்டார்கள்.

இந்தப் பாகுபாட்டினால் உயர்வு தாழ்வு உருவாயிற்று என்றும், சாதிகள் தோன்றின என்றும் ஒரு குற்றச்சாட்டு உண்டு. இந்தக் குற்றச்சாட்டினை ஆராய்வதற்குமுன், இந்து மத வளர்ச்சியை வரலாற்று ரீதியாகப் பார்ப்பதும் அவசியமாகிறது.

எந்த ஒரு தனி மனிதரின் கோட்பாடுகளின் மீதும் உருவானதல்ல இந்துமதம். ஒரு சமுதாய வளர்ச்சியில் உருவான பழக்க வழக்கங்களின், கலாசாரத்தின், நடைமுறை வாழ்க்கையின் தொகுப்புத்தான் இந்துமதம். ஆகவே ஒரு காலகட்டத்தில் இந்து சமுதாயம் நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வருணத்திற்கும் முக்கியமானதொரு சமுதாயத் தொழில் நிர்ணயிக்கப்பட்டது. இது உருவான காலத்தில், இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டினை தவறானது என்றும் சொல்லிவிட முடியாது.

ஒவ்வொரு வருணத்துக்கும் ஒரு தொழில் உரியது என்கிற ஏற்பாட்டின் விளைவாக, அந்தந்த தொழிலில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் சிறப்பினை அடைவதற்கு இது வழி வகுத்துக்கொடுத்தது. ஆனால் மனிதர்களின் திறமையினை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்த ஏற்பாடு, காலப்போக்கில் வேற்றுமைகளை வளர்க்கவும், ஆதிக்க உணர்வை ஏற்படுத்தவும் வழிவகுத்தது என்பது உண்மையாகும்.

நல்லநோக்கத்தோடு உருவாக்கப்பட்ட ஒரு ஏற்பாடு காலப்போக்கில் வேற்றுமைகளை வளர்த்தது. இது மனித பலவீனத்தால் விளைந்த ஒன்றே தவிர, ஏற்பாட்டிலுள்ள குறைபாடு அல்ல.

சிலப்பதிகாரத்தில் கரிகாலசோழன் தனது நகரில் தெரு அமைப்பு முறையை தொழில் ரீதியாக உருவாக்கியிருப்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தெருக்களின் பெயர்களைப் பாருங்கள், தச்சர் தெரு, கொல்லர் தெரு, எண்ணைக்காரத் தெரு, பொற்கொல்லர் தெரு, தாசிகள் தெரு, அக்கிரகாரத் தெரு, கோயில் தெரு, பூக்காரர் தெரு..... இப்படியாக தெருக்கள் பெயரிடப்பட்டுள்ளன. இதன் மூல காரணத்தை தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்பிட்ட தொழிலைச் செய்பவர்கள் ஒரே இடத்தில் இருப்பதனால் தொழில் போட்டி ஏற்பட்டு அந்தத் தொழில் வளர்ச்சியடையும். அத்துடன் சுலபமாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்பதுதான்.

தற்பொழுது யாழ்ப்பாணக் கடைகளின் அமைப்பை அவதானியுங்கள். மின்சார நிலைய வீதி முழுவதும் புடவைக் கடைகள், கஸ்தூரியார் வீதி நகைக்கடைகள், ஸ்ரான்லி வீதி இரும்புப் பொருட்கள்... இந்த அமைப்பு நமக்கு வேலையை சுலபமாக்குகிறதா? இல்லையா? சிந்தித்துப் பாருங்கள். இத்தகைய வளர்ச்சி நோக்கிய

முறைதான் வருணாசிரம தர்மம். கவியரசு கண்ணதாசன் வருணாசிரமம் பற்றிய தன்னுடைய கருத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். (தேவை கருதி அவரது கருத்தை அப்படியே எழுதுகிறேன்.) பகவான் எல்லோரும் ஓர்நிலை என்று ஒப்புக்கொண்ட பின்னர், ஓரிடத்தில் வருணாசிரம தர்மத்தை வலியுறுத்துகிறார். இது பகவத்கீதை மேல் சாதிக்காரர்களுக்கான நூல் எனும் கருத்தை காட்டுவதாகாதா?

பகவான் வருணாசிரம தர்மத்தைப் பற்றிக் கூறுகிறார். அதை வலியுறுத்துகிறார் என்றே வைத்துக்கொள்வோம். அதிலொன்றும் தவறில்லையே. விருப்பு வெறுப்பின்றிப் பார்த்தால் "வருண ஆசிரம தர்மம்" என்பது நால்வகை அறநெறியையே குறிக்கும். வருணாசிரமப் பிரிவு சாதிகளின் மேல் தட்டு, கீழ் தட்டுக்களை உண்டாக்குவதற்கு ஏற்பட்டதல்ல. ஒரு சமுதாயத்தின் மொத்தத் தேவையே நான்கு வகையான தொழில் வர்க்கங்கள்தாம்.

ஒன்று:

நாட்டில் ஒழுக்கத்தையும், தர்மத்தையும், கட்டுப்பாட்டையும், கல்வியையும் வளர்ப்பது.

இரண்டு:

போர் புரிந்து நாட்டைப் பகைவர்களிடம் இருந்து காப்பது.

மூன்று:

வாணிபம் தொழில் நடத்தி, நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பது.

நான்கு:

உடல் உழைப்பை மேற்கொண்டு, குடி இருப்புகள், சாலைகள், தொழிற்கூடங்கள் அமைத்து மேற்கூறிய மூவகையினருக்கும் உதவுவது. இந்த நாலாவது வகையில் விஞ்ஞானிகள், மருத்துவர்கள் அனைவருமே அடங்குகிறார்கள்.

அறம் காப்பது பிராமணன் கடமை; போர் புரிவது சத்திரியன் கடமை; வாணிபம் நடாத்தி செல்வம் சேர்ப்பது வாணிகன் கடமை; கட்டிடக்கலை முதல் மருத்துவக் கலை ஈறாக யாவையும் கட்டிக் காப்பது சூத்திரன் கடமை.

வடமொழியில் "சூத்ரன்" என்று அழைக்கப்பட்டாலும் "இயக்குவோன்" என்ற பொருளில் "சூத்திரதாரி" என்று கொள்வதே பொருந்தும். சூத்திரம் என்பது விதிமுறை; சூத்திரன் என்பவன் செயற்படுபவன்.

இதிலே தீண்டாமை வந்து புகுந்தது, பிற்கால மனிதர்கள் தாங்களாகவே வலிந்து தேடிக்கொண்ட வினையே தவிர இந்து மதத்தின் நோக்கமாக எழுந்ததல்ல. இது, யானைக்கு பிடிப்பதுபோல் மனிதனுக்குப் பிடித்த மதமே தவிர, இந்துமதம் போதித்ததல்ல.

அடிப்படையில் அது தொழில்முறைப் பங்கீடே தவிர, மேல், கீழ் ஏற்றத்தாழ்வல்ல. அடிப்படை நோக்கம் இதுதான்; பின்னால் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஆதிமூலவன் பொறுப்பேற்க முடியாது.

ஆகவே, பகவான் சொல்லும் வருண ஆசிரம தர்மம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய அறநெறிக்கு உட்பட்டதே. (பகவத் கீதை - கண்ணதாசன்)

1980ஆம் ஆண்டு இலங்கையில் அப்போது இயங்கி வந்த "விஸ்வ ஹிந்து பரிசத்" எனும் அமைப்பினர் அமரர் சோ. இராமசாமியை (துக்ளக் சோ) யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் உரையாற்றினார். கேள்விகளுக்குப் பதிலும் கூறினார். சபையிலிருந்த ஒருவர் வருணாசிரம தர்மம் பற்றியும் சாதி

அமைப்பு பற்றியும் வினா எழுப்பினார். சோ. இராமசாமி ஒரு பிராமணன் என்பது குறிப்பிடத்தக்கது. நீங்கள் பிராமணர் சாதியைச் சார்ந்தவரா? என்பது அவரது வினா. "சோ" அளித்த பதில் மிகவும் சுவாரசியமானது. "யார் சொன்னது நான் பிராமணன் என்று. பூநூல் போட்டிருக்கிறேனா (சட்டையையும் கழட்டிக் காட்டுகிறார்) எனது தொழில் நடிப்பு, சட்டம், எழுத்து. நான் நடிகர் சாதி, சட்டத்தரணிகள் சாதி, எழுத்தாளன் சாதி எனும் மூன்று சாதிக்காரன். பிராமணருக்குரிய தொழிலை நான் செய்வதில்லை. ஆகவே நான் பிராமணன் அல்ல; பூநூல் போடவில்லை, வாத்தியார்கள் எல்லாம் சேர்ந்தால் ஒரு சாதி, வைத்தியர்கள் ஒரு சாதி இப்படியே சாதிகளைச் சொல்லி உயர்வு தாழ்வு பேசி இந்து மதத்தை அதன் நோக்கத்திலிருந்து வழிமாற்றிச் செல்பவர்கள் பின்னாளிலே உருவானவர்கள். இந்து மதம் சாதி பேசவில்லை" எனக் கூறினார். இளைஞர்கள் இந்தக் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டும்.

இன்று அந்தணர்கள் சாதித் தொழிலையா செய்கிறார்கள்! ஆசிரியர்கள், வைத்தியர்கள், கட்டிடக்கலைஞர்கள்..... இப்படியாக எத்தனை தொழில் செய்கிறார்கள். இவர்கள் அந்தணர்களா?

இன்று காலம் மாறிவிட்டது, எல்லோரும் எல்லாத் தொழிலும் செய்கிறோம். இதில் தவறில்லை. சொல்லப்போனால் தேவையும் கூட. ஆனால் இந்து மதத்தின் நேர்மையான நோக்கத்துக்கு மாசு கற்பிக்க இன்றைய சூழ்நிலையை உதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

வருணாசிரம தர்மத்தின் இந்த ஏற்பாடு பலனைத் தராதபோது அந்தக் காலங்களிலேயே போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. விசுவாமித்திரன் கதை இதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டு.

(தொடரும்...

## ஆண்டவன் அடி சேர்ந்தார்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனைத்துப் பணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி உதவிகள் புரிந்துவரும் இளைப்பாறிய அதிபர் திரு க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்களது அன்புத் துணைவியார் திருமதி பரமேஸ்வரி ஆனந்தராசா அவர்கள் ஆண்டவன் அடி சேர்ந்தார்.

அன்னாரது மறைவினால் துயரக் கடலில் மூழ்கியுள்ள திரு க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். திருமதி பரமேஸ்வரி ஆனந்தராசா அவர்கள் ஆண்டவன் திருவடியில் நித்தியமாக இளைப்பாற சந்நிதியான் ஆச்சிரமமும் பேரவையும் பிரார்த்தித்து நிற்கின்றது.

# உருவங்கள் மாறலாம்

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

இந்தியாவிலே, பத்ராசலம் என்னும் இடத்திலே இராமதாசர் என்ற ஒரு அடியவர் இருந்தார். அவர் இராமதாசர் அல்லவா! எந்நேரமும் ஸ்ரீ ராமபிரானையே மெய்யன் போடு வழிபடுவதில் தனது பொழுதைத் தவப்பொழுதாகக் கழித்து வந்தார். அவருக்கு ஸ்ரீ ராமனை நேரில் தரிசிக்க வேண்டும் என்று நீண்ட நாள் அவா.

எனவே, ஒருநாள் இராமதாசர், தன் குருவைப் பணிந்து வணங்கிய பின்னர் குருவிடம் பின்வருமாறு கேட்டார், "குருவே! நீங்கள் பலமுறை ஸ்ரீ ராமபிரானை நேரில் தரிசித்ததாகக் கூறியுள்ளீர்கள். எனக்கு ஒரு முறை அவர் தரிசனம் கிடைக்க அருள் செய்ய மாட்டீர்களா?" என்று பணிவுடன் வேண்டினார்.

இராமதாசரின் விருப்பத்தைக் கண்டு மகிழ்ந்த குரு "நாளை உன்னுடைய வீட்டிற்கு ஸ்ரீ ராமபிரான் வருவார். அவரை வரவேற்பதற்கு நீ தயாராக இரு" என்றார். இதனைச் செவிமடுத்த இராமதாசருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. எல்லையற்ற குதூகலத்துடன் தனது இல்லம் திரும்பினார்.

தெய்வ அவதாரமான ஸ்ரீ ராமபிரான் என் இல்லம் எழுந்தருளப் போகின்றாரே! என்று மகிழ்ந்தார். அவர் இதனைத் தன் அயலவர்களுக்கும் கூறிப் பெருமையடைந்தார். மறுநாள் ராமதாசர் வீட்டில் ஊரே கூடிவிட்டது. எல்லோருமாக அவரது இல்லத்தையும் வீதியையும் அலங்கரித்தனர். சுவையான விருந்தும் தயாரித்தனர். மிகுந்த ஆவலோடு ராமதாசரின் வீட்டு முன்றலில் கூடி நின்றனர். ஸ்ரீ ராமபிரானின் வருகைக்காக வழிமேல் விழி வைத்து ஆவலுடன் காத்திருந்தனர்.

நீண்ட நேரமாகியும் ஸ்ரீ ராமபிரான் வருவதாக இல்லை. அப்போது எருமை மாடு ஒன்றுதான், வாலைத் தூக்கியபடி ராமதாசரின் திறந்து கிடந்த வீட்டினுள் நுழைந்தது. அங்கு பூசைக்கு ஆயத்தமாக வைத்திருந்த பொருட்களையெல்லாம் தட்டி உருட்டி, அங்கு வைத்திருந்த உணவையும் சுவைக்க ஆரம்பித்தது.

ஸ்ரீ ராமபிரானின் திவ்விய தரிசனத்திற்காகக் காத்திருந்த மக்களுக்கு எருமை மாட்டின் செயல் மிகுந்த கோபத்தைத்தான் ஏற்படுத்தியது. அங்கு நின்றோர் கையால் கிடைத்த பொருட்களால் மாட்டை நையப் புடைத்தார்கள். இராமதாசரும் சேர்ந்து மாட்டை அடித்து விரட்டிவிட்டார். எருமை மாடோ வலி தாங்கமுடியாமல் ஓட்டம் பிடித்தது.

ஸ்ரீ ராமரை எதிர்பார்த்திருந்த சமயத்தில் இப்படி எருமை மாடு நுழைந்து, பூசை அறையில் களோபரம் செய்துவிட்டதே என்ற கவலையும் ஏமாற்றமும் இராமதாசருக்கு.

மீண்டும் ஒரு நம்பிக்கை இராமதாசருக்கு. எப்படியாவது தனது குரு சொன்னவாறு ஸ்ரீ ராமர் வருவார் என்று. ஆனால் பொழுது மறைந்ததும், ஸ்ரீ ராமபிரான் வந்த பாடில்லை. ஊர் மக்களும் ராமதாசரை கேலிசெய்துவிட்டு தத்தம் வீடு திரும்பினர்.

கனத்த இரவொன்று நகர்ந்தது இராமதாசருக்கு. பொழுது புலர்ந்தது. விடிந்ததும் விடியாததுமாகத் தன் குருவிடம்

ஓடினார் இராமதாசர். ஏமாற்றம், கோபம், கவலை யாவும் கலந்த குரலில், "ஸ்ரீ இராமருக்காகக் காத்திருந்தபோது எருமை மாடு தான் வந்தது. அதை அடித்து விரட்டினோம். நீங்கள் சொன்னபடி ராமபிரான் வரவே இல்லை. இப்படி என்னை ஏமாற்றலாமா குருவே!" எனக் கேட்டார் இராமதாசர்.

அதைக்கேட்ட குரு, ஸ்ரீ இராமபிரான் இங்கு வந்து என்னிடம் தன் முதுகைக் காட்டினார். அவர் முதுகில் ஏராளமான காயங்கள் இருந்தன. வேதனையுடன் அவர் என்னிடம் "உன் பேச்சைக் கேட்டு அடியவர் வீட்டிற்கு எருமை மாடு வடிவில் சென்றேன், எனக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்தாயா?" என்று சொல்லி விட்டுச் சென்றார் என்று பதிலளித்தார் குரு.

இராமதாசர் குரு கூறியதைக் கேட்டு திகைத்தார். எருமையாக என் வீடு தேடி வந்தது இறைவனா? உண்மையை உணராமல் ஐயனை அடித்து விரட்டிவிட்டேனே! என் செய்வேன். ராமதாசர் அழுதார், புலம்பினார், தனக்குத் தானே அடித்துக் கொண்டார்.

இராமதாசரின் உண்மை அன்பை உணர்ந்த ஸ்ரீ ராமர் அவருக்குப் பின்னர் நேரில் தரிசனம் கொடுத்தார். ராமதாசர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. நான் என் பிறவிப் பயனை அடைந்து விட்டேன் எனக் களிப்பெய்தினார்.

எனவே நாம் எல்லோரும் இறைவனின் குழந்தைகள். நாம் என்ன பிழை செய்தாலும் இறைவன் எம்மை மன்னித்தருள்வார். ஆனால், இறைவனிடம் நாம் காட்டும் அன்பு, பக்தி, மெய்யன்பாக இருக்க வேண்டும். மெய்யன்பு எம்மிடம் உண்டேல், இறைவன் எம்மிடம் எவ்வடிவில் வந்தாலும் அதனைப் புரிந்து கொள்ளும் பக்குவம் எமக்குக் கிடைக்கும்.

உருவங்கள் மாறலாம் ஆனால் ஆண்டவன் கருணை மாறாது. வாசகர்களே! இனம் காண்பது உங்கள் பொறுப்பு. முயற்சிப்போமா?


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல - 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க.இல - 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

# சந்நிதியான் ஆச்சிரமம் சமுதாயப் பணிகள் - 2019

– தொகுப்பு –

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகள் படிப்படியாக விரிவடைந்து வருகிறது. சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூச்சே நித்திய அன்னப்பணியாகும். சந்நிதி வேலவனின் காலடியே தஞ்சமெனத் தங்கியிருக்கும் ஆதரவற்றோருக்கான நித்திய உணவும் - பண்டிகைக் காலங்களின் பல்வேறு உதவிகள் உட்பட்ட அரவணைப்பும், தினமும் முருகன் திருமுகம் காண பல்வேறு இடங்களிலிருந் தும் வருகை தரும் பக்தர்களுடன், முன் அறிவித்தலுடன் பாடசாலைகளிலிருந்து வரும் பலநூறு மாணவர்களின் பசிபோக்கும் அன்னப்பணியும் ஆச்சிரமத்தின் மாற்றம் இல்லாத நித்திய அன்னப்பணியாகும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட 79 குடும்பங்களுக்கான மாதாந்தம் பணமாகவும்- உலர் உணவுப் பொருட்களாகவும் வழங்கப்பட்டு வரும் உதவிகளும், பல்கலைக்கழக மாணவர்கள் 106 பேருக்கு மாதாந்தம் வங்கிகளில் வைப்பில் இடப்படும் உதவித் தொகைகளும், வாராந்தம் நடைபெற்றுவரும் இலவச வைத்திய சேவைப் பணிகளும் தொடர்கின்றன. மலையகப் பணியினில் ஆச்சிரமத்தின் விரிவாக்கமும், அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் வன்னிப் பகுதி மக்களின் வாழ்வாதார உதவிகளும் நல்ல உள்ளங்களின் நன்கொடைகளினாலும் - முருகன் திருக்கருணையினாலும் செவ்வனே நிறைவேறி வருகிறது.

இவற்றைத் தவிர இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையிலான 08 மாத காலப்பகுதியில் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்ட உதவிப் பணிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

*05.01.2019 சனி:*

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு, பனிக்கன் குள- கிழவன்குளம் கிராமத்தில் 4 பெண் குழந்தைகளுடன் வசித்துவரும் மாற்றுத்திறனாளியான பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் குடும்பத்திற்கு ரூபா 5000 பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும், பிள்ளைகளின் தேவைக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

*12.01.2019 சனி:*

பதுளை வெவசிவ தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 80 மாணவர்களுக்குரிய புத்தகப்பை, கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

*18.01.2019 வெள்ளி:*

யா/ அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு 120 மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் (சாப்பாட்டுப் பெட்டி) வழங்கப்பட்டன.

*27.01.2019 ஞாயிறு:*

கிளிநொச்சி மலையாள்புரம் கிராமத்தில் வசித்துவந்த புவனேஸ்வரன் டிலானி எனும் சிறுமி மரணித்தவேளையில், அச்சிறுமியின் குடும்பத்தாரின் வறுமை நிலையறிந்து, ரூபா 15000. 00 ரொக்கமும், 5000. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் நேரிற் சென்று வழங்கப்பட்டது.

*01.02.2019 வெள்ளி:*

நவக்கிரி யா/ புனித தெரேசா மகளிர் கல்லூரியில் தரம் 10இல் கல்வி பயிலும் மாணவி செ. மேனிலா என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*17.03.2019 ஞாயிறு:*

கல்முனை, ஸ்ரீ சந்தான ஈஸ்வரர் ஆலய இராஜகோபுர கட்டிட நிர்மானத் திருப்பணிக்காக ரூபா ஒரு லெட்சம் (ரூபா 1,00,000. 00) நேரில் சென்று வழங்கப்பட்டது.

*25.03.2019 திங்கள்:*

கனகராஜன் குளத்தில் வசித்துவரும் சோபனா என்பவரின் வீட்டிற்கு புதிய மின் இணைப்பிற்கான பொருட்கள்- செலவு- கூலி என்பவற்றிற்காக ரூபா 68500. 00 வழங்கப்பட்டது.

*29.03.2019 வெள்ளி:*

1) திக்கத்தைச் சேர்ந்தவரும், யா/ திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் து. தருண் என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

2) யா/ வலி. தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி மாணவர்களின் பரிசளிப்பு விழாவிற்காக 265 சிறுவர் கதைப் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

*28.03.2019 வியாழன்:*

கிளிநொச்சி, தேவிபுரம் குடியேற்ற திட்டத்தில் வசிக்கும் மக்களின் தண்ணீர் தேவை கருதி ரூபா 2,50,000. 00 செலவில் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது. மக்கள் நலன் சார்ந்த இவ்வுதவியானது லண்டனில் வசிக்கும் கமலகரன் என்பவர் கயனி மூலம் அனுப்பிய ரூபா 1,25,000. 00உம், மிகுதி ரூபா 1,25,000 சந்நிதியான் ஆச்சிரம சமூகப் பணிகளுக்கான நிதியிலிருந்தும் வழங்கப்பட்டது.

*12.04.2019 வெள்ளி:*

முருகேசு சுவாமிகளின் 22ஆவது குருபூஜை தினத்தை முன்னிட்டு கீழ்க்காணும் உதவி வழங்கப்பட்டது.

வல்வெட்டித்துறை யா/ வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவி மதியழகன் லக்ஷிகா என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

*17.05.2019 வெள்ளி:*

ஆச்சிரமத்தில் நடைபெற்ற வைகாசிப் பெருவிழா நிறைவினில் மூன்று மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

1) பருத்தித்துறை யா/ சிவப்பிரகாசம் ம.வி தரம் 11இல் கல்வி பயிலும் குமரேசன் கலைவேந்தன்,

2) பருத்தித்துறை யா/ வட இந்து மகளிர் பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்கும் நாகராஜா நந்துஷன்,

3) தொண்டைமானாறு கெருடாவிலைச் சேர்ந்த, யா/ சிதம்பராக் கல்லூரியில் தரம் 9இல் கல்வி பயிலும் ஜெயகாந்தராசா பிரசன்னா

ஆகிய மூவருக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*22.05.2019 புதன்:*

1) புளியங்குளம் - அனந்த புளியங்குளம் கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ நாக கண்ணகை அம்மன் ஆலய கட்டிட நிர்மாணப் பணிக்காக ரூபா 50000. 00 வங்கியில் இடப்பட்டது.

2) மட்டக்களப்பு தமிழ்ப் பத்ததிப் பள்ளியின் வளர்ச்சிக்காக ரூபா 50000. 00 வங்கியில் இடப்பட்டது.

*01.06.2019 சனி:*

புத்தளம் ஏத்தாலை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் புனர்நிர்மாண வேளையில், ரூபா 1,65,000. 00 பெறுமதியான ஆலய விக்கிரகங்கள் வழங்கப்பட்டன.

மாத்தளையைச் சேர்ந்த அருள் என்பவரின் குடும்ப நிலைமை கருதி- அவரது சத்திர சிகிச்சைக்காக ரூபா 25000. 00 வழங்கப்பட்டது.

*20.06.2019 வியாழன்:*

கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் பராபரிப்பு இல்லத்திற்கு ரூபா 65000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

*28.06.2019 வெள்ளி:*

இன்றைய வாராந்த வெள்ளி நிகழ்வினில் மூவருக்குத் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

1) ய. கௌசிகன் - தரம் 07
(யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
2) சு. சாரங்கன் - தரம் 09
(யா/ புட்டளை மகா. வித், பருத்தித்துறை)
3) சோ. சுகிர்தன் - தரம் 08
(வல்வெட்டித்துறை)

*22.07.2019 திங்கள்:*

பொலநறுவை சமனப்பிட்டி சாரதா அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு பிரதி ஞாயிறுதோறும் வழங்கப்படும் மதிய உணவிற்காக ரூபா 5000. 00 வழங்கப்பட்டு வருகிறது.

கொக்குவிலைச் சேர்ந்த திருமதி ஆறுமுகசாமி அவர்களது கண் சத்திர சிகிச்சைக்காக ரூபா 65000. 00 வழங்கப்பட்டது.

*26.07.2019 வெள்ளி:*

யாழ்ப்பாணம் யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலய பரிசளிப்பு விழாவினை முன்னிட்டு கீழ்க்காணும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

80 ஒற்றை - 100 கொப்பி
10 ஒற்றை - 100 கொப்பி
10 கட்டு CR - 20 கொப்பி
50 கொம்பாஸ்
12 டசின் பென்சில்
01 பெட்டி பேனை.

*29.07.2019 திங்கள்:*

பண்டாரவளை மெதபத்தன எல்ல எனும் இடத்தைச் சேர்ந்த P. ஜெகநாதன் என்பவரின் வீட்டு மலசலகூட புனர்நிர்மாணத்திற்காக ரூபா 25000. 00 வழங்கப்பட்டது.

பண்டாரவளை அயிஸ்லெபி தோட்டத்தில் உள்ள அயிஸ்லெபி ஸ்ரீ பாலதண்டாயுத பாணி சுவாமி ஆலயத்தின் கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 50000.00 வழங்கப்பட்டது.

*05.08.2019 திங்கள்:*

மலையகத்தில் பல்வெக்கெட்டுவ என்னும் இடத்தில் வசிக்கும் து. கோகிலா என்பவருக்கு, அவரது வெளிவாரிப் பட்டப்படிப்பு செலவுக்காக ரூபா 40000. 00 வழங்கப்பட்டது.

*06.08.2019 செவ்வாய்:*

அப்புத்தளை, கோயா- ஏதீவுட் ஹாஸ்துமுல்லை என்னும் இடத்தைச் சேர்ந்த S. வினோதன் என்பவரின் தந்தையின் இருதய சத்திர சிகிச்சைக்காக ரூபா 25000. 00 வழங்கப்பட்டது.




சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும்
சமுதாயப் பணிகளின் வரிசையில்
வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களுக்கு
துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டபோது...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில்,
துவிச்சக்கரவண்டியும், பரிசுப்பொருளும் வழங்கப்பட்டபோது...



*07.08.2019 புதன்:*

திருகோணமலை, சாம்பல்தீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆசிரியர் து. விவேகானந்தன் அவர்களின் வாழ்வாதார உதவிக்காக ரூபா ஒரு லெட்சம் (ரூபா 1,00,000.00) வழங்கப்பட்டது.

*12.08.2019 திங்கள்:*

செட்டிக்குளம் வவ்வாலை சிவன் கோவிலின் (சந்திரசேகர ஈஸ்வரர் ஆலயம்) புனர்நிர்மாண கட்டிட வேலைகளுக்காக ரூபா ஒரு லெட்சம் (ரூபா 1,00,000.00) வழங்கப்பட்டது.

*16.08.2019 வெள்ளி:*

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தாரின் வேண்டுகோளை ஏற்று, வறுமை நிலையில் கல்வி கற்கும் மாணவர்கள் 5பேருக்கான துவிச்சக்கரவண்டிகள் மேற்படி நிலையத்தாரிடம் வழங்கப்பட்டன.

## பேரின்பம்

பேரின்பத்தைப் புரிந்துகொள்ள முடியாது. பேரின்பத்தைப் பெறுவது மிகமிகக் கடினம். எத்தனையோ பிறவிகள் எடுத்தபின் நீ பேரின்பத்தைப் பெறுகிறாய். பேரின்பத்திலிருந்து வெளிவருவதென்பது இன்னும் கடினம். உன் வாழ்வில் நீ விழைவது பேரின்பத்தைத்தான். உன் ஆன்மா இறைவனுடன் இணைவது. உலகிலுள்ள மற்றவை எல்லாமே உன் மனத்தை அந்த இலக்கை விட்டு வேறு வழி திருப்புகின்றவைதான். பல கோடிப் பொருட்கள், பல வழிகளில் உன்னைத் திசை திருப்பவுள்ளன. விளக்க முடியாத, புரிந்துகொள்ள முடியாத பல வழிகளால், நாம் நம்மை (ஆன்மாவை) அடைய முடிவதில்லை.

அடக்க முடியா ஆசைகள், வெறுப்புகள், வேண்டுதல், வேண்டாமை, விருப்பங்கள் இவை மனத்தை வாழ வைக்கின்றன. மனம் இறக்கும்போதுதான் பேரின்பம் தோன்றுகின்றது. பேரின்பம்தான் எல்லாத் தெய்வீகத்தின் தேவதைகளின் இருப்பிடம். இந்த மனிதப் பிறவியில்த்தான் அதைப் புரிந்துகொள்ள, ஆதரிக்க முடியும். இந்த மனிதப் பிறவியைப் பெற்று ஞானப் பாதையை அறிந்த பின்னும் நீ இதை உணரவில்லையானால் மிகப்பெரும் இழப்பிற்கு நீ ஆளாகிறாய்.

அடங்கா ஆசைகளும் வெறுப்புகளும் உன் இதயத்தைக் கடினமாக்குகின்றன. உனது நடத்தையில் நீ பணிவுடையவனாக இருப்பதில் பயனில்லை. நடத்தையில் நீ முரட்டுத்தனமாக இருக்கக்கூடும்; ஆனால் இதயத்தில் நீ முரட்டுத்தனமாக இருக்கமுடியாது. உனது நடத்தையில் நீ முரட்டுத்தனமாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால் இதயத்தில் நீ முரட்டுத்தனமாக இருந்தால் அது ஏற்க முடியாது.

இவ்வுலகம் நீ உள்ளத்தில் நீ எப்படிப்பட்டவன் என்பதைப்பற்றி அக்கறை கொள்வதில்லை. உன்னுடைய நடத்தையை மாத்திரம் பார்க்கிறது. தெய்வம் நீ வெளியில் எப்படி இருக்கிறாய் என்பதைப்பற்றி அக்கறை கொள்வதில்லை. உனது உள்ளத்தை மட்டுமே பார்க்கிறது. மிகச்சிறிய அளவு ஆசையோ, வெறுப்போ உனது உள்ளத்தில் ஒருபோதும் இடம்பெறவிடாதே. ரோஜா மலரைப்போல் உனது உள்ளம் புத்தம் புதியதாக, மென்மையானதாக, மணமுள்ளதாக இருக்கட்டும்.

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள்

**31.08.2019 சனிக்கிழமை 2ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி நிலைய அன்பர்கள்

**01.09.2019 ஞாயிற்றுக்கிழமை 3ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "குருவாய் வருவாய்"

வழங்குபவர் :- திரு க. கைலநாதன் அவர்கள்

(ஆசிரியர்- அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

**02.09.2019 திங்கட்கிழமை 4ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "வழிபாடு"

வழங்குபவர் :- திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

(சைவப்புலவர்)

**03.09.2019 செவ்வாய்க்கிழமை 5ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஈழத்தில் இந்துமதம்"

வழங்குபவர் :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

(அதிபர்)

**04.09.2019 புதன்கிழமை 6ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "இந்துமதமும் அறிவியலும்"

வழங்குபவர் :- செல்வன் ப. பிரணவன் அவர்கள்

**05.09.2019 வியாழக்கிழமை 7ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "வினை தீர்க்கும் வேலோன்"

வழங்குபவர் :- திரு நி. பாபுதரன் அவர்கள்

(ஆசிரியர்)

*மற்றவர்களை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்துடன் நடக்க முடியாது.*

**06.09.2019 வெள்ளிக்கிழமை 8ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஈழத்தில் முருக வழிபாடு"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(இளை. அதிபர்)

**07.09.2019 சனிக்கிழமை 9ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பாடும் பணியே பணி"

வழங்குபவர் :- திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

(சைவப்புலவர்)

**08.09.2019 ஞாயிற்றுக்கிழமை 10ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பெண்பால் உகந்தான் பெரும்பித்தன்"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) (பூங்காவனம்)

**09.09.2019 திங்கட்கிழமை 11ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பரிவேல்"

வழங்குபவர் :- திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

(ஆசிரியர்)

**10.09.2019 செவ்வாய்க்கிழமை 12ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "சந்நிதியான் அருள்"

வழங்குபவர் :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

(ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**11.09.2019 புதன்கிழமை 13ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருக வழிபாடும் அதன் சிறப்புக்களும்"

வழங்குபவர் :- திரு வி. நவநீதன் அவர்கள்

(ஆசிரியர் - யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

**12.09.2019 வியாழக்கிழமை 14ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "வாழ்வின் மகத்துவம்"

வழங்குபவர் :- சிவஸ்ரீ கு. சுழிகலிங்கம் அவர்கள் (சப்பறம்)

(சைவப்புலவர்)

| | | | |
|---|---|---|---|
| 13.09.2019 | வெள்ளிக்கிழமை | தேர் | காலை 8.00 மணி |
| 14.09.2019 | சனிக்கிழமை | தீர்த்தம் | காலை 8.00 மணி |

*நாம் பிறருக்கு அளிக்கும் இன்பத்திலேயே நமக்கு மகிழ்ச்சி இருக்கிறது.*

# மயில்வாகனம் சுவாமிகளின் 34ஆவது குருபூசை தினம்

– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

ஆடி மாதம் 21ஆம் நாள் (06.08.2019) மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினம் ஆகும். 1940 அளவில் செல்வச்சந்நிதியின் தெற்குப் புறமாக நூறு மீற்றர் தூரத்திலுள்ள தென்னந்தோப்பின் நடுவே "ஆனந்தா ஆச்சிரமம்" எனும் குடிலமைத்து - நாளடைவில் சிறு மண்டபமாக்கி, சந்நிதியை நாடிவரும் அடியவர்க்கு அன்னப்பணி செய்து, தன் காலம் முழுவதையுமே அர்ப்பணித்துப் பணி புரிந்த மயில்வாகனம் சுவாமிகள் 1985இல் சமாதியடைந்தார்.

மயில்வாகனம் சுவாமிகளின் சீடராய் இருந்து ஆச்சிரம நிர்வாகம் அத்தனையையும் கற்றுத் தேறிய மோகனதாஸ் அவர்கள் "சந்நிதியான் ஆச்சிரமம்" எனும் பெயரில் திருமடம் அமைத்து தம் குரு பணியில் அன்னப்பணியினைத் தொடர்ந்து வருவது அனைவரும் அறிந்ததொன்று. அத்துடன் ஆண்டு தவறாமல் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டு வருவதுவும் வழமையானது.

இவ்வகையில் 06.08.2019 செவ்வாய் அன்று ஆச்சிரம மண்டபத்தில் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மயில்வாகனம் சுவாமிகளின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் வண்ணம் உரையாற்ற பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆசிரியர் துரை. கணேசமூர்த்தி அவர்களின் சிறப்புப் பேருரையுடன், ஆசிரியர் க. கைலைநாதன்,



திருமதி சசிலேகா ஜெயராஜன், இளைப்பாறிய அதிபர் திரு ஆ. சிவநாதன், ஆசிரியர் வி. நவநீதன், செல்வன் க. பிரணவன் ஆகியோரும் மயில்வாகனம் சுவாமிகளின் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர். அத்துடன் மயில்வாகனம் சுவாமிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பல்வேறு சமுதாயப் பணிகளிலும் ஈடுபட்டுவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகள் பற்றியும், அதனைச் செவ்வனே நெறிப்படுத்தி வருகின்ற மோகனதாஸ் சுவாமிகள் பற்றியும் தமதுரைகளில் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

செல்வி தி. ஜென்சிகா, சு. ஜனனி குழுவினரின் நடன நிகழ்வும், புன்னாலைக் கட்டுவன் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை விழாவிற்குச் சிறப்புச் சேர்த்தன.





மயில்வாகனம் சுவாமிகளின் 34ஆவது குருபூசை நிகழ்வில், (மேலே) திருமதி சசிலேகா ஜெயராஜன், செல்வன் க. பிரணவன் (கீழே) அதிபர் திரு ஆ. சிவநாதன், ஆசிரியர் க. கைலைநாதன் ஆகியோர் உரையாற்றியபோது...










மயில்வாகனம் சுவாமிகளின் 34ஆவது குருபூசை நிகழ்வில், (மேலே) ஆசிரியர் துரை. கணேசமூர்த்தி, ஆசிரியர் வி. நவநீதன் ஆகியோர் உரை நிகழ்த்தியபோது....
(கீழே) புன்னாலைக்கட்டுவன் நரசிங்க வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பஜனை நிகழ்வின்போது...





மயில்வாகனம் சுவாமிகளின் 34ஆவது குருபூசை நிகழ்வில், செல்வி தி. ஜென்சிகா, சு. ஜனனி
அவர்களின் கூட்டு நடனமும், தி. ஜென்சிகாவின் தனி நடன வேளையின்போதும் எடுக்கப்பட்டவை.





மயில்வாகனம் சுவாமிகளின் 34ஆவது குருபூசை நிகழ்வில், புன்னாலைக்கட்டுவன் நரசிங்க வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகளின்போது...





# சந்நிதி அப்பன்

– திரு செல்லத்துரை சுவாமிகள் –

சந்நிதி யப்பனைச் சண்முக நாதனைப்
பன்னிரு கையனைப் பணிவார்க்கிடரில்லை.

முன்னிய கருணை முகமா றுடையான்
என்னது நெஞ்சில் என்றும் உளானே.

பிறவிப் பிணியும் பிறபல பிணிகளும்
குறைந்து போகக் குமரன் அருள்கவே.

வறுமை சிறுமை யாவும் தேயுமே
பொறுமை யுடனே போற்றிடின் புனிதனை.

கங்கைச் சடையன் மைந்தனை என்றும்
எங்கை கூப்பி ஏத்திடல் இன்பமே.

திங்கட் சடையான் சிவகுமா ரன்தனை
பொங்கு தமிழால் போற்றிடல் இன்பமே.

வேலனைச் சிவனார் பாலனை வேண்டிடில்
ஞால மெங்கும் நமக்குற வாகுமே.

உள்ளத்தினுள்ளே ஒளிரும் ஒருவனை
கள்ள மனத்தவர் காணவும் மாட்டார்.

கும்பிடுவார் மனத்தானைக் கூர் வேலாயுதனை
நம்பின பேர்க்கென்றும் நடுக்க மில்லையே.

## கட்டுரையாளர் கவனத்திற்கு...

2015 முதல் 2018 வரை உள்ள காலப்பகுதியில் "ஞானச்சுடர்" ஆன்மீக மாதாந்த சஞ்சிகையில் கட்டுரைகள் - கவிதைகள் எழுதியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளது. எனவே, ஞானச்சுடர் மலருக்கான ஆக்கங்களை (2015 - 2018) வழங்கிய அனைவரும் தங்கள் தற்போதைய சரியான முகவரிகளுடன் - தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு விரைவில் கடிதம் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

# கதிர்காம யாத்திரை

## -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

– **செல்வி சி. நிலா** அவர்கள் –

2011ஆம் ஆண்டு வழமைபோல் கதிர்காம உற்சவ காலத்தில் சந்நிதியான் ஆச்சிரம பேருந்தில் அடியார்கள் 35பேரை அழைத்துச் சென்றவேளை நானும் அவர்களுள் ஒருவராகச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. கதிர்காமம் செல்வோரது பெயர்களைப் பதிவு செய்யும் நிகழ்வு இடம்பெற்ற வேளையில் சுவாமிகள் என்னைப் பார்த்து "நீயும் இம்முறை வருகிறாய்தானே" எனக் கேட்டபோது உடனே நானும் "ஆம்" என்று கூறிவிட்டேன். அதன்பின்தான் கதிர்காமம் செல்வதாயின் கொழும்பைக் கடந்தல்லவா செல்ல வேண்டும். ஒருநாள் பயணமல்லவா என பல எண்ணங்கள் என் மனதைப்போட்டு அலைக்கழித்துக்கொண்டிருந்தது.

ஏனெனில் யாழ்ப்பாணம் சென்று வருவதே என் உடல் நிலையைப் பொறுத்த அளவில் கடினமானதாகவே தோன்றும். போய் வரும் காலங்களில் தலைவலி, வாந்தி போன்ற பல இடர்பாடுகளை நான் அனுபவித்திருக்கின்றேன். அவ்வகையில் பிரயாணம் அதுவும் இவ்வகையான பேருந்துகளில் செல்வதென்றால் எனக்கு மிகவும் பயம். கூடிய வரை இவ்வகைப் பயணங்களை தவிர்த்தே வந்துள்ளேன். ஆனாலும் கதிர்காமம் செல்வதற்கு ஐயா கேட்டவுடன் "வருகின்றேன்" என்று சொல்லிவிட்டேன். எப்படியாவது செல்வதுதான் என்று முடிவெடுத்தேன். வீட்டில் உள்ளோருக்கும் ஐயா கதிர்காமம் வரும்படி கேட்டார். நானும் வருவதாகக் கூறிவிட்டேன் எனக் கூறினேன்.

அவர்களும் என்னைப் பார்த்து சும்மாவே யாழ்ப்பாணம் போய் வந்ததும் நீ படும்பாட்டை பார்க்க இயலாது. இதில் நீ கதிர்காமம் போகப் போகிறாயா? நீ போய் உன்னோடு வருபவர்களுக்கும் இடைஞ்சல் செய்யப் போகிறாய். என்று கூறியபொழுது நான் வருகின்றேன் என்று கூறிவிட்டேன். ஆகையால் இம்முறை ஐயா கேட்டுக்கொண்டதன் பிரகாரம் நானும் போகின்றேன் என்றதற்கிணங்க அவர்களது சம்மதமும் கிடைத்தது.

ஒரு சனிக்கிழமை எமது கதிர்காமப் பயணம் ஆரம்பமாயிற்று. காலை 7.00 மணிக்கு வீட்டின் அருகிலுள்ள விநாயகர் ஆலயத்தில் எனது வழிபாட்டை முடித்து ஆச்சிரமத்தை அடைந்தேன். யாத்திரைக்குரிய ஆயத்தங்களை மேற்பார்வை செய்துகொண்டிருந்த ஐயா என்னைக் கண்டதும் ரூபா இரண்டாயிரத்தை எனது கையில் தந்தார். உடனே எனக்கு வேண்டாம். என்னிடம் காசு இருக்கின்றது என்று கூறவும், பரவாயில்லை வைத்திரு என்றார். இதில் ஒன்றை நான் கூற வேண்டும். நான் ஆச்சிரம அச்சுக்கூடத்தில் 2004ஆம் ஆண்டு வேலைக்குச் சேர்ந்த பொழுது முதல் மாத சம்பளமாக ரூபா இரண்டாயிரம் தந்திருந்தார். அதேபோன்று கதிர்காமத்துக்கு முதன்முதலாகப் புறப்படும் போதும் ரூபா 2000ஐத் தந்திருந்தார். இது

எனக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. அதனைத் தொடர்ந்து யாத்திரையில் பங்கு பற்றும் அடியவர்கள் அனைவரையும் சந்நிதி யானின் பூசை வழிபாடுகளில் பங்குபற்றி வருமாறு ஆலயத்துக்கு அனுப்பி வைத்தார். அன்றைய பூசையை மேற்கொண்டிருந்த மகேந்திரன் ஐயர் (குட்டி ஐயர்) என்னையும் பார்த்து இம்முறை நீயும் போகின்றாயா? என்று வினவி வீபூதி போட்டு ஆசீர்வதித்தது இன்றும் என் மனக்கண்ணில் நிழலாடுகிறது. அதுவும் எனது முதல் பயணம். குட்டி ஐயா ஆலய முன்றலில் ஆசீர்வதித்து வீபூதி போட்டது எனக்கு சந்நிதியானே அருள் பாலித்து அனுமதி தந்தது போலிருந்தது. பூசை வழிபாடு முடிந்து ஆச்சிரமத்தை அடைந்ததும் எம் அனைவருக்கும் காலை உணவாக இடியப்பம் வழங்கப்பட்டது. என் பயணத்தில் எனக்கு ஏற்படும் உடல் உபாதை காரணமாக பயத்தில் ஒன்றும் சாப்பிடவில்லை. ஆனாலும் குட்டியம்மா விடவில்லை. (ஐயா வின் துணைவியார்) ஒன்றும் வராது என்று கூறி பிஸ்கற்றும் தேநீரும் தந்து என்னை சாப்பிடச் சொன்னார். நானும் அவ்வாறே செய்தேன். வழமைபோல் பாத யாத்திரை செல்லும் அடியார்களை வழியனுப்பும்போது ஆச்சிரம பூசை அறையில் பூசை வழிபாடு களை முடித்து வழி அனுப்புவதுபோல ஆச்சிர மத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளை முடித்து அனைவரும் எமக்குரிய பேருந்தில் ஏறுவதற்கு ஆயத்தமானோம். அனைவரும் பயணப் பைகளோடு பேருந்தில் ஏறியதும் எல்லோருக்கும் அவர்களது இருக்கைகளில் அமரச்செய்து, எனக்கும் என்னோடு வந்த பெண் பிள்ளைகளுக்கும் தனக்குப் பின் னால் உள்ள இருக்கையில் இருக்குமாறு கூறி பயப்படாமல் வா, ஒன்றும் வராது என்று சொன்னதும் எனது மனதில் இருந்த பயம் அகன்றுவிட்டது. எனக்கு ஐயா என்ன சொன்னாலும் முருகனின் அருள் வாக்காகவே எண்ணுவதுண்டு. அதுமட்டுமல்ல ஆச்சிரமத் துக்கு வந்து போகும் பபா சுவாமி என்ன சொன்னாலும் அதையும் அப்படித்தான் எண்ணுவதுண்டு.

எல்லோரும் இருக்கையில் அமர்ந்த வுடன் அரோஹரா ஒலியுடன் ஓட்டுனர் கிருபா அண்ணன் பேருந்தை சந்நிதி வாசலுக்கு முன்னால் நிறுத்தி தேங்காய் உடைத்து, சூடம் ஏற்றி வழிபாடு முடித்து ஆலய வீதியை வலம் வந்து ஆச்சிரம முன் வாயிலை அடைந் ததும் ஐயா அவர்கள் பேருந்தில் ஏறினார். ஆச்சிரமத்தில் உள்ளோர் அனைவரும் எம்மை வழியனுப்பி வைத்தமை காரணமாக எப்போது கதிர்காமம் போய்ச் சேருவோம் எனும் ஆர்வம் என்னுள் மேலோங்கியது.




ஐயா ஏறி பேருந்து புறப்பட்டதும், “எல்லோ ரும் நன்றாகக் கவனியுங்கள். நாம் அனை வரும் கதிர்காம தரிசனத்திற்காக செல்கின் றோம். இங்கிருந்து கதிர்காமம் போய் திரும்பி வரும்வரை நீங்கள் கொண்டுவந்த பணம் செல்லாது. சந்நிதியானின் காசு மட்டும்தான் செல்லும். வழியில் இடம்பெறும் சகலவித செயற்பாடுகளுக்கும் சந்நிதியான் போதுமான நிதியைத் தந்துள்ளான். எது உங்களுக்குத்

தேவையென்றாலும் அக் காரியங்கள் தங்கு தடையின்றி நிறைவேற்றப்படும் என்று கூறி யதுடன், நீங்கள் உங்கள் தேவைக்குப் பணம் கொண்டு வந்தால், கதிர்காமத்தில்



இருந்து திரும்பும்பொழுது வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குமாறு" கூறியதும் எல்லோருக் கும் ஆச்சரியம். என்ன இப்படி ஐயா கூறுகிறாரே! இதில் எவ்வளவு உண்மை இருக்கும் என்ற எண்ணமும் கூட. ஆனால் உண்மை இதுதான். ஐயா கதிர்காம யாத்திரைக்கு ஆயத்தப் படுத்தும்போது யாத்திரைக் குத் தேவையான பணம் ஏதோ ஒரு வகையில் ஐயாவின் கைக்கு வந்து சேரும். அதுவும் ஐயா எவ்வளவு வேணும் என்று கணக்குப் போடுகிறாரோ அந்தளவு பணம் அவரது கைக்கு வரும். அது என்னவிதத்தில் என்று சொல்லமுடியாது. கதிர்காமப் பயணத்திற்கு மட்டுமல்ல. ஆச்சிரமப் பணிகள் அனைத்திற் குமே இது பொருந்தும். இது சந்நிதி வேல வனுக்கும் ஐயாவுக்கும் இடையில் உள்ள உடன்படிக்கை என்றுதான் எண்ணத்தோன் றும். பல வருடகாலம் ஆச்சிரம செயற்பாட் டில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பதனால் என் கண் முன்னாலே பல விடயங்கள் நடை பெறுவதை நான் நன்கு உணர்ந்துள்ளேன்.

ஆச்சிரமத்திலிருந்து ஐயா வெளியே, அதாவது யாழ்ப்பாணத்தை விட்டு புறப்படும் போது வாகனத்தில் ஐயாவால் பாடப்பெற்ற அருணாசல அட்ஷரமணமாலை பாடல் "அருணாசல சிவ" ஒலியோடுதான் வாகனம் புறப்படும். அதன் அடிப்படையில் எமது பேருந்தில் அப்பாடல் ஒலியோடு நாம் அனை வரும் கப்பூது வெளியில் வரணிக்கும் இடைப் பட்ட பகுதியில் அமைந்துள்ள தில்லையம் பலப் பிள்ளையார் ஆலயத்தை அடைந்து



எமது வழிபாடுகளை ஆற்றுவதற்கு ஆயத்த மானோம்.

(தொடரும்...

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

**06.09.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஈழத்தில் முருக வழிபாடு"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[இணை. அதிபர்]

---

**13.09.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

தேர் உற்சவம்

---

**20.09.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" **(தொடர்)**

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**27.09.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி]

261ஆவது மலர்

பதிவு இல: QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

